

ஸ்ரீரங்கம் கோயில் தத்வம்.

ஆசிரியர்:

ஸ்தானீகம் எஸ். நரஸிம்மய்யங்கார்

1957

காபி ரைட்] * [விலை 12 அணா

1957 - ஏப்ரல் - வெளியீடு.

ஸ்தானீகம் நரஸிம்மய்யங்கார் ஜநக தம்பி ஸ்தலத்தார் ஸ்ரீ உத்தமநம்பி சட கோபாச்சாரியாரால் திருத்தமையனாரின் ஞாபகார்த்தமாக வெளியிடப்பட்டது.

ஸ்ரீ லக்ஷ்மி பிரிண்டிங் ஒர்க்ஸ், தேர்வீதி, சேலம்.



ஸ்தானிகம் S. நரசிம்மய்யங்கார்
[இந்நூலின் ஆசிரியர்]

ஸ்ரீரங்கம் தேவஸ்தானம் நிர்வாக அதிகாரி ஸ்ரீமான் D. மாதவம் பிள்ளையின் வேண்டுகோளுக்கு இணங்கி, ஸ்ரீரங்கம், திருவெள்ளறை, உறையூர், அன்பில், சமயபுரம் ஸந்நிதிகளின் விஷயமாய் சுருக்கமாக எழுதிக் கொடுத்து, அவைகள் ஸ்ரீரங்கம் தேவஸ்தானம் சார்பில் பிரசுரமாயிருக்கின்றன. ஷெடி நிர்வாக அதிகாரியும் உபசார பத்திரங்கள் வழங்கியுள்ளார்.

FORE WORD.

[By Sri S. Varadachariar, B. A., B. L.,
Retired, Federal Court Judge]

South India is pre-eminently the land of temples, some of them with a long history behind them and held in great veneration. The Deity whose **Sannidhya** (Presence) in these temples is sincerely believed in by countless devotees has been worshipped by some of the greatest saints the **Alwars** and **Nayanmars** who have poured forth their devotion in eloquent and inspiring songs which form part of the sacred literature of the land. Among the Vaishnavite shrines, the temple of Sri Ranganatha in Srirangam is held in great Veneration because of its special sanctity according to the belief of the **Alwars** and of the leading **Acharyas** of the Visishtadvaita School like Yamunacharya, Sri Ramanuja, Sri Parasara Bhatta Shree Vedanta Desika and Shree Manavalamamuni, to mention only a few. The worship in the Temple is regulated by one of the **Agamas** but special importance attaches to the method of worship in Sri Ranganatha's temple because its details are believed

to have been settled by one or other of these great Acharyas.

Even to-day in spite of the atmosphere of materialism and irreligion that envelop us, vast crowds of worshippers continue to worship at Srirangam, with the proverbial devotion of the land. It is however a regrettable fact that very few of these worshippers have equipped themselves with the knowledge obtainable from the Agama shastras as to the significance of the architecture of the Temple and of the mode of worship there including the celebration of the well known festivals. That such knowledge will make the worship more meaningful there can be no doubt; but it was not easy to acquire the knowledge so long as it could be obtained only by a study of the special Agama books in Sanskrit. A great deal of such useful information has been made available in Tamil in this booklet prepared by the late stanikam Narasimha Iyengar and published by his brother. The parallellism explained between the temple as the abode of god in the **Archa** form (image) on the one hand and the human body on the other, (often spoken in religious literature as the tabernacle of God) as the abode of God in the **Antaryami** (presence in the human heart) character is striking and instructive. Those who have

expressed appreciation of our Temple architecture only from the 'art' point of view seem scarcely to have been aware of this 'esoteric' significance of the different positions of a temple structure. The author has explained how the worship of the Archa was regarded as a training for the worship of the **Antaryami**. Detailed information has also been given as to the method of worship (**Pujakrama**) in Sri Ranganatha's temple and the reason for and the purpose of several important festivals (utsavams)

I commend this booklet to all Tamilians who may be interested in our system of Temple worship — even the critic may be the better for a study of the booklet. Like Tirupathi and Rameswaram, Srirangam is a shrine of an All India character and it attracts a large number of devout pilgrims from all parts of India. I therefore venture to suggest that those who have taken on themselves the responsibility of publishing this booklet will be rendering a great service to pilgrims from other parts of India, if they will, at no distant date, bring out a Hindi version of the booklet.

Mylapore,
Madras,
3—5—57

S. Varadachari.

முன்னுரை.

[ஸ்ரீ என். வரதாச்சாரியார், பி. ஏ., பி. எல்.,
பெடரல் கோர்டு மாஜி நீதிபதி.]

தென் இந்தியா பிரதானமாகக் கோவில்கள் நிறைந்த நாடு. அதிலும் சில கோவில்கள் பழம் பெருமை வாய்ந்ததும் போற்றிச் சேவிக்கப்பட்டு வருவதுமாகும். எண்ணற்ற பக்தர்களால் ஸாந்நித்தியம் வாய்ந்ததாகக் கருதப்படும் இக்கோவில்களில் எழுந்தருளியுள்ள மூர்த்திகள் பெருமை பெற்ற சாதுக்களாலும், ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் போற்றப்பட்டுள்ளன. இவர்கள் உள்ளம் நெகிழ்ந்துருகும் பாசுரங்கள் மூலம் பக்திரஸத்தைச் சொன்மாரி பொழிந்துள்ளனர். இப்பாசுரங்கள் நாட்டின் பக்தி இலக்கியமாக விளங்குகின்றன. ஆழ்வார்களும், யமுனாசாரியார், ஸ்ரீ ராமானுஜர், ஸ்ரீ பராசரபட்டர், ஸ்ரீ வேதாந்த தேசிகர், ஸ்ரீ மணவாள மாமுனிகள் போன்ற சில விசிஷ்டாத்வைதத்தைச் சேர்ந்த ஆசாரியர்களும் திருவரங்கத்தைப் புனிதமாகக் கருதினமையினால் வைஷ்ணவக் கோவில்களில் ஸ்ரீரங்கம் விசேஷமாகக் கொண்டாடப் பெற்று வருகிறது. ஆகமவிதிப்படி பூஜை நடைபெற்றாலும், ஸ்ரீரங்கநாதர் கோவிலில் வழிபடும் முறைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. ஏனெனில் இந்த வழிபாடு முறைகள் பெருமை வாய்ந்த ஆசாரிய சிரேஷ்டர்களால் வகுக்கப்பட்டதாகக் கருதப்படுவதேயாகும்.

லோகாயவாதமும், நாஸ்திகமும் நம்மைச் சூழ்ந்து வரும் இக்காலத்திலுங்கூட எண்ணற்ற பாகவத கோஷ்டிகள் ஸ்ரீரங்கத்தில் தொடர்ந்து சேவை செய்து வருகிறார்கள். ஆனால் இவர்களில் ஒரு சிலர்கூட ஆகம சாஸ்திரங்களில் கிடைக்கக்கூடிய அறிவைப் பெறாமலும், சிற்பங்களின் காரணங்களை அறியாமலும், சேவாக்கிரமங்களையும், உத்ஸவங்களின் அவசியத்தையும் உணராமலும் இருந்து வருவது வருந்தத்தக்கதொரு விஷயமாகும். இத்தகைய அறிவு பெறுவது கடவுள் சேவையை மிகவும் அர்த்த புஷ்டியுள்ளதாக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. ஆனால் ஸம்ஸ்கிருதத்திலுள்ள ஆகம சாஸ்திரங்களில் விசாரணை செய்து அறிவைப் பெறுவது அத்தனை சுலபமல்ல. பக்தர்களுக்கு உபயோகப்படக்கூடிய பலவிஷயங்கள் இந்தப் புத்தகத்தில் பெரும் அளவில் தமிழில் தரப்பட்டுள்ளன. இந்த நூல் காலஞ் சென்ற ஸ்தானீகம் S. நரஸிம்ம ஐயங்கார் அவர்களால் எழுதப் பெற்று அவருடைய சகோதரரால் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலில் எம்பெருமான் அர்ச்சா ரூபத்தில் தனக்கு இருப்பிடமாகக் கொண்டிருக்கும் கோயிலுக்கும், பக்தி பனுவல்களில் தேவலாயமாகக் கூறப்பெற்ற மானுஷ்ய சரீரத்திற்கும் ஒப்பிட்டுக்கூறி, அந்தர்யாமியாக எம்பெருமான் இருக்கும் நிலையை எடுத்துரைத்துள்ளது மிகவும் அற்புதமாகவும், தெளிவாகவும் இருக்கிறது. கலை நோக்கத்தோடு கோயிலின் சிற்பங்களை ரஸித்தவர்கள் கோயிலின் அமைப்பிலுள்ள பல்வேறு நிலைகளின் உண்மையை உணரவில்லை என்றே தோன்றுகிறது. அர்ச்சாரூப சேவை எங்ஙனம் அந்தர்யாமி சேவைக்குப் பயிற்சி அளிப்பதாகக் கருதப்படுகிறது என்பதை ஆசிரியர் விளக்கியுள்ளார்.

ஸ்ரீரங்கநாதரின் கோயில் பூஜாக்கிரமங்களும், பல முக்கியமான உத்ஸவங்களுக்குக் காரணங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

கோயில் வழிபாடு முறையில் நம்பிக்கையுள்ள எல்லாத் தமிழ் மக்களுக்கும் நான் இப்புத்தகத்தைச் சிலாகித்துக் கூறுகிறேன். இப்புத்தகத்தைப் படிப்பதினால் தர்க்கவாதியுங்கூட அறிவு வளர்ச்சியுற்றவனாவான். ராமேசுவரம், திருப்பதியைப் போல ஸ்ரீரங்கமும் ஒரு அகில இந்திய க்ஷேத்திரமாகும். இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் யாத்ரிகர்கள் இக்கோயிலின்பால் ஈர்க்கப்படுகின்றனர். ஆதலால் ஒன்று கூற முற்படுகிறேன். அதாவது இந்தப் புத்தகத்தை வெளியிடுவதற்கு பொறுப்பேற்றவர்கள் இப்புத்தகத்தைக் கூடிய சீக்கிரம் இந்தியில் வெளியிடின் இந்தியாவின் ஏனைய பாகங்களிலிருந்து வரும் யாத்ரிகர்களுக்கு ஒரு சேவையாற்றியதாகும் என்பதே.

மைலாப்பூர்,
சென்னை,
3—5—57

எஸ். வரதாச்சாரி.

அட்டவணை.

		பக்கம்
1.	பாரத நாட்டின் பெருமை	1
2.	மானிடப் பிறவியின் அருமையும்-பயனும்	4
3.	எம்பெருமானுடைய நிலைகள்	5
4.	ஆலயப் பிரிவு	6
5.	தமிழ் கலைஞர்களின் கொள்கை	8
6.	பகவத் தரிசனத்தின் அவசியம்	8
7.	ஜீவாத்மாக்களின் கதிகள்	10
8.	ஸ்ரீரங்கம் கோயிலின் உற்பத்தி	11
9.	ஆலய நிர்மாண வகை	12
10.	க்ஷேத்ர மென்பதின் தத்வம்	12
11.	முக்தி க்ஷேத்ரங்கள்	13
12.	ஆதார க்ஷேத்ரங்கள்	13
13.	ஸ்வயம் வியக்த க்ஷேத்ரங்கள்	14
14.	தைவத க்ஷேத்ரங்கள்	14
15.	ஆர்ஷ க்ஷேத்ரங்கள்	14
16.	பாடல் பெற்ற ஸ்தலங்கள்	15
17.	ஸ்ரீரங்கம்	15
18.	ஸ்ரீரங்கம் தலைமை பெற்ற காரணம்	17
19.	ஸ்ரீரங்கநாதன்	18
20.	ஸ்ரீரங்கநாதனுடைய— திருவரங்கத்தினுடைய வைபவம்	19
21.	தமிழ்க் கலைஞர்களின் தெளிவு	21
22.	ஸ்ரீரங்கநாதனுக்கும், மற்ற திவ்ய தேசத்து எம்பெருமான்களுக்குமுள்ள வித்தியாசம்	22

23. ஸ்ரீரங்கம் கோயிலின் பூஜாக்ரமங்களும் பத்ததிகளும் 24
24. தமிழ்க் கலையின் பெருமை 25
25. வட மொழி தென் மொழி மறைகள் 26
26. ராமாநுஜரின் கட்டளை 27
27. ஸ்ரீரங்கம் கோயில் நிர்மாண தத்வம் 27
28. ஐந்தாவது ப்ராகாரவாசல்-நான்முகம் கோபுரம் 31
29. அனுமார் கோயில் 34
30. சொக்கப்பனை கோபுர வாசல் (ஸ்வாதிஷ்டான சக்ரஸ்தானம்) 35
31. கருட மண்டபம் 35
32. ஆரியபடாள் வாசல் (மணிபூரக சக்ர ஸ்தானமாகிய நாபி ஸ்தானம்) 36
33. நாழிகை கேட்டான் வாசல் (அநாஹத சக்ர ஸ்தானமாகிய ஹ்ருதய ஸ்தானம்) 36
34. த்வஜஸ்தம்பம் 37
35. பலிபீடம் 37
36. த்வஜஸ்தம்பத்துக்கு எதிரில் கம்பத்தின் மேலுள்ள அனுமார் 38
37. ஜய விஜயாள் வாசல் (விசுத்தி சக்ரம் என்னும் கண்ட ஸ்தானம்) 38
38. திருவணுக்கன் திருவாசல் (ஆக்ஞா சக்ரம் என்னும் கண்ட ஸ்தானம்) 39
39 கர்ப்பக்ருஹம் 41
40. ஸ்ரீரங்கவிமானம் 43
41. பஞ்ச ஸம்ஸ்காரங்கள் 51
42. திருவாசி 52
43. கதவுகள்-திரை 53
44. திருமடைப்பள்ளி 53
45. வாத்தியங்கள் 53

46.	ஸ்ரீரங்க நாச்சியார் ஸந்நிதி	53
47.	ஐந்து குழி மூன்று வாசல்	54
48.	சந்திரபுஷ்கரணி	55
49.	உத்ஸவ தத்வம்	55
50.	வடமொழி வேதபாராயணம்	56
51.	தென்மொழி வேதபாராயண உற்பத்தி-திருமங்கை மன்னன் வைபவம்	56
52.	கார்த்திகை தீபம்	58
53.	திருமொழி திருவாய் மொழித்திருநாள் உற்பத்தி	62
54.	திருநெடுந்தாண்டகம்	64
55.	பகல்பத்து	65
56.	படியேற்றத்தின் தத்வம்	69
57.	மோஹினி அலங்காரம்	73
58.	இராப்பத்து என்னும் திருவாய்மொழித் திருநாள்	73
59.	இராப்பத்து-7-ம் திருநாள்-திருக்கைத்தல ஸேவை	78
60.	வேடுபரி உத்ஸவம்	78
61.	ஆழ்வார் மோக்ஷம்	79
62.	இயல்பா	80
63.	முத்தங்கி ஸேவை	81
64.	பிரம்மோத்ஸவம்	81
65.	அங்குரார்ப்பணம்	81
66.	யாகசாலை	82
67.	த்வஜாரோஹணம்	82
68.	தேவதாஹ்வாநம்	83
69.	பலி ஸாதித்தல்	83
70.	ஸ்ரீரங்கம் பிரும்மோத்ஸவங்கள்	83
71.	வாஹனங்கள்-சூர்யப்ரபை	84
72.	ஹம்ஸம்	84

73.	ஸிம்ஹம்	84
74.	யாளி	85
75.	சந்திரப்ரபை	85
76.	கருட வாஹநம்	85
77.	சேஷ வாஹநம்	85
78.	ஹநுமந் வாஹநம்	85
79.	கல்பக விருக்ஷம்	86
80.	யானை வாஹநம்	86
81.	குதிரை வாஹநம்	86
82.	ரங்கவிலாஸம் திருவந்திக்காப்பு	86
83.	திருத்தேர்	87
84.	தீர்த்தவாரி	87
85.	ஸப்தாவரணம்	88

ஓர் விண்ணப்பம்.

இந்நூலில் கண்ட விஷயங்கள் யாவும் அடியேன் ஜனகதனயனூர் ஸ்தானீகம் S. நரஸிம்மய்யங்காரால் எழுதப்பட்டு, அதை பிரசுரிக்குமுன் அவர் ஆசார்யன் திருவடிகளை அடைந்தார். அவர் ஞாபகார்த்தமாக இதைப் பிரசுரம் செய்ய எண்ணினேன். ஆனால், இதில் கண்ட விஷயங்கள் பொது ஜனங்கள் ஆதரவைப் பெறுமோ என்று சற்றுத் தயங்கி, இப்பொழுது பரமஹம்ஸேத்யாதி ஸ்ரீ திருவேங்கட ராமானுஜ ஜீயர் ஸ்வாமியாய் திருக்குறுங்குடியில் எழுந்தருளியிருக்கும் (ஏற்கனவே ஸ்ரீமான் ஸ்ரீ. உ. வே. வித்வான் ஈச்சம்பாடி திருமலை ஸ்ரீநிவாஸ ராகவாச்சாரியார்) ஸ்வாமியிடமும், ஸ்ரீமான் ஸ்ரீ.உ.வே. வித்வான் ஸ்ரீரங்கம் கோவிந்தாச்சாரியார் ஸ்வாமியிடமும் காண்பித்தேன். ஷியார்கள் தற்காலம் கோயிலில் நடக்கும் அனேகம் பத்ததிகள், ஆழ்வார்கள் பாசுரங்களின் கருத்துக்களை வெளிப்படுத்த ஏற்பட்டிருந்தபோதிலும், அவைகள் காலக்ரமத்தில் உருமாறி இருப்பதை இந்நூல் நன்றாய் விளக்கச் செய்வதால், அவசியம் பிரசுரம் பண்ணவேணும் என்று அபிப்ராயப்பட்டார்கள். ஸ்ரீமான் ஸ்ரீ. உ. வே. ஈச்சம்பாடி ஸ்வாமியும் ஒரு விரிவான முகவுரையும் அனுப்பிக் கொடுத்தார். ஆனால், அதை தற்சமயம் பிரசுரம் செய்ய சௌகரியப்படாததால், பின்னால் உபயோகப்படுத்திக் கொள்ளப்படும். ஸ்ரீமான் ஸ்ரீ. உ. வே. ஸாஹித்ய சிரோன்மணி ஸ்தானீகம் பார்த்தசாரதி அய்யங்காரிடமும் காண்பிக்கப்பட்டது.

அவரும் அதே அபிப்ராயங்கொண்டு, இந்நூலில் உள்ள உத்ஸவ விவரங்களை தம்முடைய தேவஸ்தான பத்திரிகையில் பிரசுரித்தார். அதைப் படித்த சிலர், "விஷயங்கள் ரொம்பவும் நன்றாயிருக்கின்றன. பூராவையும் பிரசுரப்படுத்த ஏற்பாடு செய்யுங்கள்" என்று எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.

இதை அச்சிட சேலம் பிரஸ் ஒன்றில் கொடுத்தேன். மனிதக் கட்டிற்கு அடங்காத சில காரணங்களால் ரொம்பவும் தயக்கம் ஏற்பட்டது. புரூப்கூட ஒத்துப் பார்க்க முடியவில்லை. பிழைகள் இருப்பினும் ஹம்சம் நீருடன் கலந்த பாலின் நீரை ஒதுக்கி பாலைப்பருகுவது போல் பிழைகளை ஒதுக்கி விஷயங்களை க்ரஹிக்க வேணும்.

இதில் கண்ட விஷயங்கள் ஆழ்வார்கள் பாசுரங்களின் உட்கருத்துக்களை நடப்பிலிருக்கும் (சில உருமாறிப்போன) பத்ததிகள் மூலம் வெளிப்படுத்தும் விஷயத்திலும், பாத்திரர்களாய் நிர்ணயித்து இருக்கும் விஷயத்திலும் ஏதாவது கருத்து வேற்றுமை இருக்கலாம். அதை எவ்வளவு மட்டும் ஏற்கலாமென்று தோன்றுகிறதோ அதுவரையில் ஏற்று, பாக்கியை விட்டுவிடுகிறது.

ஸ்ரீரங்கம்;
11-4-57

ஸ்ரீ உ. சடகோபாச்சாரியார்.

ஓம்
ஸ்ரீரங்க நாயகீஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரம்மணே நம:
ஸ்ரீ கோதா தேவ்யை நம:
ஸ்ரீ விஷ்ணு சித்தாய நம:
அஸ்மத் தேசிகாய நம:

காவேரீ விரஜா ஸேயம் வைகுண்டம் ரங்கமந்திரம்
ஸ வாஸுதேவோ ரங்கேச: ப்ரத்யக்ஷம் பரமம்பதம்

விமானம் ப்ரணவாகாரம் வேதச்ருங்கம் மஹாத்புதம்
ஸ்ரீரங்கசாயீ பகவாந் ப்ரணவார்த்த ப்ரகாசக:

அநந்தாநந்த சயந! புராண புருஷோத்தம!
ரங்கநாத! ஜகந்நாத! நாத! துப்யம் நமோ நம:

கோலச்சுரி சங்கை மாயன் செவ்வாயின் குணம் வினவும்
சீலத்தினன் தென்திரு மல்லிநாடி செழுங்குழல்மேல்
மாலைத்தொடை தென்னரங்கர்க்கீயும் மதிப்புடையச்
சோலைக் கிளியவள் தூய நற்பாதம் துணை நமக்கே.

பணவாள ராம்பள்ளியிற் பங்கயக்கட் டுயிலவனி
உணவாளற் கிடளித்தான் உத்தமன் நமக்கருணமெய்க்
குணவாளன் விளக்குமறை கூறுமற் தமிழ்விளக்கும்
மணவாள மாமுனிவன் மலரடி சந்ததம் பணிவாம்

1. பரத நாட்டின் பெருமை.

ஸ்ரீய: பதியான ஸர்வேச்வரனுடைய லீலா விபூதியாப் ப்ரக்ருதி மண்டலத்திற்குள்பட்ட லோகங்களில் ஒன்றாகிய பூலோகத்தின் ஒன்பதாவது கண்டமாகிய பாரதவர்ஷம் என்னும் இந்திய நாடானது,

காயந்தி தேவா: கில கீதகாநி
தந்யாஸ்து யே பாரதபூமிபாகே,
ஸ்வர்க்கா பவர்காஸ்பத மார்க்கபூதே,
பவந்தி பூய: புருஷாஸ்ஸுரத்வாத்,

அதாவது ஸ்வர்க்கமென்ன மோக்ஷமென்ன இதுகளாகிற ஸ்தானத்திற்கு மார்க்கமாக ஆகின்ற பரத கண்டத்தி

லே யாதொரு புருஷர்கள் தேவத்வத்தை விட்டு மறுபடி உண்டாகிறார்களோ அவர்கள் பாக்யசாலிகள் என்று தேவர்கள் கானம் பண்ணிப் புகழ்ந்து பேசும்படியான பெருமையுடன் கூடியிருக்கிறது; ஏனெனில் மற்ற கண்டங்களில் அநுபவிக்க வேண்டிய போக பலன்களுக்கும் ஸ்வர்க்க மோக்ஷரூபமான பலன்களுக்கும் ஸாதநாநுஷ்டானம் பண்ண வேண்டிய இடமாயும் 'ஜோதிஷ்டோமாதி' யாக க்ருத்யங்களைச் செய்ய அனுகூலமான க்ஷேத்ரங்களும் புண்ய நதிகளும் அமைந்துள்ளதாயுமிருக்கிறது. ஆதலின்,

'உபாப்யாமேவ பக்ஷாப்யாம் யதா கே பக்ஷிணாம் கதி:
ததைவ ஜ்ஞாநகர்மப்யாம் ப்ராப்யதே புருஷோத்தம:'

என்கிறபடி பகவத் ப்ராப்திக்கு ஹேதுவான ஞானத்தையும் அதற்கு ப்ரயோஜனமான கர்மத்தையும் உபதேசிக்கும் 'பித்ருதேவ மனுஷ்யாணாம் வேதச்சக்ஷு: ஸநாதநம்' என்று சொல்லுகிறபடி வேதமாகிய கண் ப்ரகாசித்துக் கொண்டிருப்பது நம் இந்தியாவிலேதான்.

'ஜ்ஞாநாந் மோக்ஷ:' என்றும் 'ஸத்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞாநம்' என்றும் 'ஆஹார சுத்தௌ ஸத்வசுத்தி:' என்றும் சொல்லுகிறபடி மோக்ஷத்திற்கு ஹேதுவான ஞானத்தை உண்டாக்கும் ஆஹாரநியதி முதலான முறைகளை போதிக்கும் ஸ்மிருதிகள் இந்தியாவிலேயே அநுஷ்டானத்திலிருந்து வருகின்றன.

பரமாத்மஸ்வரூபத்தையும், ஜீவாத்மஸ்வரூபத்தையும், ஜீவாத்மா பரமாத்மாவை அடைவதற்கு ஏற்ற உபாய ஸ்வரூபத்தையும், அடைவதினால் ஏற்படும் பல ஸ்வரூபத்தையும், அடைவதற்கு விரோதமாயிருப்பதின் ஸ்வரூபத்தையும், அறியும் ஞானத்தை போதிக்கும் வேத இதிஹாஸ புராணங்களும், அவைகளை நன்குணர்ந்து உபதேசிக்கும் மஹாத்மாக்களும், மஹரிஷிகளும் நிறைந்துள்ளது இந்திய நாடே.

வேத சாஸ்திரங்களின் அநுஷ்டானக்குறைவால் தர்மம் குறைந்து அதர்மம் மேலிட்ட போது 'தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே' என்று பகவான் அருளிச் செய்தபடி அவதாரங்களைச் செய்து தர்மத்தை உபதேசம்

பண்ணியும், அனுஷ்டித்துக்காட்டியும், நிலை நிறுத்தும் பாக்கியம் இந்தியாவுக்கே ஏற்பட்டது.

தவிர, பாரத பூமியிலிருந்து வைகுண்டத்திற்குச் செல்லும் முமுக்ஷுக்களையே அங்குள்ள நித்ய முக்தர்களும் பகவானும் ஆதரிப்பதாகச் சொல்லுகிறபடியால் பாரத வர்ஷத்துக்கு ஒரு தனி மஹத்வம் ஏற்பட்டது.

அவதாரங்களைச் செய்து தான் அனுஷ்டித்துக் காட்டிய மோக்ஷ தர்மங்களை அனுஷ்டிக்காமல் மானிடர்கள் ஸம்ஸாரத்திலேயே ஈடுபட்டிருப்பதைக் கண்ட பகவான் வைகுண்டத்திலுள்ள நித்யஸூரிகளை,

'கலௌ கலு பவிஷ்யந்தி நாராயண பராயணா:
க்வசித் க்வசித் மஹாபாகா த்ரமிடேஷு ச பூரிச:'

என்றும்,

'தாம்ரபர்ணீ நதீ யத்ர க்ருதமாலா பயஸ்விநீ:
காவேரீ ச மஹாபாகா ப்ரதீசீ ச ஸரஸ்வதீ:'

என்கிறபடி த்ராவிட தேசமாகிய தமிழ் நாட்டில் பிறந்து பக்திமார்க்கத்தை அனுஷ்டித்துக் காட்டி அதைப் பின்பற்றியவர்கள் பகவத் ஸாக்ஷாத்காரமாகிய தரிசனத்தைப் பெறச் செய்து அதையே ஒரு சம்பிரதாயமாக வெளியிட்டு அச்சம்பிரதாயப்படியாக ஸம்ஸாரிகள் முமுக்ஷுக்களாகத் திருந்தும்படி செய்துவர நியமித்தருளினான். அந்த நியமனத்தின்படி அவர்களும் அம்சாவதார புருஷர்களாயும், ஆழ்வார்களாயும், ஆசார்யர்களாயும், அவதரித்தது இந்தியாவின் தென்பாகமாகிய தமிழ்நாட்டிலேயே.

பகவான் தமது இச்சையாலும், தமது தரிசனத்தைப் பெற தேவர்கள், ரிஷிகள் முதலானவர்களுடைய பிரார்த்தனையாலும் அவ்வவ்விடங்களில் கோயில் கொண்டருளி அவைகளை புண்ய ஸ்தலங்களாக்கியும், அங்குள்ள அர்ச்சா விக்ரஹங்களில் ஆவிர்ப்பவித்து நின்றும், அவைகளை திவ்ய தேசங்களென்றும் விளங்கும்படி செய்ததும் தமிழ் நாட்டிலேயே.

மேலும், வைகுண்டமாகிய மோக்ஷ ஸ்தானத்திற்குப் போகும் மார்க்கமாகிய அர்ச்சிராதிகதியைக் காட்டிக்

கொடுத்து, அதை அநுஷ்டிக்கச் செய்ய வல்லவர்களும் ஸாதனங்களும் உள்ளது தமிழ்நாட்டிலேதான்.

ஆனபடியால், முதலாழ்வார்களில் ஒருவராகிய பேயாழ்வார் 'கனிசாயக்கன் றெறிந்த தோளான் கனைகழலே காண்பதற்கு நன்கறிந்த நாவலஞ் சூழ்நாடு' என்றார். பெரியாழ்வாரும் நமது நாட்டை 'நாவலம் பெரிய தீவென்றும்,'—அதில் பிறந்து அதில் அவதரித்த பகவானுடைய அவதார சேஷ்டிதங்களை அனுபவிக்கும் ஞானத்தோடு கூடிய வாழ்வே 'வாழ்வு' என்றும் அருளிச் செய்தார்.

தற்காலம் நமது தமிழ் நாட்டில் ஒரு யோக புருஷராய் விளங்கி வந்த அரவிந்த கோஷ் தாம் வெளியிட்டிருக்கும் "யோகமும் அதன் கருத்தும்" என்னும் புஸ்தகத்தில் இந்த சதுர்யுகத்தில் ஞானோதயத்திற்கும் அதன் அபிவிருத்தி முதலானதுகளுக்கும் உரித்தானதாக நம் இந்தியாவையே தேர்ந்தெடுக்கப்பட்டதாய் எழுதியுள்ளார்.

2. மானிடப்பிறவியின் அருமையும் பயனும்.

'துர்லபோ மாநுஷோ தேஹ:; தேஹினாம் க்ஷணபங்குர:' என்கிறபடியும் 'மின்னின்னிலையில மன்னுயிராக்கைகள்' என்கிறபடியும், நிமிஷத்தில் நசிக்கக்கூடியதான மானிட சரீரமானது கிடைப்பது அரியதாயிருக்கிறது. 'அத்ர ஜந்ம ஸஹஸ்ராணாம் ஸஹஸ்ரைரபி ஸத்தம; கதாசில் லபதே ஜந்துர் மாநுஷ்யம் புண்ய ஸஞ்சயாத்' என்றபடி ஒரு ஜீவன் அநேகமாயிரம் ஜன்மங்களின் புண்ய ஆதிக்கத்தால் மனுஷ்ய ஜன்மத்தை அடைகிறான். 'அரிது அரிது மானிடராதலரிது' என்றார் ஒரு தமிழரும். மோக்ஷ ஸாதன ஹேதுக்களோடு கூடின இந்தியாவில் மனிதனாய் பிறப்பது அரிதினும் அரிது.

மஹாப்பிரளயத்திற்குப் பிறகு ஸ்ருஷ்ட்யாரம்பம்வரை காரணகளேபரங்களின்றி ப்ருகிருதியில் ஆழ்ந்து கிடக்கும் ஜீவர்கள் அதில் நின்றும் வெளிப்பட்டு நற்கதியை அடையும் பொருட்டு 'காரணகளேபரைர் கடயிதும் தயமான மநா:' என்றபடி தமது பரம க்ருபையால் அவர்களுக்கு சரீராதிகளை பகவான் அளித்தான்.

திருவரங்கத்தமுதனாரும் இராமானுச நூற்றந்தாதியில் "சிந்தையினோடு கரணங்கள் யாவும் சிதைந்து முன்னாள் அந்தமுற்றாழ்ந்தது கண்டு அவை என்றனக்கு அன்றருளால் தந்த வரங்கனும்" என்று அருளிச் செய்தார். திருமழிசைப் பிரானும் தமது நான்முகன் திருவந்தாதியில் "பல்லுயிர்க்கும் ஆக்கை கொடுத்தளித்த கோனே! குணப்பரனே!' என்று போற்றினார்.

பகவான் பரமகிருபையோடு அளித்த சரீரத்தை 'விசித்ரா தேஹஸம்பத்தி: ஈச்வராய நிவேதிதும்' என்றபடி அவன் விஷயத்திலேயே ஈடுபடுத்தி, அவனுடைய கைங்கர்யத்தைச் செய்து, அவனருளால் பரமபதத்தை அடைந்து நித்யானந்தத்தை அனுபவிப்பதே பகவானுடைய கிருபையின் பிரயோஜனமாயிருக்கிறது. மேலே சொன்னபடி கைங்கர்யத்தைச் செய்வது பகவானுடைய எந்த நிலையில் சாத்தியமென்றால்:—

3. எம்பெருமானுடைய நிலைகள்

பகவானுடைய நிலைகள் பர, வியூக, விபவ, அந்தர்யாமி, அர்ச்சை என்று சொல்லப்படுகின்றன. அவற்றுள் பரத்வ நிலை பிரகிருதி மண்டலத்துக்கு அப்பாலுள்ள வைகுண்டத்திலிருப்பதால் கிட்ட முடியாததாயிருக்கிறது. அதற்கடுத்த வியூக நிலை திருப்பாற் கடலிலுள்ளது. ஆழ்வார் 'பாலாழி நீ கிடக்கும் பண்பை யாம் கேட்டேயும்' என்ற சொன்னபடி அது காதால் கேட்டிருக்குமித்தனை யொழிய, சென்று காண இயலாததாயிருக்கிறது. விபவநிலை என்பது பெருக்காறு போல் பகவான் அவதரித்த காலத்தில் இருந்தவர்களுக்கே அனுபவிக்கலாம்படியாயும் பிற்காலத்தவர்க்கு கிட்டாததுமாயிருந்தது. அதற்கடுத்த அந்தர்யாமி நிலை, தோண்டினாலல்லது குடிக்க நீர் கிடையாத பூமிக்குள்ளிருக்கும் ஜலம் போலிருக்கிறது. ஏனெனில், பகவான் ஒவ்வொரு மானிடருடைய ஹிருதயத்திலும் கண்ணுக்கு புலப்படாதபடியிருக்கிறான். அந்நிலையில் அவனை அஷ்டாங்க யோகத்தாலல்லது காணமுடியாது. ஆவபடியால் அதுவும் எளிதில் கிட்டக்கூடியதாயில்லை. கடைசிநிலையான அர்ச்சை, தாகவிடாய் கொண்டவன் எளிதில் நீர் பருகலாம்படி ஆற்றில் தேங்கின மடுக்கள் போலிருக்கிறபடியால், சேரவில்

களில் எல்லாருடைய கண்ணுக்கும் இலக்காகும்படி 'பின்னானார் வணங்கும் சோதியாய்—கருத்துக்கு நன்று மெளியனாய்' மண்மேல் ஞாலத்துயிர்க்கெல்லாம் அருள் செய்பவனாயிருக்கும் அர்ச்சாவதார நிலையே எல்லோராலும் கிட்டி தங்கள் சரீரத்தை ஈடுபடுத்தி கைங்கர்யத்தைச் செய்ய எளிதாயிருக்கும் நிலையாயுள்ளது.

ஆனபடியால்தான் '[illegible] பூர்ண:' என்னுமாப்போலே அர்ச்சாவதாரமும் பூர்ணம் என்கிறதும் அக்குன்ன குணபூர்த்தியைக் கண்டே ஆழ்வார்களும் ப்ரபத்தி பண்ணினதும் அர்ச்சாவதாரத்திலே—என்று பிள்ளைலோகாசாரியார் தமது ஸ்ரீவசன பூஷண க்ரந்தத்தில் அருளிச்செய்தார். தமிழில் ஆத்திச்சூடி முதலான நூல்களை இயற்றியுள்ள ஔவையாரும் அர்ச்சையின் பெருமையை அதிசயமாக 'ஆலயந் தொழுவது சாலவும் நன்று' என்று கூறினார்.

4. ஆலயப் பிரிவு

ஆலயமும்—ஸாத்யாலயம், ஸாதனாலயம் என்று இரு வகையாகச் சொல்லப்படுகிறது. இவற்றுள், ஸாதனாலயம் என்பது பகவான் தமது இச்சையாலேயோ அல்லது பக்தர்களுடைய பிரார்த்தனைக்கிணங்கியோ ஒரு பிம்பத்தில் ஆவிர்ப்பவித்து நின்று அருள் செய்யுமிடம். ஸாத்யாலயமென்பது பகவான் தமது அடியார்களுடைய சரீரத்தையே தமக்கு இருப்பிடமாகக்கொண்டு பிரகாசிக்குமிடம். ஸாதனாலயம் பஹிர்யாகம் செய்யுமிடம் என்று சொல்லப்படும் புறப்பூசை செய்யுமிடம். ஸாத்யாலயம் அந்தர்யாகம் என்னும் அகப்பூசை செய்யுமிடம். ஸாத்யாலய பூசையாகிய அகப்பூசையை எப்படிச் செய்வதென்று யோகிகளுக்குக் காட்டிக் கொடுக்க ஸாதனமாயிருத்தலால் கோயில்களுக்கு ஸாதனாலயம் என்னும் பெயர் ஏற்பட்டது. நம் தமிழ் நாட்டிலுள்ள கோயில்கள் அடியார்களினுடைய சரீரத்தின் தத்துவத்தை எடுத்துக்காட்டும்படியாயும், அந்த சரீரத்தில் எந்த இடத்தில் பகவான் அமர்ந்திருக்கிறான் என்பதை எளிதில் விளங்கும்படியாயும் அமைக்கப்பட்டிருக்கின்றன. எப்படியெனில்:— கோவில்களின் உறுப்புகளாக ஏற்பட்டிருக்கிற கர்ப்பகிருஹம் என்னும் மூலஸ்தானமானது அடியாருடைய

சிரஸாகவும், அந்தராளம்-முகமாகவும், சுகநாசி-கண்டமாகவும், அர்த்த மண்டபம்-தோள்களாகவும், மஹாமண்டபம்-குக்ஷியாகவும், ப்ராகாரம்-கால்களாகவும், கோபுரம்-பாதமாகவும் விளங்கும்படி அமைக்கப்பட்டிருப்பதாய் சொல்லப்படுகிறது. தேக வடிவாக அமைக்கப்படும் ஆலயத்திலுள்ள கர்ப்பகிருஹம், அர்த்தமண்டபம், மஹாமண்டபம், ஸ்நான மண்டபம், அலங்கார மண்டபம், ஸபாமண்டபம் என்னும் ஆறு மண்டபங்களால் தேஹாலயத்திலுள்ள மூலாதாரம், ஸ்வாதிஷ்டானம், மணிபூரகம், அனாஹதம், விசுத்தி, ஆஜ்ஞை என்னும் ஆறு ஆதாரங்களும் அறிவிக்கப்படுவதாய் சொல்லப்படுகிறது. ஆயிரக்கால் மண்டபம் ஆயிரம் இதழ்களையுடைய சிர:பத்மத்தையும், சந்திரபுஷ்கரிணி அமிருத தாரையுள்ள இடத்தையும் குறிப்பிடுகிறதென்று பெரியோர்கள் சொல்லுகிறார்கள்.

ஸாதனாலயத்தில் தரிசித்து அர்ச்சித்து வந்தே, ஸாத்யாலயத்தில் தரிசித்து அர்ச்சிக்கப் பழகவேண்டும். ஸாத்யம் கைபுகுரப் புகுர ஸாதனத்தில் ஆதரம் குறைந்து கொண்டே வரும். இதை பிள்ளைலோகாசாரியார் தமது ஸ்ரீவசன பூஷண க்ரந்தத்தில் அடியில் கண்டபடி எடுத்துரைக்கிறார். "திருமாலிருஞ்சோலை மலையே-என்கிறபடியே உகந்தருளின நிலங்களெல்லாவற்றிலும் பண்ணும் விருப்பத்தை பகவான் இவனுடைய சரீர ஏகதேசத்திலே பண்ணும். அங்குத்தை வாஸம் ஸாதனம். இங்குத்தை வாஸம் ஸாத்யம். 'கல்லும் கனைகடலும்' என்கிறபடியே இது ஸித்தித்தால் அவற்றில் ஆதரம் மட்டமாயிருக்கும்."

தமிழ்நாட்டினரான ஆழ்வார்களும், தமிழ்க் கவிஞர்கள் என்று போற்றப்படும் நாயன்மார்களும் பகவானை ஸாத்யமாகிய தங்கள் சரீரத்தில் கண்டு தரிசிக்கவே மிகவும் பாடுபட்டதாக அவர்களுடைய ப்ரபந்தங்களிலிருந்து விளங்குகின்றது. ஆனபடியால் இந்தியாவின் மற்ற பாகங்களைக் காட்டிலும் அதன் தென் பாகமாகிய தமிழ்நாட்டில் ஸாத்யாலயத்தின் தத்துவத்தை லோகத்தாருக்கு கற்பிக்க வேண்டி எண்ணிறந்த ஸாதனாலயங்களான கோவில்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மானிட சரீரமும் ஒரு ஸாத்யாலயமாயிருக்கிறது.

5. தமிழ் கலைஞர்களின் கொள்கை

தமிழ்ச்செல்வியாகிய ஔவையார் "அன்னத்தாலாய வுடம்பின் பயனெல்லா முன்னோனைக் காட்டிவிடும்" என்றும், "உடம்பினைப்பெற்ற பயனாவதெல்லாம் உடம்பினிலுத்தமனைக் காண்" என்றும் சொன்னார். ஸாத்யாலயமாகிய தேகாலயம் ஈசுவரனைக் காட்டிக் கொடுக்குமென்பதையும், அதில் அவனைக் காணவேண்டுமென்பதையும், அதுவே தமிழர்களின் கொள்கை யென்பதையும் ஔவையாரின் வாக்கு அறிவிக்கிறது. இந்தக் கொள்கையின்படியே தமிழ்நாட்டினர் தங்கள் தேகாலயத்தில் பகவானைக்கண்டு தரிசிக்கும்பொருட்டு அந்த வழியைக் காட்டிக் கொடுக்கும் ஸாதனாலயங்கள் தமிழ்நாட்டு அரசர்களால் கட்டப்பட்டு தொழப்பட்டும் வந்ததாக ஆழ்வார் பாசுரங்களிலிருந்து வெளிப்படுகிறது.

தன்னையறிந்து தலைவனையறிய வேண்டும் என்பதும் தமிழரின் மற்றொரு கொள்கை. அதாவது-தானாகிய ஜீவாத்மாவின் தத்துவத்தை முதலில் அறிந்துகொண்டு அதன் பின் தலைவனாகிய பரமாத்மாவின் தத்துவத்தை அறிய வேண்டுமென்பதே. இந்த தத்துவங்களை எளிதில் அறிவிக்கும் பொருட்டு தமிழ்நாடெங்கும் சிவன் கோயில்களும், விஷ்ணு கோயில்களும் ஏற்பட்டன. சிவன் கோயில்கள் ஜீவாத்ம தத்துவத்தையும், விஷ்ணு கோயில்கள் பரமாத்ம தத்துவத்தையும் காட்டிக் கொடுப்பதாய் சொல்லப்படுகிறது. ஆனபடியால் தமிழர்களான ஆழ்வார்களும், நாயன்மார்களும் அவர்கள் காலத்தில் தமிழ்நாட்டிலுள்ள கோயில்கள் தங்கள் கொள்கையைச் சார்ந்த கோயில்கள் என்பதைக் காட்டும்படி பதிகங்கள் பாடிப்போற்றினார்கள். நாளைக்கும் அந்தக் கோயில்களில் அவர்களுடைய பாசுரங்களும், பதிகங்களும் சேவிக்கின்றன. ஆழ்வார்களாலோ, நாயன்மார்களாலோ பாடப்பெறாத கோயில்கள் தொழ யோக்யதை யில்லாதவைகள் என்பது தமிழரின் துணிபு.

6. பகவத் தரிசனத்தின் அவச்யம்

மேலே சொன்னபடி பகவான் தனது பரம கிருபையால் அளித்த சரீரத்தைக்கொண்டு ஜீவர்கள் பகவானை வழிபட்டு மோக்ஷத்தை அடையாமல் சிற்றின்பத்திற்கு ஆசைப்

பட்டு விஷயாந்தரங்களிலே மனதைச் செலுத்தி பாபத்தை சம்பாதித்து அதன் பயனாய் பகவானால் விதிக்கப்பட்ட தண்டனையை அனுபவிக்கும் சிறைக்கூடமாக, தங்கள் சரீரத்தைச் செய்து கொண்டனர். ஒரு பாபம் செய்தால் அதன் பயன் மற்றொரு பாபத்தை செய்யத் தூண்டுகிறது. அப்படிச் செய்யும் பாபம் மற்றொரு பாபத்தில் மூட்டுகிறது ஆனபடியால் ஒருவன் செய்யும் பாபம் அவனை ஒன்றன்பின் ஒன்றாக பாப பரம்பரைகளிலே மூட்டிவிடுகிறது. அதை விட்டே திருமங்கையாழ்வாரும் 'பாவமே செய்து பாவியானேன்' என்று அருளிச் செய்தார்.

ஜீவாத்மாக்கள் பாப பரம்பரைகளின் தண்டனையை அனுபவிக்க 'மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்து' என்கிறபடி அனேக ஜன்மங்களையடைந்து அதில் உழன்று வருகிறார்கள். நம் நாட்டிலுள்ள சிறைக்கூடங்களிலுள்ள சிறைவாசிகளின் கண்காணிப்புக்காக ஒரு மேலதிகாரி இருந்து வருகிறார். அவர் அச்சிறையில் அடைப்பட்டவர்களின் நடத்தைகளை கவனித்து அதற்குத் தக்கபடி அவர்களுடைய சிறைவாசத்தைக் குறைத்தோ, விடுதலையடையும்படி செய்தோ தமது ஆஜ்ஞையை நிறைவேற்றி வருகிறார். அதுபோலவே பகவானும் ஒவ்வொரு மானிட சரீரத்திலும் தாமிருந்து கொண்டு ஜீவர்கள் செய்யும் பாப புண்யங்களை தாம் சாக்ஷிபூதராயிருந்து கொண்டு கவனித்து அவர்களை வேறு சரீரத்தில் புகும்படியோ, அல்லது மற்றொரு சரீரத்தை அடையாமலிருக்கும்படியோ செய்து வருகிறார். சிறைக்கூடத்திலுள்ள ஒரு சிறைவாசி அச்சிறையதிகாரியைக் கண்டு அவரனுமதி பெற்றே விடுதலையடைவது போல் சரீரமாகிய சிறையிலடைப்பட்ட ஜீவர்கள் சரீரத்திலுள்ள சாக்ஷிபூதனான பரமாத்மாவைக் கண்டு அவன் அருளைப்பெற்று இந்த உடற்சிறையை விட்டு வெளிப்பட்டு விடுபெற்று பேரின்பத்திற்குள்ளாக வேண்டும்.

ஆனபடியால் எல்லா பகவத் பக்தர்களும் பிறப்பின்மையைச் செய்து கொடுக்கும்படியே முதலில் வேண்டுகிறார்கள். ஆழ்வார்களில் தலைவராகிய நம்மாழ்வார் தமது முதல் ப்ரபந்தமான திருவிருத்தம் முதல் பாசுரத்தில் "பொய்நின்ற ஞானமும், பொல்லாவொழுக்கும், அழுக்குடம்பும், இந்நின்ற நீர்மை இனியாமுறாமையைப்" ப்ரார்த்தித்தார்.

ஆழ்வார்களில் கடைக்குட்டியான திருமங்கை மன்னனும் "பிறவாமை எனைப் பணி" என்று பிரார்த்தித்தார். நம்மாழ்வார் தமது திருவாய்மொழியில் 'அமரரொடு உயர்வில் சென்று அறுவர்தம் பிறவியஞ் சிறையே'-என்றார். ஆசார்யர்களில் வேதாந்த தேசிகர் பரமபத ஸோபானத்தில் "உடற்சிறை வெட்டிவிட்டு வழிப்படுத்தும் வகை செப்புவமே" என்றும், "ஒரு கோடி துயர் விளைக்கும் உடம்பாயொன்றும் வன்சிறையின்றலை வாசற்றிறந்து நம்மை வானேற வழிப்படுத்த மனமுற்றானே" என்றும், மணவாள மாமுனிகள் தமது ஆர்த்திப்ரபந்தத்தில் "இந்தவுடற் சிறைவிட்டு எப்பொழுது யானேகி அந்தமில்பேரின் பத்துளாகுவேன்" என்றும் அருளிச் செய்திருப்பதால் அவர்கள் மானிடவுடலை ஒரு சிறையாகவே திருவுள்ளம் பற்றினார்களென்று தெரிய வருகிறது.

7. ஜீவாத்மாக்களின் கதிகள்

ஜீவாத்மாக்கள் அடையும் கதிகளாவன: 'கர்ப்பகதி' என்பது ஒரு தாயின் கர்ப்பத்திற்குள் பிரவேசித்தல்; 'யாம்யகதி' என்பது யமனுடைய லோகமடைதல்; 'தூமாதி கதி' என்கிறது பித்ருலோகம் முதலான மேலுலகங்களுக்கு செல்லுதல்; 'அர்ச்சிராதி கதி' என்பது பரமபதம் போதல். இவைகளில் அர்ச்சிராதிகதி நீங்கலாக மற்றைய மூன்றும் அவரவர்கள் கர்மானுகுணமாக ஜீவாத்மாக்களால் அடையப்படுகின்றன. அர்ச்சிராதிகதி மட்டும் பகவத் கிருபையாலே அடையக்கூடியதாயிருக்கிறது. எப்படியெனில் "வானேற வழிதந்த வாட்டாற்றான் பணிவகையே நான் ஏறப் போகின்றேன்" என்று நம்மாழ்வார் அருளிச்செய்தபடி பகவான் பரமபதமாகிற வானேற வழி காட்டிக் கொடுத்தாலொழிய ஜீவர்கள் அதை அடைய முடியாதென்று தெரிகிறது.

ஆனபடியால் திருமழிசைப்பிரான் "காயினேன் வீடு பெற்று இறப்பொடும் பிறப்பறுக்குமா சொலே" என்றும் "வரம்பிலாத பல்பிறப்பு அறுத்துவந்து நின்கழல் பொருந்துமாதிருந்த நீ வரம்பு செய்" என்றும் வேண்டினார்.

இப்படி தன்னை பிரார்த்திக்கும் ஒவ்வொரு மானிட ஜீவனும் அதற்கு ஏற்படும் ஊனன மரண நரகாந்த

துக்கத்தைப் போக்கிக் கொண்டு தனது பாதாரவிந்தத்தை யடைந்து உய்வதற்கு உபாயமாக பகவான் அர்ச்சிராதி கதியை ஏற்படுத்தினான். அந்த மார்க்கம் காலம் தேசம் முதலானதுகளின் நிமித்தம் அடையக் கூடாமலிருப்பதைத் தவிர்க்கும் பொருட்டு, ஒவ்வொரு மானிட சரீரத்திற்குள்ளும் பகவானால் ஒரு அர்ச்சிராதி மார்க்கம் அமைக்கப் பட்டிருக்கிறது. அதைத் தெரிந்து கொள்ளாத தோஷத்தினாலேயே மானிடர்கள் சம்சாரமாகிய கடலைத் தாண்ட முடியாமல் அதிலிருந்து கொண்டு நோவுபட நேரிடுகிறது.

மேலே சொன்ன அர்ச்சிராதி மார்க்கத்தையும் அதில் பிரவேசித்து "வான்" என்னும் பரமபதத்துக்குச் செல்லும் உபாயத்தையும் லோகத்தாருக்கு காட்டிக் கொடுக்கும் பொருட்டே பகவான் மானிட சரீரத்திற்கு ஒப்பாக தனக்கு கோயில்களை உண்டாக்கிக் கொண்டு அதிலுள்ள பிம்பங்களில் ஆவிர்ப்பவித்து நிற்கத் திருவுள்ளமானான்.

8. ஸ்ரீரங்கம் கோயிலின் உற்பத்தி

பகவான் மேற்கூறிய தனது எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு க்ஷீராப்தியில் நின்றும் "தன்னாலே தன்னுருவம் பயந்தானாய்" ஸ்ரீரங்கநாதனாகவும், ஸ்ரீரங்க விமானமாகவும் ஆவிர்ப்பவித்து ப்ரம்மா தன்னை ஆராதிக்கும்படி செய்து கொண்டு ஸத்யலோகத்தில் எழுந்தருளியிருந்தான். வைவஸ்வத மனுவின் புத்ரனான இக்ஷ்வாகு ப்ரம்மாவைக் குறித்துத் தவம் செய்து தவப்பயனாக ஸ்ரீரங்கவிமானத்தையும், ரங்கநாதனையும் பெற்று அயோத்தியில் எழுந்தருளப்பண்ணி ஆராதித்து வந்தான். அவன் காலம் தொடங்கி இராமபிரானுடைய காலம் வரையில் அவனுடைய ஸந்ததியிலுதித்த ஒவ்வொருவரும் ரங்கவிமானத்தைத் தங்கள் குலதனமாகக் கருதி அதிக பிரேமையோடும் பக்தி வினயங்களோடும் ஆராதித்து வந்தார்கள். ஸ்ரீராம பிரான் தன்னுடைய பட்டாபிஷேக காலத்தில் ஸ்ரீரங்கவிமானத்தை விபீஷணனுக்குக் கொடுக்க, விபீஷணனும் அதை லங்கைக்கு எடுத்துச் செல்லும்போது மார்க்கத்திலுள்ள ஸ்ரீரங்க க்ஷேத்ரத்தில் விமானத்தை எழுந்தருளப்பண்ணி, அங்கிருந்த மஹரிஷிகள், தர்மவர்மா முதலானவர்களுடைய விண்ணப்பத்தின்படி திருவாராதனமும், உத்ஸவமும் நடத்தி வைத்தான். பிறகு அந்த

ஸ்ரீரங்கக்ஷேத்ரமே ரங்கநாதனுடைய மனதுக்கு இனிதாகத் தோற்றினபடியால், மேலே சொன்ன தமது எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளவும், காவேரிக்குக் கொடுத்த வரத்தை பூர்த்தி செய்விக்கவும், அவ்விடத்தை விட்டுப் போகாமல் அங்கேயே ஸ்திரப் பிரதிஷ்டையாயிருந்துவிட்டார். அது முதல் ஸ்ரீரங்கவிமானத்திற்கு பிராகாரங்கள் ஏற்பட ஆரம்பித்து காலடைவில் ஸப்த பிராகாரம் என்னும் ஏழு பிராகாரங்கள் உண்டாயின.

9. ஆலய நிர்மாண வகை.

ஆலய நிர்மாணம் சரீர ப்ரஸ்தார மென்றும் ஹ்ருதய ப்ரஸ்தார மென்றும் இருவகையாக சொல்லப்படுகிறது. சரீரத்தை விவரித்துக் குறிப்பது சரீர ப்ரஸ்தாரம். ஹ்ருதய கமலத்தை விவரித்துக் குறிப்பது ஹ்ருதய ப்ரஸ்தாரம். ஸப்த தாதுக்களின் நிலைமை முதலியன சரீர ப்ரஸ்தார ஆலயத்தாலும், மனிதர் உள்ளத்தே சொல்லாயும், பொருளாயும் அமைந்துள்ள ஒவ்வோர் வஸ்துக்களும் ஹ்ருதய ப்ரஸ்தார ஆலயத்தாலும் விளக்கப்படுகிறபடியால் தேகமே ஆலயமெனப் பெற்றோம் என்று பெரியோர் பேசுகிறார்கள்.

ஸ்ரீரங்கத் தீவுக்குள் அமைந்துள்ள ஸ்ரீரங்கநாதன் கோவில் சரீர ப்ரஸ்தாரக் கிரமத்தில் ஏழு பிராகாரங்களோடு அமைக்கப்பட்டிருக்கிறது. அது ஏழு தாதுக்களாலாகிய மானிட சரீரத்தின் தத்துவத்தைக் காட்டிக் கொடுக்கிறது. திருவானைக்காவலிலுள்ள ஜம்புநாதசுவாமி கோவில் ஹ்ருதய ப்ரஸ்தார க்ரமத்தில் ஐந்து பிராகாரங்களோடு கூடி நின்று பஞ்ச கோசங்களின் தத்துவத்தை காட்டிக் கொடுக்கிறது.

10. க்ஷேத்ரமென்பதின் தத்துவம்.

“இதம் சரீரம் கௌந்தேய! க்ஷேத்ரமித்ய பிதீயதே” என்று பகவான் சொன்னபடி க்ஷேத்ரமென்பது சரீரமே யாகும். மோக்ஷமடைய மானிட சரீரம் ஸாதனமாயிருப்பதால் அது முக்தி தரும் க்ஷேத்ரமென்று சொல்லப்படுகிறது. அப்படிப்பட்ட க்ஷேத்ரத்தையே அண்டத்தில் ஏழுவிதங்களாகப் பிரித்து ஏழுவித நாமங்களால் ஏழுவிதமான க்ஷேத்ரங்களாக்கி அவைகளை முக்தி க்ஷேத்ரங்களாக

புராணங்கள் பேசுகின்றனவென்றும், அப்படிப் பேசுவது முக்கியமளிக்கும் க்ஷேத்ரமாகிய மானிட சரீரத்தின் பெருமையை விளக்கிக் காட்டவேதான் என்றும் சில புஸ்தகங்களில் காணப்படுகிறது.

11. முக்தி க்ஷேத்ரங்கள்

அயோத்தியா, மதுரா, மாயா, காசி, காஞ்சி, அவந்திகா, துவாராவதி என்கிற ஏழும்முக்தி க்ஷேத்ரங்கள், அவை மானிட சரீரத்தின் ஓரோர் பாகத்தை குறிக்கும்.

12. ஆதார க்ஷேத்ரங்கள்

ஆதார க்ஷேத்ரங்கள் என்று சில சொல்லப்படுகின்றன. சைவ புராணத்தில்—

திருவளராரூர் மூலந்திருவானைக்கா நாபி
மருவளர் பொழில் சூழண்ணாமலை மணிபூரகமி
திருவருட்கண்ட மன்ற மிதய மாந்திருக்காளத்தி
பொருவருங்கண்டமாகும் புருவ மத்தியமே காசி

என்று கூறியிருப்பதால் திருவாரூர்-மூலாதாரமும், திருவானைக்கா-ஸ்வாதிஷ்டானமும், திருவண்ணாமலை - மணிபூரகமும், சிதம்பரம்-அனாகதமும், திருக்காளத்தி-விசுத்தியும், காசி ஆக்ஞையுமாகத் தெரிய வருகிறது.

இது போலவே வைஷ்ணவ க்ஷேத்ரங்களில் "கண்டியூரரங்கம் மெய்யம் கச்சி பேர் மல்லை என்று மண்டினர் உய்யலல்லால் மற்றையார்க்கு உய்யலாமே" என்று திருக்குறுந்தாண்டகத்தில் திருமங்கை மன்னன் சொல்லியிருப்பதால் அவைகளையே வைஷ்ணவ ஆதார க்ஷேத்ரங்களென்று கொள்ளவேண்டியிருக்கிறது. ஆனால் சைவ சமயத்தார் சொன்னது போல் ஆழ்வார் மேற்கூறிய க்ஷேத்ரங்களில் எது எது எந்தெந்த ஆதாரத்தின் தத்துவத்தைக் காட்டிக் கொடுக்கிறது என்பதை வெளிப்படையாகச் சொல்லவில்லை.

வைஷ்ணவ ஸ்தலங்களில் பெரும்பான்மையானவை, ஷடாதாரம், ஆறு ஆதாரங்களின் தத்வங்களைத் தெரிவிப்ப

தாகவே கொள்ள வேண்டியிருக்கிறது. ஏனெனில், இந்த ஆதாரங்களின் தத்வங்களை அறிந்து கொண்டால்தான் மானிட சரீரத்திலுள்ள மூலாதாரம் தொடங்கி பிரும்மரந்திரம் வரையில் ஒன்றின் மேல் ஒன்றாய் ஏறிச் சென்று அதற்கு மேற்பட்ட ஸ்தானத்திலுள்ள பரமாத்மாவைக் கண்டு களித்து அதன்பின் இந்த சரீரமாகிய சிறைவாசத்திலிருந்து விடுதலையை அடைந்து மோக்ஷப்ராப்தியை அடையக்கூடுமென்பது பெரியோர்களின் அபிப்பிராயம்.

13. ஸ்வயம் வியக்த க்ஷேத்ரங்கள்

பகவான் கோயில் கொண்டருளியிருக்கும் திவ்ய தேசங்களில் சில ஸர்வேச்வரனுடைய இச்சையாலேயே ஆவிர்ப்பவித்து நிற்குமிடமாக ஏற்பட்டிருப்பதால் அவை ஸ்வயம் வியக்த க்ஷேத்ரங்கள் எனப்படுகின்றன. அவைகளாவன:—திருவரங்கம், திருவேங்கடம், தோதாத்ரி (வானமாமலை) சாளக்கிராமம், நாராயணாச்ரமம்,(பத்ரிகாச்ரமம்) புஷ்கரம், நைமிசாரண்யம், ஸ்ரீமுஷ்ணம். இவற்றுள் நாராயணாச்ரமம், நைமிசம் ஸ்தல மஹாத்மியமும், புஷ்காம் தீர்த்த மஹாத்மியமும், திருவரங்கம் முதலானவை மூர்த்தி மஹாத்மியமும் கொண்டு விளங்குகின்றன.

14. தைவத க்ஷேத்ரங்கள்

இவை, ஹஸ்திகிரி (காஞ்சி வரதன் கோயில்) போன்றவை தேவர்களால் உண்டாக்கப்பட்ட க்ஷேத்ரங்கள்.

15. ஆர்ஷ க்ஷேத்ரங்கள்

இவை திருவன்பில், திருவெவ்வுளூர், திருவெள்ளறை, போன்றவை, ரிஷிகளால் ஏற்பட்ட க்ஷேத்ரங்கள்.

மேற்கூறிய தைவத ஆர்ஷ க்ஷேத்ரங்கள் முறையே தேவர்களாலும், முனிவர்களாலும், பகவான் அவர்களுக்கு பிரஸன்னமானபோது, அவர்களால் பிரார்த்திக்கப்பட்டு ப்ரதிஷ்டை பண்ணப்பட்டவைகள். லோகத்திற்கு ஹிதத்தை தேடுவதே ஞானிகளின் நோக்கமானபடியால், தாங்கள் பெற்ற பேறு மற்றவர்களும் எளிதில் பெறவேண்டி அவர்

கள் வேண்டிக் கொண்ட இடத்தில், பகவானை, கோயில் கொண்டெழுந்தருளும்படி அவர்கள் பிரார்த்திக்க, அவர்களுடைய வேண்டுகோளுக் கிணங்கி பகவானும் அந்தந்த இடங்களில் கோயில் கொண்டருளி சேவை கொடுக்கிறார்.

16. பாடல் பெற்ற ஸ்தலங்கள்

இவை மேலே சொன்ன மூன்று வகை க்ஷேத்ரங்களுக்குள் வைஷ்ணவ ஸமயாசாரியர்களான ஆழ்வார்கள் சென்று பூஜித்து பதிகங்கள் பாடப்பெற்றவை. அப்படி பாடப்பெற்றதினால் அவைகளின் வைபவம் அதிகரித்து ஆழ்வார்களைப் பின்பற்றியவர்களால் அவை யாத்திரைக்குரிய ஸ்தலங்களாகக் கருதி தொழப்பட்டு வருகின்றன. பாடல்பெற்ற வைஷ்ணவ ஸ்தலங்கள் 108. அவற்றுள்—கோயில், திருமலை பெருமாள் கோயில் என்று சொல்லப்படும் ஸ்ரீரங்கம், திருவேங்கடம், காஞ்சீபுரம் (வரதன்ஸன்னதி) ஆகிய மூன்றும் முதன்மையாகக் கொண்டாடப்படுகிறது இம்மூன்றினுள்ளும் ஸ்ரீரங்கமே தலைமை பெற்று விளங்குகிறது.

17. ஸ்ரீரங்கம்

க்ஷீராப்தேர் மண்டலாத்பானோர் யோகிநாம் ஹ்ருதயாதபி
ரதிம் கதோ ஹரிர் யத்ர தஸ்மாத் ரங்கமிதிஸ்ம்ருதம்

என்கிறபடி வைகுண்டம், திருப்பாற்கடல், சூரிய மண்டலம், யோகிகளுடைய உள்ளக்கமலம்—இவையனைத்திலும் இனியதென்று திருமால் திருவுள்ளமுவந்து எழுந்தருளியிருக்குமிடமானதுபற்றி "ரங்கம்" என்று பெயர் உண்டாயிற்றென்றும், திருமகளார் திருத்தம் செய்யுமிடமாகையாலும், ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய திருவுக்கு (மேன்மைக்கு) கூத்தப் பயிலுமிடமாகையாலும் (ஆற்றினிடைக்குறை) நதியினிடையே உயர்ந்த இடமாகையாலும் திருவரங்கம் என்ற பெயர் வந்தது.

தவிர, ஸ்ரீரங்கம், கொள்ளிடம்—காவேரி என்னும் இரண்டாற்றின் மத்தியிலிருந்து கொண்டு இடா பிங்களா என்னும் நாடிகளின் மத்தியிலுள்ள ஸுஷும்னா நாடியின் தத்வத்தை காட்டிக் கொடுக்கிறது.

ஸ்ரீரங்கமாகிய திவ்ய தேசம் 'கோயில்' என்றும் 'பெரிய கோயில்' என்றும் 'பூலோக வைகுண்டம்' என்றும் 'போக மண்டபம்' என்றும் அழைக்கப்படுகிறது.

'கோயில்' என்பது கோ இல் எனப்பிரிந்து, 'கோ' தலைவன்; தலைமை யென்றும், 'இல்' இடம்; வீடு என்றும் பொருள்படுதலால் 'கோயில்' என்பதற்கு இறைவனாகிய எம்பெருமானுடைய இருப்பிடம் அல்லது தலைமையான இடம் என்றாயிற்று. இது தேவாலயங்களுக்கெல்லாம் பொதுப் பெயராயிருந்தாலும் "தலையரங்கம்" என்று ஆழ்வார் பேசினபடி மற்ற திவ்ய தேசங்களுக்கெல்லாம் தலைமை பெற்றிருத்தலால், தலைமையான இடம் என்பதைக் காட்ட கோயில் என்று அழைப்பது வைஷ்ணவ சம்பிரதாயமாயிருக்கிறது. இது போல் சைவ சமயத்தார்களால் சைவ க்ஷேத்ரங்களுள் சிறந்ததான 'சிதம்பரம்' கோயிலென்று அழைக்கப்படுகிறது.

ஞாத்யாலயமாகிய மானிட சரீரத்தின் தத்துவத்தை பூர்ணமாய் எடுத்துக் காட்டத் தேவையாகிய ஏழுப்ராகாரங்களோடு கூடிய ஞானாலயமாயிருத்தலால் ஸ்ரீரங்கம் மற்ற திவ்ய தேசங்களுக்கெல்லாம் தலைமை பெற்று கோயிலென விளங்குகிறது.

மற்ற திவ்ய தேசங்களிலுள்ள கோயில்களைக் காட்டிலும் ஸ்ரீரங்கத்திலுள்ள கோயில் பெரிதாயிருப்பதாலும் "தேசோயம் ஸர்வ காமதுக்" என்று சொல்லுகிறபடி இச்சிக்கும் ஸகல பயன்களையும் அளிக்கக்கூடியதாயிருப்பதாலும், மற்ற எல்லாக் கோயில்களினுடைய தத்துவங்களையும் தான் உட்கொண்டு ஏர்கொளேழுலகமும் துன்னி முற்றுமாகி நின்ற சோதி ஞான மூர்த்தியாய், வானத்தும் வானத்துள் ளும்பரும் மண்ணுள்ளும் மண்ணின் கீழ்தானத்து மெண் டிசையும் தவிராது நின்றானைப் வீற்றிருந்து ஏழுலகம் தனிக் கோல் செலுத்தும் ஸர்வேச்வரனுடைய ஆக்ஞைக்குள்பட்ட லீலா விபூதியான அண்டத்திற்குட்பட்ட ஸகல லோகங்களினுடையவும் 'நித்ய விபூதி' என்னும் பரமபதத்தினுடையவும் தத்துவங்களை எளிதில் காட்டிக் கொடுக்கும் வகையில் அமைந்திருத்தலால் தொண்டரடிப் பொடிகளால் "பெரிய கோயில் மதிள் திருவரங்கம்" என்று பாடப்பட்டது.

வைகுண்டத்தின் தத்துவத்தை பூலோகத்திலுள்ளவர்கள் கண்டு அனுபவிக்கும் வகையில் ஸ்ரீரங்கம் கோவில் அமைந்துள்ளபடியால் அது 'பூலோக வைகுண்டம்' என்று அழைக்கப்படுகிறது. ஆனபடியால் மங்கள சுலோகத்திலும் "வைகுண்டம் ரங்க மந்திரம்" என்று சொல்லப்பட்டது.

ஸ்ரீரங்கம் கோயிலில் ரங்கநாதன் 'ரங்கசாயி' யென்றும் 'அநந்தசாயி' யென்றும் போற்றப்படுகிறபடி ஆதிசேஷன் பேரில் சயனத் திருக்கோலமாயிருந்து கொண்டு சேவை கொடுக்கிறபடியால் அந்தக் கோயில் 'போக மண்டப'மெனப்பட்டது.

18. ஸ்ரீரங்கம் தலைமை பெற்ற காரணம்

ஒரு மரத்தின் அடி பாகமும் அதின் வேர்களும் அது ஜீவித்திருப்பதற்குக் காரணமாயிருக்கின்றன; வேரில் சேர்க்கும் தீர்த்தம் அடி மரத்தின் வழியாய் அதனுடைய கிளைகளுக்குச் சென்று அந்த மரத்தை செழித்து விளங்கும்படிச் செய்கிறது. அது போல "வாஸுதேவதரு" என்று சொல்லும்படியான நூற்றெட்டு திவ்ய தேசங்களாகிற விருக்ஷத்தின் அடிபாகமும் வேர்ப் பற்றுமாயிருப்பது ஸ்ரீரங்கம். அந்த விருக்ஷத்தின் கிளைகளாயிருக்கின்றன மற்ற திவ்ய தேசங்கள்.

தவிர, வேட்டைக்குச் சென்ற ராஜா வேட்டையாடிக் களைத்தவுடன் சிரம பரிகாரத்திற்காக அவ்வனத்தில் அமைக்கப்பட்ட விடுதியில் தங்கி அவ்விடத்தில் அப்பகலைக் கழித்து, சாயங்காலமானவுடன் தன்னுடைய படை வீடு என்னும் ராஜதானிக்குத் திரும்பி வருகிறான். அப்படிப் பகலில் தங்கின இடத்தை 'பகலிருக்கை' என்றும் 'தங்கு வேட்டையாகச் சென்றவிடம்' என்றும் சொல்வதுண்டு. அது போல ரங்கநாதனும் அடியார்கள் பிரார்த்தனைக் கிணங்கி அவர்களுக்கு தரிசனம் கொடுக்கும் பொருட்டு, கொஞ்ச காலம் போய் தங்குகின்ற இடமாய் மற்ற திவ்ய தேசங்கள் இருப்பதால் அவைகள் ரங்கநாதனுடைய "பகலிருக்கை" என்று வைஷ்ணவ ஆசார்யர்களால் பேசப்படுகின்றன.

ஸ்ரீரங்கம் தம்முடைய ராஜதானியாகிய நிரந்தர வாசஸ்தானம் என்பதைக் காட்டிக் கொடுக்கும் பொருட்டு ரங்கநாதன் உத்ஸவங்களில் ஸ்ரீரங்கத்திற்கு வெளியிலுள்ள மண்டபங்களுக்குச் சென்றாலும் ராத்திரி அவ்விடங்களில் தங்காமல் கோயிலுக்குத் திரும்பி வந்து அரவணை அமுது செய்து தமது ஸிம்ஹாஸனத்தில் சயனித்துக் கொள்வது வழக்கமாயிருந்து வருகிறது.

மற்ற திவ்ய தேசங்கள் ரங்கநாதனுக்கு ஆராமங்கள் போலிருப்பதால் திருமங்கையாழ்வாரும் திருவரங்கத்தை "ஆராமம் சூழ்ந்த வரங்க"மென்று பாடினார்.

19. ஸ்ரீரங்கநாதன்

இவருக்கு, அழகிய மணவாளன், நம்பெருமாள், பெரிய பெருமாள் என்று சில திருநாமங்களுண்டு. "என்னரங்கத்தின்னமுதர் குழலழகர், வாயழகர், கண்ணழகர், கொப்பூழி லெழு கமலப்பூவழகர்" என்று பேசி அவரழகில் ஈடுபட்ட ஸ்ரீ ஆண்டாளையும், அவரைப் போலவே, ரங்கநாதனைக் கண்டு மோகித்த உறையூர் வல்லி என்னும் கமலவல்லியையும் கலியாணம் செய்து கொண்டு அழகிய மணவாளப் பிள்ளையாய் வழங்கினபடியால் 'அழகிய மணவாளன்' என்ற திருநாமம் ஏற்பட்டது.

துலுக்கர் படையெடுப்பில் ரங்கநாதன் வெகு காலம் ஸ்ரீரங்கத்தைவிட்டு வெளியே சென்றிருந்து திரும்பி ஸ்ரீரங்கம் எழுந்தருளினபோது, இவர் ஆதியில் எழுந்தருளியிருந்தவர்தானோ வென்றும் ஸந்தேகம் ஏற்பட்ட போது "இவர்தான் நம் பெருமாள்" என்று நிச்சயிக்கப்பட்ட காரணங்கொண்டு 'நம்பெருமாளென்று' அழைக்கப்படுகிறார்.

தவிர, அநேகம் குழந்தைகளுக்குத் தகப்பனாயிருப்பவனை அவை அன்பின் மிகுதியால் நம் தகப்பன் என்று அழைப்பது போல் அவன் குழந்தைகளான அடியார்கள் அவனுடைய வாத்ஸல்ய பூர்த்தியைக் கண்டு நம் பெருமாள் என்று பேசி போற்றப்படுகிறது. ரங்கநாதன் அயோத்தியில் இருந்தபோது 'லோகநாதஸ்ஸ ராகவ:' என்கிறபடி ஜகந்நாதனான ஸ்ரீ ராமபிரானால் ஆராதிக்கப்

பட்டு, ராமனாகிய பெருமாளுக்கும் பெருமானாய் விளங்கினதால் அவருக்கு "பெரிய பெருமாள்" என்ற திருநாமம் ஏற்பட்டது.

20. ஸ்ரீரங்கநாதனுடைய திருவரங்கத்தினுடைய வைபவம்

ஸ்ரீரங்கத்தினுடைய வைபவங்களையும், விசேஷங்களையும், பூர்ணமாய் எடுத்துச் சொல்லுவதென்பது யாருக்கும் இயலாதது. ஏனெனில், "நினைப்பரிய நீளரங்கத்தான்" என்று பூதத்தாரும், "கேட்பார்க்கரும் பொருளாய் நின்ற வரங்கனே" என்று திருமழிசைப்பிரானும் பேசினபடி ரங்கநாதனுடைய புகழ் "யானுமேத்தி ஏழுலகம் முற்றுமேத்தி பின்னையும் தானுமேத்திலும் தன்னையேத்த வேத்த எங்கெய்தும்" என்று ஆழ்வார் பாடினபடி எத்தினவிடம் அளவுபட்டும் எத்தாதவிடம் அளவுக்கு விஞ்சியும் நிற்கும். ஆதலால் ஆழ்வார்கள் பத்துப் பேர்களும், ஆண்டாளும், திவ்ய கவி பிள்ளைப் பெருமாளய்யங்கார் போன்ற கவிகளும் ரங்கநாதனைப்பற்றியும் திருவரங்கத்தைப்பற்றியும் அனேக ப்ரபந்தங்களும் பதிகங்களும் பாடிப் போற்றியுள்ளார்கள். அவைகளிலிருந்து அவரவர் சக்தியானுஸாரம் தெரிந்து கொள்வதே உசிதமானதாயும் பொருத்தமுடையதாயுமிருக்கிறது.

"கல்லதோர் அருள் தன்னாலே காட்டினான் திருவரங்கம் உய்பவர்க்குப்பும் வண்ணம்" என்றார் தொண்டரடிப் பொடிகள். ஏனெனில், திருவரங்கம்—எரிகதிரோன் மண்டலத்தூடு ஏற்றிவைத்து ஏணிவாங்கி அருள் கொடுத்திட்டு அடியவரை ஆட்கொள்வான் அமரும் ஊராயிருக்கிறது. அது காரணமாக பக்தர்களும் பகவர்களும் பழமொழிவாய் முனிவர்களும் பரந்த நாடும், சித்தர்களும் தொழுதிறைஞ்சும்படி திருவரங்கம் திசை விளக்காய் நிற்கிறது.

தேசாந்தரகதோ வாபி த்வீபாந்தரகதோ பிவா
ஸ்ரீரங்காபிமுகோ பூத்வா ப்ரணிபத்ய ந ஸீத்தி

என்கிறபடி ஒரு மனிதன் தேசாந்தரம் சென்றபோதிலும் திக்கு நோக்கி தண்டம் ஸமர்ப்பிக்க வேண்டிய திசை

ஸ்ரீரங்கநாதனுடைய திருவரங்கத்தினுடை வைபவம்

ஸ்ரீரங்கமிருக்கும் திக்காயிருக்கிறது. எனெனில், அது அவனுடைய அஜ்ஞானமாகிற இருளைப் போக்கி மோக்ஷ ஹேதுவான ஞானபிரகாசத்தை உண்டு பண்ணிக் கொடுக்கிறது.

திருவரங்கம் கர்ம பாவனையுள்ள நாட்டார்களால் தொழும்படி நின்றது. அதற்கு ஒரு பெருமையை உண்டாக்கக்கூடியதாயில்லை. "தும்புரு நாரதர் புகுந்தனரிவரோ" என்ற தொண்டரடிப் பொடிகள் பாடியபடி திருவரங்கம் அவர்களுக்கு ஒரு புகலிடமாய் ஏற்பட்டது ஒரு பெருமையே. அதைவிட 'ஸர்வஸம்சய நிர்முக்தோ நாரதஸ்ஸர்வ தர்மவித்" என்று சொல்லப்படும் ப்ரஹ்மஜ்ஞானாதிக்யத்தையும், பகவத் ப்ரேமாதிசயத்தையும் உடைய நாரதர் "சென்று சென்று தொழுதிறைஞ்சும்படி நின்றது" திருவரங்கத்துக்கு உபமானமிட்டுச் சொல்ல முடியாத ஒரு அஸாதாரண கீர்த்தியை உண்டுபண்ணுகிறது.

"பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதும் சோராமே ஆள்கின்ற எம்பெருமா"னை செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார், எப்பொருட்கும் நின்று யார்க்கும் எய்தாது நான் மறையின் சொற் பொருளாய் நின்று கொண்டு, தேவுடைய மீனமாய், ஆமையாய், ஏனமாய், அரியாய், குறளாய், மூவுருவில் ராமனாய், கற்கியாய் தர்ம ஸம்ஸ்தாபனார்த்தம் பூமியில் அவதரித்து துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலனம் பண்ணுவது அவர் பெருமைக்கு ஓர் அதிசயத்தை விளைவிக்கக்கூடியதாயில்லை. "தன்னடியார் திறத்தகத்து தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல்" என்றபடி பகவான் ஒருவனைத் தனது அடியானாக அங்கீகரிக்கும்படி செய்து ஸ்ரீதேவியே அடியாளான பிறகு அவன் இன்ன குற்றம் செய்தானென்று புகார் செய்தால், "என்னடியார் அது செய்யார்" என்றும் அடியாரிடத்திலுள்ள பக்ஷபாதத்தையும் அன்பையும் தோற்றுவிக்கும் ஸ்வபாவம் ஓர் அளவு அதிசயத்தை உடையதாயிருக்கிறது. அதினுங்காட்டில் அந்த ஸ்ரீதேவி மறுபடியும் அந்த அடியான் செய்த குற்றத்தை வற்புறுத்திச் சொல்லுவாளாகில் "செய்தாரேல் நன்று செய்தார்" என்று சொல்லி, "குன்றனைய குற்றம் செய்யினும் குணங்கொள்ளும்" என்கிறபடியும்,

ப்ரபந்நாந் மாதவஸ் ஸர்வாந் தோஷேண பரிக்ருஹ்யதே!
அத்ய ஜாதம் யதா வத்ஸம் தோஷேண ஸஹ வத்ஸலா!
என்கிறபடியும் தன் கன்றின் வழும்பைக் காதலிக்கும் அன்றுதன்னை யீன்றுகந்த ஆவைப்போல் தோஷத்தையே போக்யமாகக் கொள்ளும் வாத்ஸல்ய குணமோ ரங்கநாதனின் மற்றைய குணங்களுக்கெல்லாம் மேலானதும் ஒப்புயர்வற்றதாயும் அதிசயத்தோடு கூடியதாயுமிருக்கிறது.

21. தமிழ்க் கலைஞர்களின் தெளிவு

மேலே சொன்ன வாத்ஸல்ய குணத்தைக் கண்டே தமிழ்க் கலைஞர்கள் தங்கள் பதிகங்களில் பகவானை "தாய் தந்தை எவ்வுயிர்க்கும் தான்" என்றும் "இடர்கடியும் மாதா பிதாவாக வைத்தேன் எனதுள்ளே யாதாகில் யாதேயினி" என்றும் பேசி நிர்ப்பரராயிருந்ததுமன்றியில், பகவானை அன்பின் வடிவாகவே கண்டுகந்து "அன்பராய்" என்றும் "மாதவனென்பதோர் அன்புதன்னை" என்றும் "கோலமலர்ப் பாவைக்கு அன்பாகிய என் அன்பேயோ" என்றும் போற்றினார்கள். பிரிய பரனும் ஹிதபரனும் அன்பின் ஸ்வரூபமாயும் பகவான் இருப்பதினாலே ஜீவராசிகளின் ரக்ஷண க்ஷேமலாபங்களின் பொறுப்பு அவரைச் சேர்ந்ததாகையால், தான் மேலே சொன்னபடி நிர்ப்பரனாயிருந்து கொண்டு பகவானைக் கண்டு தன் சேஷத்வமாகிற அடிமைத்தன்மையை தெரிவிக்கும் பொருட்டு "அஞ்சலி: பரமாமுத்ரா க்ஷிப்ரம் தேவப்ரஸாதிநீ" என்கிறபடி ஓர் அஞ்சலியைச் செய்துவிட்டு பகவானும் அவனுடைய விபூதிகளும் வாழவேண்டுமென்று பல்லாண்டு பாடுவதே மானிட ஜீவர்களின் கடமையாகும் என்னும் துணிபே தமிழர்களின் கொள்கை. இக் கொள்கைக்கு மீறின செயல்கள் ஸ்வரூப நாசத்தை உண்டாக்கும். ஏனெனில், அடிமையாகிய ஜீவர்கள் ஆண்டவனாகிய பரமாத்மாவுக்கு ஸந்தோஷத்தை உண்டாக்கக்கூடிய அவனுகந்த கைங்கரியங்களைச் செய்வதே அவனுடைய உகப்புக்குரிய கடமையாகும். அதைவிட்டு ர்மாறு குணமாகக் கிடைக்க வேண்டிய இஹலாபங்களை உத்தேசித்து பகவானை அடிக்கடி பிரதக்ஷிணம் பண்ணுவதும் நமஸ்கரிப்பதும் அவனைத் தொந்தரவு செய்வதாகும். அவன் எல்லாம்வல்ல கடவுளாதலால் "உள்ளுவார் உள்ளிற்றெல்லாம் உடனிருந்து" அறிகிறான். அறியாதவனுக்கு

நினைப்பூட்டுவதுபோல் அடிக்கடி தெரிவிக்க வேண்டியதில்லை. உள்ளன்பும் அவனோடு உள் கலத்தலுமே வேண்டியது.

22. ஸ்ரீ ரங்கநாதனுக்கும், மற்ற திவ்ய தேசத்து எம்பெருமான்களுக்கு முள்ள வித்தியாசம்

பகவான் ஸ்ரீரங்கம் நீங்கலாக மற்ற திவ்ய தேசங்களில் ஆவிர்ப்பவித்து நிற்கும் நிலையானது மானிட ஜீவர்கள் திருந்த முடியாதபடி 'ஈச்வரத்வப் பீடார்' (ஈச்வரன் என்னும் அஹங்காரம்) கொண்டு நிற்பதாயிருக்கிறது. திருவரங்கத்திலுள்ள நிலையோ வென்றால் "பண்டு தொண்டு செய்தாரை மண்மிசைமேவி ஆட்கொண்டு போய் விசும்பேற வைக்கும் எந்தையாய், பிரதவரடைப் பிரானர் பிரமகுருவாகி வந்து போதில் கமலவன் னெஞ்சம் புகுந்து என் சென்னித்திடரில் பாதவிலச்சினை வைத்திட்டான்" என்றும், தனது வாக்ஷூர்க்ஷாரமாகிய தரிசனத்தை அளித்து "மண் கொண்ட வெக்கை இராப்பகலோதுவித்து என்னைப் பயிற்றிப்பணி கொண்டான்" என்றும் கொண்டாடும்படி தானே மானிடர்களை தனது அடியார்களாகத் திருத்தி "அதியாதன வறிவித்த அத்தா" என்று போற்றும்படி அவர்கள் தத்வங்களை அறியும்படிச் செய்து, இராப்பகலில்லாமல் அவர்களை ஆண்டு கொண்டு அவர்களுடைய உஜ்ஜீவனத்துக்கும் ரக்ஷணைத்துக்கும் சிந்தனை செய்யும் கள்ள நித்திரை கொள்ளும் மார்க்கத்தையுடையனைப், வானேற தான் காட்டிக் கொடுத்த வழியின்படி தன்னைக் கிட்டினைக்குமவர்களை இருளகற்றும் எரிகதிரோன் மண்டலத்தூடு ஏற்றிவைத்து ஏணிவாங்கி அருள் கொடுத்திட்டு அவர்களை 'திரும்பிவருதலில்லாத பரமபதத்தில் ஏற்றி வைத்து, வைகுண்டநாதனும் தன்னடிக்கீழ் குற்றேவல்கள் செய்யும்படி நித்ய கைங்கர்யத்தை அளித்து நிரதிசய ஆனந்தத்தை உண்டுபண்ணிக் கொண்டு போரும் சேவையைப் பண்ணிக் கொண்டு "அணியார் பொழில் சூழ் அரங்கநகரப்பா பணியாய் எனக்கு உய்யும் வகை பரஞ்சோதி" என்று பிரார்த்தித்த திருமங்கையாழ்வாரைப் போன்றவர்களுக்கு அவர்கள் உய்யும் மார்க்கத்தைக் காட்டிக் கொடுத்துக் கொண்டு, ஆட்கொள்ளத் தோன்றிய அர்ச்சா ரூபியாய் ஆசார்யத்வ வைலப்பத்தோடு எழுந்தருளியிருக்

கும் நிலையாயிருக்கிறது. ஆனபடியால்தான் வைஷ்ணவர்கள் ரங்கநாதனை பிரதம ஆசாரியனாகக் கொண்டாடுகிறார்கள்.

மஹாவிஷ்ணுவை ஆராதிக்கும் முறையைக் கற்பிக்கும் சாஸ்திரம் வைஷ்ணவாகமம் என்றும், சிவபெருமானை ஆராதிக்கும் முறையை போதிப்பது சைவாகமமென்றும் சொல்லப்படுகிறது. வைஷ்ணவாகமமானது வைகானஸமென்றும், பாஞ்சராத்ரமென்றும், இரண்டாகப் பிரிந்துள்ளது. வைகானஸம் ஸ்ரீ விகனஸர் என்னும் மஹரிஷியால் வெளியிடப்பட்டது. ஸ்ரீ பாஞ்சராத்ரம் ஸ்ரீ மஹாவிஷ்ணுவாலேயே வெளியிடப்பட்டது. ஸ்ரீ வைகானஸத்தை மந்திரரூபமான பூஜையென்றும், ஸ்ரீபாஞ்சராத்ரத்தை தந்திரரூபமான பூஜையென்றும் சொல்லுகிறார்கள்.

பாஞ்சராத்ரத்தில் பௌஷ்கரம், ஜயாக்யம், ஸாத்வதம் என்கிற ஸம்ஹிதைகள் ரத்னத்ரயம் என்று சொல்லப்படுகின்றன. அவைகளில் பௌஷ்கரத்திலிருந்து பாரமேச்வரமும், ஜயாக்யத்திலிருந்து பாத்மமும், ஸாத்வதத்திலிருந்து ஈச்வரமுமாகிய ஸம்ஹிதைகள் உண்டாயின. பாஞ்சராத்ரத்தில் ஏற்பட்டுள்ள ஸம்ஹிதைகள் 108 என்பதாய் சொல்லப்படுகின்றன.

பாஞ்சராத்ரம் — சர்யாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞானபாதமென நான்குவித பூஜாமார்க்கமாக சொல்லப்படுகிறது. “விரும்பும் சரியை முதல் மெய்ஞான நான்கும் அரும்பு, மலர், காய், கனி போலன்றே” என்றார் ஒரு பெரியார் எப்படி அரும்பு மலராய், மலர் காயாய், காய் கனியாய் நின்றதோ, அதுபோல சரியைப் பயின்று கிரியையையும், அதிலிருந்து யோகத்தையும், யோகத்திலிருந்து ஞானத்தையும் கைப்பற்ற வேண்டும்.

சரீரம் க்ஷேத்ரமென்றும் அது தக்ஷேத்ர வென்றும், தெளிந்து அதில் உபேக்ஷையைச் செய்து நமஸ்கார்யாய ஈச்வரப்ரணிதானங்களால் பகவானுடைய மூர்த்த ஸ்வரூபத்தை பாஹ்யத்தில் (சரீரத்திற்கு வெளியில்) ஆராதித்துக் கொண்டு பகவத் பக்தர்களிடத்தில் விச்வாஸத்துடன் இருப்பது சரியை என்றும் தாஸ மார்க்கம் என்றும்

சொல்லப்படுகிறது. பாஹ்யம் (சரீரத்திற்கு வெளி) அந்தரம் (சரீரத்திற்கு உள்) ஆகிய இரண்டிலுள்ளும் பகவானுடைய மூர்த்தஸ்வரூபத்தை ஷோடச உபசாரங்களுடன் பூதசுத்தி பூர்வகமாக ஆராதிப்பது 'கிரியை' என்றும் 'புத்ரமார்க்கம்' என்றும் சொல்லப்படுகிறது.

சித்தவிருத்திகளை அடக்கி ஆண்டு தியானிக்கும் வஸ்துவின் வடிவை ஹிருதய கமலத்தில் மாத்திரம் தியானித்துக்கொண்டு பிரகிருதி சம்பந்தமில்லாமல் ஆபாஸமற்று இருப்பது யோகமென்றும் சகமார்க்கமென்றும் சொல்லப்படுகிறது.

யாதொரு வியாபாரமுமின்றி பகவான் மூர்த்தஸ்வரூபங்களையும், அமூர்த்தஸ்வரூபங்களையும் சேதனாசேதனங்கள் முதலான ஸகல வஸ்துக்களிடத்திலும் ஞான மாத்திரத்தால் யாது மதுவாக பாவித்து ஸாக்ஷாத்கரித்து மகிழ்வது 'ஞானம்' என்றும் 'சன்மார்க்கம்' என்றும் சொல்லப்படுகிறது.

23. ஸ்ரீரங்கம்கோயிலின் பூஜாக்ரமங்களும் பத்ததிகளும்

கோயிலென்னும் திருவரங்கம் ஸ்ரீ பாஞ்சராத்ர பாரமேச்வர ஸம்ஹிதா க்ரமத்தின்படி ஆராதிக்கப்படுவதாய் சொல்லப்பட்டாலும், சில கிரியைகள் பாரமேச்வர க்ரமத்திலும் மற்றவைகள் பாத்மஸம்ஹிதா க்ரமத்திலும் கடந்தேறி வருகின்றன. ஏனெனில், பாரமேச்வர கிரியைகள் அதி விஸ்தாரமானவைகளாய் இருப்பதால் அப்படியே அனுஷ்டிப்பது அஸாத்யமானதைப் பற்றி சுருக்கமாகவுள்ள பாத்மஸம்ஹிதையின் கிரியைகளும் அனுஷ்டிக்கப்படுகின்றன.

ராமானுஜர் காலத்திற்கு முன் ஸ்ரீரங்கம் கோயில் வைகானஸ ரீதியில் ஆராதிக்கப்பட்டு வந்ததென்றும் ராமானுஜர் காலத்தில் அது மாறி பாஞ்சராத்ர பூஜாவிதி ஏற்பட்டதாயும் கோயிலொழுகு பேசுகிறது.

மகம்மதியர் படையெடுப்பில் ஸ்ரீரங்கத்தை விட்டு வெளியே சென்றிருந்த ரங்கநாதன் ஸ்ரீரங்கத்திற்கு எழுந்

தருளின பிறகு அவருடைய திருவாராதனம் உத்தம நம்பிகளால் நடத்தப்பட்டு வந்ததாக "யதீந்திரப்ரவண ப்ரபாவம்" என்னும் கிரந்தத்தினால் தெரிய வருகிறது. இதையிட்டே ஆழ்வார் ஆசார்யான் அபிதான விளக்கம் என்னும் புஸ்தகத்தில் "உத்தம நம்பிகளைப்பற்றி பேசும் போது நம்பெருமாள் ஸந்நிதியில் திருப்பணி திருவாராதனம் முதலான கைங்கர்யங்களை நடத்திக் கொண்டு போருமவர்" என்று சொல்லப்பட்டது.

ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதி வைகானஸ க்ரமத்திலோ அல்லது பாஞ்சராத்ர க்ரமத்திலோ ஆராதிக்கப்படுகிறதாய் சொன்னாலும், நாதமுனிகள் காலத்திற்குப் பிறகு ரங்கநாதனின் திருவாராதனம், திருமஞ்சனம் வேத விண்ணப்பம், நிவேதனம், உத்ஸவங்கள் முதலான ஸகல கிரியைகளும் திராவிட வேத சம்பந்த மன்னியில் நடக்கிறதில்லை. ஏனெனில், தமிழ் கலைஞான நாதமுனிகள் மறைந்து போன தமிழ் மறையை நம்மாழ்வாரிடமிருந்து கிரஹித்து அது மறுபடியும் முன்போல மறைந்து போகாமலிருக்கும் பொருட்டு ரங்கநாதன் ஸந்நிதியின் ஒவ்வொரு கிரியையிலும் தமிழ் மறையை ஸம்பந்தப்படுத்தி அந்தப்படி நடக்க கட்டளையிட்டார். அதற்காகவே இராப்பத்து பகல்பத்து உத்ஸவங்களை தற்காலம் நடக்கும் பத்ததியில் ஏற்பாடு செய்தார். தவிர, ஆழ்வார் பாசுரங்களில் சிலவற்றின் அர்த்தத்தை எல்லோரும் அறிந்து கொள்ளும்படி கோயிலின் பல பத்ததிகளாய் உண்டாக்கினர். "தர்மஜ்ஞ ஸமய: ப்ரமாணம்" என்கிறபடி நாதமுனிகளாலும் உடையவராலும் ஏற்படுத்தப்பட்ட சிஷ்டாநுஷ்டானப்படி ஸகல காரியங்களும் நடந்தேறி வருகின்றன.

24. தமிழ்க் கலையின் பெருமை

தமிழ் நாட்டினர் தமிழ்க்கலையாகிய தமிழ் வேதத்தின் ஏற்றத்தையும், பெருமையையும், இன்சுவையையும், நன்குணர்ந்தவர்களாதலால் தங்களுடைய இஹபரஸாதநங்களுக்காகச் செய்யும் ஸகல கர்மாக்களிலும் தமிழ் வேத பாசுரங்களை ஓதி வருவதோடு தங்களைத் தமிழன் என்று சொல்லி பெருமைபடுத்திக் கொள்ளும் ஸ்வபாவமுடையவர்கள். பூதத்தாழ்வார் தாம் பாடிய இரண்டாந் திருவந்தாதியில

தம்மைப் பெருந்தமிழன் என்றார். அதைப் போல வேதாந்த தேசிகரும், இதர ஸமய வாதங்களை கண்டிக்கும் பொருட்டு வட மொழியிலேயே அநேக க்ரந்தங்களை இயற்றியுள்ளாராதலால், தம்மை வடமொழி மறையோன் என்று சொல்லப்போகிறார்களோ என்று பயந்து, தமிழிலும் சில ப்ரபந்தங்களை அருளிச் செய்து தமக்கு ஆழ்வார்களிடத்திலும் அவர்களுடைய அருளிச் செயல்களிலும் உள்ள மதிப்பைக் காட்ட 'ப்ரபந்தஸாரம்' என்னும் பாடல்களைப் பாடி அதில் ஆழ்வார் முதலானவர்கள் பாடிய நாலாயிரம் பாசுரங்களையும் "எங்கள் வாழ்வே" என்று கூறி கடைசிப் பாட்டில் தம்மை "சந்தமிகு தமிழ் மறையோன்" என்று மொழிந்தார். இதனால் வேதாந்த தேசிகருக்கு வடமொழி வேதத்திலும் திராவிட வேதத்திலுள்ள ப்ரேமம் நன்கு விளங்குகிறது. தவிர, பெரியாழ்வார் திருப்பல்லாண்டில் அருளிச் செய்ததை மனதில் கொண்டு நாமும் ஸாமகானம் கோஷிக்குமிடமாகிய பரமபதத்திற்குச் சென்று 'நம:' 'நம:' என்று சொல்லிக் கொண்டிருக்கும் நித்ய ஸூரிகள் மத்தியிலே "பெருநாள் மறையோதிய தேமெல்லாம் பாவலருந்தமிழ் பல்லாண்டிசையுடன் பாடுவமே" என்றும் "தமிழ் மறையின் பயனே கொண்ட பாண்பெருமாள் பாடியதோர் பாடல் பத்தும் பழமறையின் பொருளென்று பரவுகின்றோம்" என்றும் "தூயதென் மறைவல்லவர் வாழவே" என்றும் பாடி தமக்கு தமிழ் மறையினிடத்தும் அதை வல்லவர்களிடத்துமுள்ள பெருமதிப்பை வெளியிட்டருளினர்.

25. வடமொழி — தென்மொழி மறைகள்

நாமங்கள் பல கொண்டது வடமொழி வேதமென்றும் அதன்படி தைதவம் செய்யுமவர்கள் பகவானைக் கண்டு தரிசிக்க முடியாது என்பது வேதாந்த தேசிகருடைய திருவுள்ளம். இதை 'அத்திகிரி' மாஹாத்மியத்தில் "நாமங்கள் பல கொண்ட வேதங்கொண்டு தைதவமே செய்வோர்க்குக் காணவில்லா பூமகள் கேள்வன்" என்று அருளிச் செய்ததோடு "மந்திரமும் மந்திரத்தின் வழியுங்காட்டி வழிப்படுத்தி வானேற்றியடிமை கொள்ள தந்தையென நின்ற தனித்திருமால்தாளில் தலைவைத்தோம் சடகோபன் அருளாலே" என்றும் பேசி சடகோபனுடையவும்

தமிழ் வேதத்தினுடையவும் பெருமையை பிரகாசப்படுத்தினர்.

26. ராமானுஜரின் கட்டளை

உடையவர் என்னும் ராமானுஜரின் காலத்தில் த்ராவிட வேதம் எல்லா திவ்ய க்ஷேத்ரங்களிலும் ஓதப்பட வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டது. ஸ்ரீரங்கம் கோயிலில் எந்தெந்த காலத்தில் எந்தெந்த ப்ரபந்தம் பாராயணம் செய்யவேண்டுமென்னும் நியதி உண்டாக்கப்பட்டது. அதனால்தான் ராமானுஜருடைய வாழித்திரு நாமத்தில் "திருவரங்கர் செல்வமுற்றும் திருத்தி வைத்தான் வாழியே" என்னப்பட்டது. ரங்கநாதனுடைய 'செல்வம்' என்னவென்றால் "வான்திகழும் சோலை மதிளரங்கர் வண்புகழ்மேல் ஆன்ற தமிழ் மறைகளாயிரமும்" என்றார் பட்டர். அதாவது ஆழ்வார்களால் பாடப்பட்ட பாசுரங்களெல்லாம் ரங்கநாதனுடைய 'செல்வம்' என்றார்.

இது தவிர, ஆழ்வார் பாசுரங்களின் தத்துவங்களையும் பொருள்களையும் எல்லோருமறியும் பொருட்டு நடத்திக் காட்ட "இராமானுசனுடையார்" என்று சிலரை ஏற்படுத்தி அவர்களை நடிக பாத்ரங்களாக உத்ஸவாதிகளில் நடிக்கும்படி செய்தார்.

27. ஸ்ரீரங்கம் கோயில் நிர்மாண தத்வம்

பட்டர் தமது ஸ்ரீரங்கராஜ ஸ்தோத்திரத்தில் ரங்கநாதன் ஸப்தப்ராகாரங்களின் மத்தியில் எழுந்தருளியிருப்பதாய் போற்றினர். "மதிலேழுடுத்த திருவரங்கம் பெரிய கோயில்" என்று ஒரு தமிழ்க் கவியும் பாடினர். ஏழு ப்ராகாரங்களோடு கட்டப்பட்ட கோயில் சரீரப் பிரஸ்தாரக் கோயிலென்று ஏற்கனவே சொல்லப்பட்டது. ஆனபடியால் ஸ்ரீரங்கம் கோயில் ஒரு மானிட தேகத்தின் தத்துவங்களை காட்டிக் கொடுக்கக்கூடிய ரீதியில் அதற்கு ஒப்பாக அமைக்கப்பட்டிருப்பதாய் தெரிகிறது. எப்படியெனில், இந்த ஏழு ப்ராகாரங்களும் மானிடசரீரத்திலுள்ள ரஸம், ரத்தம், மாமிசம், மேதை, எலும்பு, ஸ்நாயு, மஜ்ஜை என்ற ஸப்த தாதுக்களை குறிப்பிடுகின்றன.

சிலர் ஏழுப்ராகாரங்களும் ச்ரோத்ரம், த்வக்கு, சக்ஷுஸ், ஜிஹ்வை, க்ராணம், மனம், புத்திகளாக சொல்லுகிறார்கள்.

திவ்யகவி பிள்ளைப்பெருமாளையங்கார் திருவரங்கமாலையில் ஸ்ரீரங்க விமானம் அஷ்டாக்ஷரத்திலுள்ள 'ஓம்' என்னும் ப்ரணவஸ்தானத்திலும், மற்ற ஸப்தப்ராகாரங்களும் 'நமோநாராயணாய' என்னும் ஏழு எழுத்துக்களின் ஸ்தானத்திலும் அமைக்கப்பட்டிருப்பதாயும், விமானமும் ஸப்தப்ராகாரமும் சேர்ந்து அஷ்டாக்ஷரத்தைக் காட்டிக் கொடுப்பதாய்ப் பேசியிருக்கிறார்.

இது தவிர, ஏழுப்ராகாரங்களும் ஏழு லோகங்களைக் குறிப்பதாயும் சிலரால் சொல்லப்படுகிறது. வைகுண்டத்தையடைய நினைக்கும் முமுக்ஷு பூமிக்கு மேலுள்ள ஆறு லோகங்களையும் தாண்டிச் சென்று அதற்கப்பாலுள்ள வைகுண்டத்தையடைய வேண்டியிருக்கிறபடியால், அந்த தத்வத்தை ரங்கநாதனின் கோயிலமைப்பு காட்டிக் கொடுக்கிறது என்கிறார்கள். எப்படியெனில், ரங்க விமானமாகிய வைகுண்டத்தையடைய ஸ்ரீரங்கம் செல்பவர்கள் ஏழு ப்ராகாரங்களையும் ஒன்றின்பின் ஒன்றாக தாண்டிச் செல்ல வேண்டியிருக்கிறது.

மேலே சொன்னபடி ஏழு ப்ராகாரங்களும் ஏழு லோகங்களின் ஸ்தானத்தில் ஏற்பட்டிருப்பதாகக் கொண்டால் ஒரு மானிட சரீரத்தில் ஏழு லோகங்களும் இருக்கக்கூடுமா வென்று யோசிக்க வேண்டியிருக்கிறது. யோகிகள் அண்டத்திற்குள் உள்ளது பிண்டத்திற்குள்ளும் உண்டு என்கிறார்கள். அதாவது அண்டத்திற்குள் ஸ்தூலமாயிருக்கும் ஸகல லோகங்களும் பிண்டமாகிற மானிட சரீரத்திற்குள் அதிஸூக்ஷ்மமான ஸ்திதியிலிருந்து வருகிறது என்பதே. இந்த தத்வத்தை பகவான் கண்ணனாய் அவதரித்த போது யசோதைப் பிராட்டிக்கு காட்டிக் கொடுத்ததாய் பாகவதத்தில் சொல்லப்படுகிறது. தவிர பெரியாழ்வாரும் தமது திருமொழியில் "பசுஞ்சிறு மஞ்சளால் ஐயநாவழித்தாளுக்கு அங்காந்திட, வையமேழும் கண்டாள் பிள்ளை வாயுளே" என்றும் "வாயுள் வையகம் கண்ட மடநல்லார்" என்றும் பாடியிருப்பதால் யசோதைக்கு

மட்டும்மன்னியில் கண்ணனிடம் பக்தி கொண்டுள்ள கோபியர்களுக்கும் அழுக்கு மானிட சாதியில் பிறந்து கல்கான வந்த கண்ணன் ஒவ்வொரு மனிதசரீரத்திலும் ஏழு லோகங்களின் தத்துவங்களும் அடங்கிக் கிடக்கிறது என்று காட்டிக் கொடுத்தான். எதற்காகவெனில், மானிடராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் தங்கள் சரீரத்திலுள்ள ஏழு லோகங்களையும் சுலபமாய்த் தாண்டி அதற்கு மேலுள்ள வைகுண்டத்தை இந்த ஜன்மத்திலேயே அடைய வேண்டுமென்பதற்காகவே இந்த ரகசியமான தத்வம் பெரியாழ்வார் பாசுரத்தால் மட்டுமில்லாமல் "உலகேழுண்டான் ஒடுக்கி தயிர் வெண்ணெய் உண்டான்" என்று பாடிய நம்மாழ்வார் பாசுரத்தாலும் தெரிய வருகிறது.

மானிட சரீரத்தில் ஏழு லோகங்களின் தத்வங்களும், மூலாதாரம் முதல் ஸஹஸ்ரார சக்ரம் வரையிலுள்ள ஏழு சக்ரங்களில் அமைக்கப்பட்டிருப்பதாய் சொல்லப்படுகிறது. அவைகளின் தத்வங்களையே ஆதார க்ஷேத்ரங்களாயுள்ள திவ்ய தேசங்கள் வெளிப்படுத்துகின்றன. ஆனபடியால் ஸப்த பிராகாரங்களோடு கூடிய ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதி மானிட சரீரத்திலுள்ள ஆறு ஆதாரங்களினுடையவும் அதற்கு மேற்பட்ட ஸஹஸ்ரார கமலம் முதலான தத்வங்களையும் குண்டலங்களையும் தன்னுள் அடக்கிக் கொண்டிருப்பதாய் யோக சாஸ்த்ரஞர்கள் சொல்லுகிறார்கள்.

இந்த மானிட தேகத்திலுள்ள ஏழுலோக தத்வங்களையும், அறியும் பொருட்டு நம்மாழ்வாரும்" கல்கிதான் காத்தளிக்கும் பொழிலேழும் வினைபெற்றே கல்கந்தாரோ காதோ" என்று பிரார்த்திக்கிறார்.

மானிட சரீரத்தை பிண்டமாகச் சொல்லுகிறபடியால் அண்டத்திலுள்ள பதினான்கு லோகங்களின் தத்வங்களும் பிண்டமாகிய மானிட தேகத்திலுமிருக்கின்றன. மானிட சரீர "குத" ஸ்தானமாகிற மத்ய ஸ்தானத்திற்கு கீழே பாதாள லோகங்களின் தத்துவங்களும் அதற்கு மேல் பூலோகம் முதல் ஸத்யலோகம் வரையிலுள்ள லோகங்களின் தத்துவங்களும் அமைக்கப்பட்டிருப்பதாயும் சொல்லப்படுகிறது.

பூலோகத்திலுள்ளவர் அதன் மேலுள்ள ஊர்த்வ லோகங்களுக்கு மேலே சென்று வைகுண்டத்தை அடைய வேண்டியவர்களாயிருப்பதால் பாதாள லோகங்களைப் பற்றிய விவரங்கள் அவர்கள் அறியத் தேவையில்லை. ஆனபடியால் ஸ்ரீரங்கம் கோவில் பூமி முதல் வைகுண்டம் வரையிலுள்ள லோகங்களின் தத்துவங்களை விஸ்தாரமாக காட்டிக் கொடுக்கும்படி அமைக்கப்பட்டிருக்கிறது.

பூலோகத்தின் வடக்கே வைகுண்டமிருப்பதால் அவ்விடம் செல்ல வேண்டியவர்கள் வடக்கு நோக்கிப் போக வேண்டியிருப்பது போல ப்ரத்யக்ஷ பரமபதமாகிற ரங்க விமானத்தையடைய தெற்கிலிருந்து வடக்கு நோக்கிப் போக வேண்டியிருக்கிறது அதற்கு அநுகூலமாக ஸந்நிதிவாசல்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

மானிட சரீரத்தின் தலைப்பக்கம் வடக்கென்றும், பாதமுள்ள பக்கம் தெற்கென்றும் சொல்லப்படுகிறபடியால் மானிட சரீரத்திற்கு ஒப்பாக ஏற்பட்டுள்ள ஸ்ரீரங்கம் கோயிலும் வடக்கேயிருந்து தெற்கு நோக்கி அமைக்கப்பட்டிருக்கிறது. "அன்போடு தென்திசை நோக்கி பள்ளி கொள்ளும் அணியரங்கன்" என்று குலசேகராழ்வாரும் "தென்திசை இலங்கை நோக்கி" என்று தொண்டரடிப் பொடிகளும் பாடியுள்ளபடி ரங்கநாதன் தெற்கு நோக்கிய வண்ணம் சயனித்துக் கொண்டிருக்கிறபடியால் ஸப்த ப்ராகாரங்களுக்கும் தெற்கு நோக்கிய திருவாசல்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவைகள் அர்ச்சிராதி மார்க்கமாகிய ஸுஷும்ந நாடியின் தத்துவத்தை உணர்த்தும்படி அமைக்கப்பட்டிருக்கின்றன.

மானிட சரீரத்தை பகவான் தனது கோயிலாக்கிக் கொண்டு அதில் எழுந்தருளியிருக்கிறான் என்பதை "ஆக்கையுள்ளும், ஆவியுள்ளும், அல்லபுறத்தினுள்ளும் நீக்கமின்றி நின்றாய்" என்றும் "கோயில் கொண்டான் திருக்கடித்தானத்தை, கோயில் கொண்டான் அதனோடும் என் நெஞ்சம்" என்று நம்மாழ்வாரும்,

"பனிக்கடலில் பள்ளிகோளைப் பழகவிட்டு ஓடிவந்து
என் மனக்கடலில் வாழவல்ல மாயமணாள நம்பி
தனிக்கடலே, தனிச்சுடரே தனியுலகே என்றென்று
உனக்கிடமாயிருக்க என்னை உனக்குரித்தாக்கினையே"

என்று பெரியாழ்வாரும்,

"உள்ளம் பெருங்கோயி லூனுடம்பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவ லிங்கம்
கள்ள புலனைந்தும் காளாமணி விளக்கே"

என்று ஓர் சைவ சமையபக்தவரும் பாடியிருக்கும் பாசுரங்களிலிருந்து தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

மானிட சரீரத்தில் மூலாதாரத்திற்கு கீழுள்ள பாகத்தை உள் திருவீதியும் சித்திரைவீதியுமாகிய ஆறு, ஏழாவது ப்ராகாரங்கள் காட்டுகின்றன, மற்று ஐந்து ப்ராகாரங்களும் சரீரத்தின் மேல் பாகத்தையும் அதிலுள்ள ஆதாரங்களின் தத்துவங்களையும் வெளிப்படுத்துகின்றன.

28. ஐந்தாவது ப்ராகார வாசல் நான்முகம் கோபுரம்

தெற்கு உள் திருவீதியிலிருந்து கோயிலுக்குள்போக நுழைந்து செல்ல வேண்டிய வாசல் நான்கு திக்குகளை நோக்கினபடி நான்கு முகங்களோடு கூடியதாயிருப்பதால் நான்முகம் கோபுர வாசலெனப்படுகிறது.

இது மூலாதார சக்கரத்தின் தத்துவத்தைக் காட்டிக் கொடுக்குமிடம். மூலாதாரத்திலுள்ள பத்மம் நான்கு தளங்களோடு கூடியிருப்பதை கோபுரத்தின் நான்கு முகங்களும் குறிக்கின்றன. இந்த வாசலுக்கு உட்புறமிருக்கும் ரங்கவிலாஸம் மூலாதார சக்ர ஸ்தானம்.

அதன் மத்தியில் மூன்றரைச் சுற்றோடு கூடிய ஸர்ப்பம் போல் குண்டலினீ சக்தி வாசம் செய்வதாய் சொல்லப்படுகிறது. அந்த குண்டலினீ சக்தி ஸ்தானத்தில் ரங்க விலாஸத்திலுள்ள மஹா பலிபீடம் அமைக்கப்பட்டிருக்கிறது.

மேற்படி மஹா பலிபீடத்திற்கு தெற்கேயுள்ள [?]பஸ்தம்பம் என்னும் கல் கம்பம் மானிட சரீரத்திலுள்ள ஸுஷும்னா நாடியை தன்னுள் அடக்கிக் கொண்டிருக்கும் ப்ரஹ்மதண்டம் என்று சொல்லப்படும் முதுகெலும்பின் ஸ்தானத்தில் அமைந்திருக்கிறது.

மேலே சொன்ன குண்டலினீ சக்தி ஸுஷும்னாநாடியின் வாசலை தன் தலையால் மூடி, காவல் புரிந்து கொண்டு தூங்குவதாய் சொல்லப்படுகிறது. இந்த ரஹஸ்யத்தை திருமங்கை மன்னன் திருநெடுந்தாண்டகத்தில் "கற்புடைய மடக்கன்னி காவல் பூண்ட பூங்கோவலூர்" என்று பேசி வெளியிட்டார். 'மடக்கன்னி' என்பது 'குண்டலினீ சக்தி' 'பூங்கோவலூர்' என்பது 'ஸுஷும்னாநாடி.' முதலாழ்வார்கள் பகவானைக் கண்டு கொண்டதும் இதிலேதான். இந்த சக்தியோடு கூடியே பகவான் ஏழுலகங்களின் ஸ்தானத்திலுள்ள ஆதாரங்களில் இருந்து கொண்டு உலகத்துக்கு இன்பத்தையளிக்கின்றான் என்பதை நம்மாழ்வாரும் "இன்பம் பயக்க எழில் மலர் மாதரும் தானும் இவ்வேழுலகை இன்பம் பயக்க இனிதுடன் வீற்றிருந்து ஆள்கின்ற எங்கள் பிரான்" என்றார். இந்த குண்டலினீ சக்தி ஓரோர் ஆதாரத்தில் ஓரோர் பெயரால் விளங்குகிறாள். சஹஸ்ர தள புட்பமிசை வீற்றிருக்கும் 'நாரணி' என்றார் தாயுமானவர்.

இந்த குண்டலினீ சக்தியை ஸப்த மாதர்களென்றும் ஸப்த கன்னிகைகளென்றும் நம் நாட்டில் கிராம தேவதைகளாக கொண்டாடப்படுகிறது. சில கோயில்களில் ஏழு பிம்பங்களாலும், சில கோயில்களில் ஏக பிம்பத்தினாலும் இந்த சக்தி விளக்கிக் காட்டப்படுகிறது. ஸ்ரீரங்கத்தில் ஏழுபிம்பங்களாய் இந்த சக்தி விளங்குகிறது; ஸ்ரீரங்க ஸ்ரீயாகிய 'திருவரங்கச் செல்வி' என்னும் நாமதேயத்தோடு கிராம தேவதையாய் கொண்டாடப்படுகிறது. இதன் ஏழு பிம்பங்களும் ஆதியில் உள்ளவை இப்போது கூரத்தாழ்வான் ஸந்நிதியாயிருக்கும் கோயிலில் அமைக்கப்பட்டிருக்தன, இந்த குண்டலினீ சக்தியாகிய திருவரங்கச் செல்வி நடனமிடும் இடமாயிருத்தலால் இந்த திவ்ய தேசத்துக்கு அரங்கமென்று பெயர் ஏற்பட்டது. இந்த திருவரங்கச் செல்வி இருந்தஇடம் இந்த திவ்ய தேசத்தை அரங்கமென்று

காட்டிக் கொடுக்கும் விலாஸம் போல் இருக்கபடியால் அந்த இடத்திற்கு 'ரங்க விலாஸம்' என்னும் பெயர் ஏற்பட்டது.

மூலாதாரத்தின் தத்துவத்தை நன்றாக விளக்கிக் காட்டும் ஸ்தலம் 'திருமாலிருஞ்சோலை' என்னும் 'அழகர் கோயில்'. "உன் பொன்னடி சேர்த்து-ஒல்லை வைத்தே போக எஞ்ஞான்றும் விடலே" என்று பகவானைப் பிரார்த்தித்த நம்மாழ்வார் ஸம்ஸாரிகள் பகவான் திருவடிகளையடைய உபாயமாக "கிளரொளியிளமை" என்னும் பத்துப்பாசுரங்களைப்பாடி அவைகளின் தத்துவங்களை உணர்ந்து அனுஷ்டித்தால் அது "அருளுடையவன்தான் அணைக்கும் முடித்தே" என்று உபதேசித்தார். இத்தப்பத்தில் "பதிபது ஏத்தி எழுவது பயனே, அயல் மலையடைவது கருமமே, புறமலை சார்வது கிறியே, போதவிழ் மலையே புகுவது பொருளே" என்று அருளிச் செய்தார். அதாவது மூலாதாரத்திலுள்ள குண்டலினீ சக்தியிடம் தமது மனத்தைச் செலுத்தி, அச்சக்தியை விழிக்கச் செய்து, அயல்மலை, புறமலை என்னும் முதுகெலும்புக்குள்ளுள்ள ஸுஷும்னா நாடியில் பிராணனை பிரவேசிக்கச்செய்தால் பகவான் திருவடியை அடையலாமென்கிறார். பின்னால் 'திருமாலிருஞ்சோலை' என்று தாம் சொன்னவுடன் பகவான் தன் நெஞ்சு நிறையப் புகுந்தான் என்று பேசினதுமன்றியில் அவன் திருமாலிருஞ்சோலையிலிருந்து திருப்பாற்கடல் சென்று அங்கிருந்து அவருடைய சிரசுக்கு சென்று தங்கிவிட்டானென்றும் போற்றுகிறார். இந்த திருமாலிருஞ்சோலையின் தத்துவத்தை நன்கறிந்த பெரியாழ்வாரும் அதை "ஆபத்தனமென்று அமரர்களும் நன் முனிவர்களும் சேவித்திருக்கும் தென் திருமாலிருஞ்சோலை" என்று பாடியிருக்கிறார்.

பகவானுடைய தரிசனத்தைப்பெற இச்சிக்குமவர்கள் முதல் முதல் தங்கள் மனதைச் செலுத்தி ஒருமைப்படுத்த வேண்டிய இடம் 'மூலாதார சக்ரமே'. இந்த தத்வத்தைக் காட்டிக் கொடுக்கும் பொருட்டே பெரியாழ்வார் தமது அந்திம காலம் வரையில் மூலாதாரத்தின் தத்துவத்தைக் காட்டும் திருமாலிருஞ்சோலையில் யோகத்திலிருந்து வந்து அங்கேயே பரமபத ப்ராப்தியையடைந்தார். அழகருடைய ஸந்நிதி ப்ராகாரத்தில் ஸப்த கன்னிகைகள் உள்ள இடத்திற்கு தெற்கில் அவருடைய திருவரசு இருக்கிறது.

மேலும், தமிழ் நாட்டில் சித்தர்களென்று கொண்டாடப்பெற்ற பதினெட்டு சித்தர்களுடைய கொள்கையும் அதுவே. அதாவது தேஹாலயத்தில் பகவானுடைய தரிசனத்தை அடைய விரும்புகிறவர்களுக்கு முதல் முதல் இதியுக்துறையாயுள்ளது மூலாதாரஸ்தானமே. இதைக் காட்டிக் கொடுக்க வேண்டி பதினெண் சித்தர்களும் அழகருடைய ஸந்நிதி-வாசலில் பதினெட்டு படிகளாக இருந்து வருகிறார்கள். மேலே சொன்ன தத்துவங்களைத் தெரிந்துகொண்டே நம்மாழ்வாரும் மற்ற ஸ்தலங்களைப் பாடுவதற்கு முன் திருமாலிருஞ்சோலையைப் பாடினார்.

29. அநுமார் கோவில்

மஹாபலி பீடத்திற்கு முன்புள்ள சிறிய கோயிலிலிருக்கும் அநுமார் ரங்கநாதனை அஞ்சலி பண்ணிக்கொண்டு நிற்கிறார்.

"உபகாராய ஸுக்ரீவோ ராஜ்ய காங்க்ஷீ விபீஷண:
நிஷ்காரணாய ஹநுமான் தத்துல்யம் ஸஹபோஜனம்"

என்கிறபடி ஒரு பிரயோஜனத்தையும் அபேக்ஷியாமல் ராம பக்தியைப்பண்ணி ஸீதையைக் கண்டு பிடிக்கும் ராம கைங்கர்யத்தில் ஈடுபட்டு "பாவோ நாந்யத்ர கச்சதி" என்று தம்முடைய மனோபாவம் ராமனைத் தவிர்த்து வேறொருவரிடத்திலும் செல்வதில்லையென்று பேசினவரானபடியால் அவர் ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதியின் தத்துவத்தை அறிய இச்சையுள்ளவர்களுக்கு 'நீங்கள் உங்களுடைய மனதை வேறொரு இடத்தில் செலுத்தாமல் எதிரிலுள்ள ரங்கநாதன் ஸந்நிதிக்குச்செல்லும் மார்க்கமாகிய ஸுஷும்னா நாடியில் உங்களுடைய மனமும் பிராணனும் நுழையும்படி சிந்தனை செய்யுங்கள்' என்று உபதேசிக்கிறார்.

இதே விஷயத்தை நம்மாழ்வாரும் "நெறிபட அதுவே நினைவது நலமே" அதாவது மானிட சரீரத்தில் அர்ச்சிராதி மார்க்கத்தின் ஸ்தானத்திலுள்ள ஸுஷும்னையில் நுழைய நினைதல் நன்மையைக் கொடுக்குமென்று சொன்னதாயிற்று. ஆனபடியால் "திருமாலிருஞ்சோலை, மார்க்க சிந்தனை செய்யுமிடம்" என்று திருவாய்மொழி வியாக்யானத்தில் சொல்லப்பட்டது.

30. சொக்கப்பனை கோபுர வாசல்
(ஸ்வாதிஷ்டான சக்ரஸ்தானம்)

மூலாதார சக்ரத்திற்கு மேலே உள்ள ஸ்வாதிஷ்டான சக்ரத்தின் தத்துவத்தை இந்த வாசல் காட்டுகிறது. இந்த வாசலுக்கு இரண்டு ஸ்திரீ பிம்பங்கள் த்வாரபாலகர்களாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. வாசலின் மேல்புறமுள்ளது 'யமுனை' என்னும் சூரிய நாடியாகிய பிங்களா நாடி. கீழ்பக்கமுள்ளது 'கங்கை'யென்னும் சந்திர நாடியாகிய 'இடா' நாடி. இந்த இரண்டு நாடிகளிலும் மாறி மாறி சுவாசம் போய் கொண்டிருக்கிறது. இவையிரண்டுக்கும் மத்தியிலுள்ளது ஸுஷும்னா நாடி

மேலே கண்டபடி அமைந்துள்ள வாசலின் தத்துவமென்னவெனில் ஸ்வாதிஷ்டான சக்ரத்திலிருந்து ஸுஷும்னா நாடி, பிங்களா நாடி, இடா நாடிகள் கிளம்புவதாகவும், ஸுஷும்னா மத்தியில் அதற்கு வலது பக்கத்தில் 'பிங்களா' நாடியும், இடது பக்கத்தில 'இடா' நாடியும் இருப்பதாய் தெரிய வருகிறது. அப்படித் தெரிந்து கொள்வதின் பயன் பகவானையடைந்து அவனுடன் கூடி வாழ்தலே. எப்படியெனில் சிவவாக்கியர்,

"சங்கிரண்டு தாரையொன்று சன்ன பின்னலாகையால்
மங்கி மாறுதேயுலகில் மானிடங்களொத்தனை
சங்கிரண்டையுந் தவிர்த்து தாரையூத வல்லிரேல்
கொங்கை மங்கை பங்கரோடு கூடி வாழலாகுமே"

என்றார். அதாவது மேலே சொன்ன மூன்று நாடிகளிலும் சுவாஸ இயக்கம் மாறி மாறியுண்டாவதால் மனிதர்கள் அழிந்து போகிறார்கள். சங்கிரண்டு என்று சொல்லப்பட்ட சந்திர சூரிய நாடிகளில் பிராண இயக்கமுண்டாவதைத் தடுத்து தாரையாகிய ஸுஷும்னையில் பிராணனை இயங்கச் செய்தால் பகவானோடு கூடி வாழலாமென்கிறார். ஆனபடியால் ஸுஷும்னையில் மனம் வாயு பிராணன் முதலானதை புகச் செய்ய வேண்டியது அவசியம்.

31. கருட மண்டபம்

இந்த வாசல் நுழைந்து உள்ளே சென்றால் கருட மண்டபம் இருக்கிறது. அது ஆதியில் பக்ஷிராஜன் நேரப்

பென்று ஒரு தோப்பாயிருக்கது. அது மாவிட சரீரத்திலுள்ள "கந்தஸ்தானம்" என்னுமிடத்தைக் குறிக்கிறது. இந்த இடமே சரீரத்திலுள்ள எல்லா நாடிகளுக்கும் உத்பத்தி ஸ்தானமென்று சொல்லப்படுகிறது.

கருட மண்டபத்திலுள்ள கருடன் ஸுஷும்னு நாடியில் நுழைந்து மேலே பறந்து செல்லும் குண்டலினீ சக்தியின் தத்துவத்தைக் காட்டியருளுகிறார்.

32. ஆரியபடாள் வாசல்
(மணிபூரக சக்ர ஸ்தானமாகிய நாபிஸ்தானம்)

இந்த வாசலுக்கு கருடனும் சக்ரத்தாழ்வாரும் த்வார பாலகர்களாயிருக்கிறார்கள். வேதாந்த தேசிகர் அருளிச் செய்த ஸங்கல்ப ஸூர்யோதயத்தில் "வ்யக்தௌ ஸங்காஹ ஸங்கல்பௌ விச்வ கோப்தரி மௌ ஹரே: ப்ரதிதாவாகமக்ரமே பக்ஷீச்வர ஸுதர்சநௌ" என்று கருடன் ஸுதர்சனம் இவ்விருவர்களும் ஸ்ரீ மகா விஷ்ணுவின் உத்ஸாகம், ஸங்கல்பம் என்று பாஞ்சராத்ரத்தில் சொல்லப்படுகிறது. ஆனபடியால் இந்த வாசலினமைப்பு ஸுஷும்னையில் ஏறிச் செல்லும் அப்யாஸ யோகி பகவானுடைய தரிசனத்தைப் பெறவேணுமென்னும் ஸங்கல்பத்தோடும், அதைப்படையும் உத்ஸாகத்தோடும் யோகாப்யாஸத்தைச் செய்து வர வேணும் என்பதை கற்பிக்கிறது.

33. நாழிகை கேட்டான் வாசல்
(அநாஹத சக்ரஸ்தானமாகிய ஹ்ருதயஸ்தானம்)

இந்த வாசலின் த்வார பாலகர்கள் பத்ர, ஸுபத்ரான் என்ப்படுகிறார்கள். பத்ரமென்றால் க்ஷேமம் — ஸுபத்ரமென்றால் அதிக க்ஷேமமென்றாயிற்று. இவர்கள் த்வார பாலகர்களாயிருக்கும் தத்துவம் என்னவெனில் அநாஹத சக்ரம் வரையில் ஏறிச் சென்ற யோகாப்யாஸிகளுக்கு பல க்ஷேமங்களும் உண்டாகின்றன. அந்த க்ஷேமங்கள் என்னவென்பதை இந்த கோபுரவாசலின் உள் பக்கத்திலுள்ள சங்கநிதி பதுமநிதிகள் காட்டிக் கொடுக்கின்றன. சங்கநிதி பதுமநிதிகள் ஐச்வர்யாபிமானி தேவதைகள். யோகிக்குக் கிடைக்கக்கூடிய ஐச்வர்யம் அஷ்டமஹாஸித்திகள்.

ஆனபடியால் அநாஹத சக்ரம் வரையில் எதிர்ச்சென்ற யோகிக்கு அஷ்டமஹாஸித்திகள் உண்டாகின்றன. இதே அநாஹதத்வனி கேட்குமிடம்.

34. த்வஜஸ்தம்பம்

இந்த வாசலுக்கு முன்புள்ள த்வஜஸ்தம்பம் பகவானுடைய கொடிமரம்; அவனுடைய கருடக் கொடி பறக்கச் செய்யுமிடம். இந்த வாசலை ஆண்டாள் திருப்பாவையில் "கொடித் தோன்றும் தோரண வாசல்" என்றாள். எப்படி ராஜக்ருஹங்களிலே அந்த ராஜாவின் சின்னமான கொடி பறக்குமோ அது போல ரங்கராஜாவின் அரண்மனையான கோயிலில் கருடக் கொடி பறக்கிறது. இதன் தத்துவம் "வேதாத்மா விஹகேச்வர:" என்கிறபடி கருடன் வேத ஸ்வரூபியானபடியால் வேதத்தைக் கொண்டு தர்ம ஸ்தாபனம் பண்ணி லோகத்தை ரக்ஷித்து பரிபாலிக்கிறவன் என்பதை தோற்றுவிக்கிறது.

35. பலிபீடம்

அடுத்தாற்போலுள்ள பலிபீடம் மானிடசரீரத்திலுள்ள ஹ்ருதய ஸ்தானத்தைக் குறிக்கிறது. பகவானுடைய த்யானம் பரிச்சின்னம் என்றும் அபரிச்சின்னம் என்றும் இரண்டாக சொல்லப்படுகிறது. பரிச்சின்னத்யானம் "அங்குஷ்டமாத்ர: புருஷோமத்ய ஆத்மநி திஷ்டதி அங்குஷ்டமாத்ர: புருஷோந்தராத்மா ஸதாஜநாநாம் ஹ்ருதயே ஸந்நிவிஷ்ட:" என்கிறபடி பகவான் ஹ்ருதயத்தில் அங்குஷ்டமாத்ரமாய் அந்தர்யாமியாயிருக்கிறானென்று த்யானிப்பது. அப்யாஸ யோகிக்கு இந்த பரிச்சின்ன த்யானமே ஸாத்யமாகையால் அதை ஹ்ருதய கமலத்தில் செய்ய வேண்டும் என்பதைக் காட்டுகிறது. இந்த த்யானத்தைச் செய்து கைதேர்ந்த பின்பே "எங்குமுளன் கண்ணன்" என்றும் அபரிச்சின்ன த்யானத்தை செய்பவருக்கும் இந்த பரிச்சின்ன த்யானத்தை பெரியாழ்வார் "மார்வமென்பதோர் கோயிலமைத்து மாதவனென்பதோர் தெய்வத்தை நாட்டி ஆர்வமென்பதோர் பூவிடவல்லார்க்கு அரவதண்டத்தில் உய்யலுமாம்" என்றார்.

36. த்வஜஸ்தம்பத்துக்கு எதிரில் கம்பத்தின் மேலுள்ள அநுமார்

இவர் அநாஹதசக்ரம் வரையில் எதிர்சென்ற அப்யாஸயோகிக்கு "நீ இதுவரையில் வந்து அஷ்டமஹா ஸித்திகளை பெற்றுவிட்டாய். அவைகளில் கண் வைக்காமல் பகவானுடைய தரிசனத்தைப் பெறுவதிலேயே உன் மனதைச் செலுத்து. ஏனெனில் அஷ்டமஹா ஸித்திகள் இகலோக இன்பத்திற்கு ஸாதனமே ஒழிய பரலோக ப்ராப்திக்கு ஸாதனமாகா. தவிர, அந்த ப்ராப்திக்கு விரோதியாகவுமிருக்கின்றன. எப்படியெனில் இகலோக சுகங்களில் மனதைச் செலுத்தினவனை அவை மேன்மேலும் ஐஹிக சுகங்களிலேயே மூட்டிக் கொண்டிருக்கும். 'விரக்தி' ஏற்படாது. 'அடையும் வைகுந்தமும் பாற்கடலும் கடையறப் பாசங்கள் விட்டபின்னையன்றி அவன் அவைதான் கொடான்.' என்றபடி விரக்தி ஏற்பட்டாலொழிய வைகுண்டத்தைக் காணமுடியாது. ஆனபடியால் 'பாவோநாந்யத்ர கச்சதி' என்றபடி உன் சிந்தை மற்றொன்றின் திறத்ததல்லாத் தன்மையை அடையச் செய்து வைகுண்டத்தையடையும் சங்கல்பத்துடன் முன்னேறிச் செல்" என்று உபதேசிக்கிறார்.

37. ஜயவிஜயாள் வாசல்
(விசுத்திசக்ரம் என்னும் கண்டஸ்தானம்)

இந்த வாசலுக்கு 'ஜயன்' 'விஜயன்' என்று இரண்டு த்வாரபாலகர்கள் இருக்கிறார்கள். இதன் தத்துவம் ஸ்வாதிஷ்டான சக்ரத்திலிருந்து சிர: பத்ம ஸ்தான பர்யந்தமுள்ள ஸுஷும்னநாடியில் எதிர் செல்லும் யோகி 'விசுத்தி' என்னும் கண்டஸ்தானத்தை அடைந்த பிறகு ஸகலத்தையும் ஜயித்தவராகிறார். அவர் பஹிர்முக ப்ரபஞ்ச வியாபார ஞானத்தை மறந்து அந்தர்முக ஞானத்தோடு கூடியிருப்பார்.

இந்த வாசலுக்குள்ள 'அமுதுபாறை' மானிடசரீரத்திலுள்ள நாவின் ஸ்தானம்.

38. ஆஜ்ஞா சக்ரம் என்னும் திருவணுக்கன் திருவாசல் ப்ருமத்யஸ்தானம்,

இந்த வாசலின் த்வார-பாலகர்கள் 'தாதா'-'விதாதா' இவர்களின்வரிசையில் குமுதாதிபரிவாரங்கள் பத்துபேர்களிருக்கிறார்கள். அவர்களே மானிட தேகத்திலுள்ள தச இந்த்ரியங்களின் அதி தேவதைகள். இதுவே மானிட சரீரத்திலுள்ள இரண்டு புருவங்களின் மத்தியிலுள்ள ஸ்தானம். இந்த வாசலிலுள்ள திருமணத்தூண்கள் புருவங்களின் ஸ்தானங்களில் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த ஆஜ்ஞா சக்ரத்தையடைந்தபின்பே யோகி அற்ற பற்றற்றவராகிறார்; ரஜோகுண, தமோ குணங்கள் நீங்கப் பெற்று சுத்த ஸத்வ மயத்தையடைந்து நிற்கிறார். இவருக்கு ப்ரக்ருதி ஸம்பந்தமும் அதன் தோஷமும் அற்றுப் போகிறது.

தில்லையாகிய சிதம்பரத்தில் நடராஜர் ஐந்துபடிகளாகிய மூலாதாரம் முதல் விசுத்திசக்ரம் வரையிலுள்ள ஐந்து சக்ரங்களையும் எதிர் சென்று ஆறாவது படியாகிய ஆஜ்ஞா சக்ரத்தையடைந்து, ரஜோகுண, தமோ குணங்கள் நீங்கப் பெற்று சுத்தஸத்வ மயனாய் நிற்கும் ஜீவன், அதற்கு மேற்பட்ட ஸஹஸ்ரார சக்ரத்தையடைந்து ஆனந்த தாண்டவத்தையாடலாம் என்பதைக் காட்டிக் கொண்டு நிற்கிறார்.

இந்த புருவ மத்யஸ்தானத்தை "திரிவேணி ஸங்கமம்" என்கிறார்கள். எப்படி பிரயாகையில் கங்கை, யமுனை, ஸரஸ்வதிகள் மூன்றும் ஒன்று சேருகிறதோ, அதுபோல மானிடசரீரத்திலுள்ள கங்கையாகிய சந்திரநாடியும், யமுனையாகிற சூரியநாடியும் ஸுஷும்னையாகிற ஸரஸ்வதியும் கூடுகின்றன. இதுவே, மனிதன் தனது மனதை லயப்படுத்த வேண்டிய இடமாயிருக்கிறது. இந்த இடமே கேஸரி முத்திரையைச் செய்யவேண்டியவிடமென்று யோக சாஸ்திரம் சொல்லுகிறது.

பகவான் கீதையில் "ப்ருவோர் மத்யே ப்ராணமாவேச்ய ஸம்யக்தம் பரம்புருஷமுபைதி திவ்யம்" என்று அருளிச் செய்தார். அதாவது புருவ மத்தியில் பிராண

வாயுவை நிறுத்தி பரமபுருஷனை தியானிக்குமவன் அவனையடைகிறான் என்றார்.

திருமங்கை மன்னன் புருவ மத்ய ஸ்தானத்தை "நீணிலாமுற்றம்" என்று பேசினார். பூதத்தார் அருளிச் செய்த "ஞானச் சுடர்" விளக்கேற்றுமிடமிதுவே. இதைக் காட்டவே நிவேதன காலங்களில் உத்ஸவத்திற்குப் பிறகு பெருமான் ஆஸ்தானத்திற்கு எழுந்தருளினவுடன் செய்யும் மங்கள ஆலத்தி தீபங்கள் இந்த ப்ருமத்ய ஸ்தானமாகிய இடத்தில் வைக்கப்படுகின்றன. இந்த இடத்தையடைந்த யோகியைப் பிரகிருதி தன்வசப்படுத்த முடியாதென்பதைக்காட்ட "தாங்க நீர் பேசினும் தண்மதி காயினும் இரங்குமோ" என்று திருமங்கை மன்னன் கூறினார்.

பகவத் தரிசனத்தை யடைய விரும்பும் யோகிகள், ரஜோகுண தமோ குணங்கள் நீங்கப்பெற்று பகவானிருக்குமிடமாகிய சிர: பத்ம ஸ்தானமாகிய மூலஸ்தானத்தை நோக்கி வழிபட வேண்டிய இடம் இந்தப் புருவ மத்யஸ்தானமாகையால் குலசேகராழ்வார் 'கடியாரங்கத்தரவணையில் பள்ளி கொள்ளும் மாயோனை மணத்தூணே பற்றிநின்று என் வாயார என்று கொலோ வாழ்த்து நாளே" என்று அருளிச் செய்தார். இப்படி வாழ்த்த நினைத்து "உய்குறில் மாலை வாழ்த்தி உய்மினோ" என்று பேசிய திருமழிசைப் பிரான் திருவுள்ளத்தை அனுசரித்தபடி என்று தோன்றுகிறது. இதுவே தமிழரின் கொள்கை.

இந்த தத்துவத்தை ஜனங்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு சில நூற்றாண்டுகளுக்கு முன்வரையில் சேவார்த்திகள் திருமணத் தூணின் பக்கத்தில் நின்றுகொண்டே பெருமாளை ஸேவிப்பது வழக்கமாயிருந்தது.

திருமணத் தூணுக்கும் குலசேகரன் படிக்கும் மத்தியிலுள்ளவிடத்திற்கு 'அந்தராளம்' என்று பெயர். அதே மானிட சரீரத்திலுள்ள 'நெற்றி' ஸ்தானம்.

அந்தராளத்திற்கு மேலே சென்றால் குலசேகரன் படி இருக்கிறது. அதுவே சிர: பத்மஸ்தானம் ஆரம்பிக்குமிடம். இந்தப் படிக்கு வெளியில் ஒரு கனை குறுக்காக

போடப்பட்டிருக்கிறது. அதன் தத்துவம் என்னவெனில் சிர: பத்ம ஸ்தானம் சுத்த ஸத்வதன்மாத்திரைகளால் நிரம்பியிருக்குமிடம். சுத்த சத்வ நிலையை அடைந்தவர்க்கல்லாது மற்றவர்களால் அடைய முடியாத இடம் என்பதைக் காட்டிக் கொடுக்கிறது.

39. கர்ப்பக்கிருஹம்

குலசேகரன் படிக்குட்பட்ட கர்ப்பக்கிருஹம் மானிட சரீரத்தில் 'மூளை'யிருக்குமிடம். இது ஸஹஸ்ராரம் என்றும் சிர: பத்மஸ்தானமென்றும் சொல்லப்படுகிறது. இந்த ஸஹஸ்ராரத்திற்குமேல் பகவான் சுத்த சத்வமயமான பரமாகாசரூபியாய் இருப்பதாய் பெரியோர்கள் சொல்லுகிறார்கள். "கரந்தெங்கும் பரந்தானை காணபர்தாமே" என்ற திருமங்கை மன்னன் பாசுரப்படி அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய் விளங்கும் பகவானை அபரிச்சின்னனாய் தியானித்து அவனுடைய தரிசனத்தைப் பெற வேண்டிய இடம் இதுவே. ஒரு பக்தரும் "முந்தியளிக்கும் மூலத்தானத்தில் கண்டு பத்தி செய்யாதவர் பாமரரே" என்றார். 'பக்தி' என்பது தைல தாரையைப் போல் இடைவிடாமல் பகவானிடத்தில் அனவரத தியானத்தோடு தனது மனதை லயிக்கச் செய்து தன்னை அவனுக்கு அடிமைப்படுத்துவதோர் பேரன்பு. இத்தகைய பேரன்பை பகவானிடத்தில் செலுத்துவதற்காகவே, பகவான் ஒவ்வொரு மானிடருக்கும் சரீரம் மனம் புத்திகளையும் கொடுத்தான்.

தமிழ்ச் செல்வியாகிய ஔவையாரும் தமது குறளில்

"உடம்பினாற் பெற்ற பயனாவதெல்லாம்
திடம்பட ஈசனைத் தேடு"

என்றும்,

"உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம்
உடம்பினில் உத்தமனைக்காண்"

என்றும்,

"கற்கலாம் கேட்கலாம் கண்ணாரக் காணலாம்
உற்றவுடம் பாலாயவுணர்வு"

என்றும் அருளிச்செய்ததிலிருந்து மானிடர்கள் உடம்பெடுத்ததின் பயனாக ஞானத்தைப் பெற்று பகவானுடைய குண

செஷ்டிதங்களை படித்துக் கேட்டும், அவனுடைய தரிசனத்தைப் பெறும் பொருட்டு பகவானைத் தேடி உடம்பினிடத்தே அவனைக்காண வேணுமென்று சொல்லப்பட்டதாய் தெரிகிறது. அப்படிக் கண்டுபிடித்த சர்வேசுவரனை அர்ச்சிக்கும் மார்க்கத்தையும் ஒளவையாரே அடியில் கண்டபடி "ஆதாரத்தன்னை அறிந்து கிலனுருவை பேதமற வர்ச்சிக்குமாறு" என்றும் "பிண்டத்தினுள்ளே போதிறைவனைக் கண்டு தானர்ச்சிக்குமாறு" என்றும் "போராக்கருத்தினுள் பிண்டத்தினுண்ணினைக்தாசனத்தை செய்யுமாறு" என்றும் "உள்ளத்தினுள்ளே யுறப்பார்த்தங்கொண்சுடரை மெள்ளத் தானைச்சிக்குமாறு" என்றும் போதிக்கிறார். ஆனபடியால் பகவானை ஒவ்வொருவரும் தன் சரீரத்திலேயே கண்டு தரிசித்து அர்ச்சிக்க வேண்டுமென்பது தமிழ்க் கவிஞர்களின் கொள்கை என்பது விளங்குகிறது. மேலே சொன்னபடி செய்யும் பூஜை 'அந்தர்யாக'மென்னும் 'அகப் பூசை'யானபடியால் சரீரத்தில் எந்த இடத்தில் பகவானைக் கண்டு பிடிக்க வேணுமென்பதையும் எப்படி அந்த அகப் பூசையை செய்வது என்பதையும் லோகத்தாருக்கு காட்டிக் கொடுக்கவே பகவான் கோயில் கொண்டருளுகிறார் என்று புலப்படுகிறது. அது காரணமாகவே இந்தியாவின் தென் பாகமாகிய தமிழ் நாட்டில் மேலே சொல்லிய தத்துவத்தை போதிக்கக்கூடிய அநேக கோயில்கள் ஏற்பட்டன.

"பீதகவாடைப் பிரானார் பிரம குருவாகி வந்து என் சென்னித்திடரில் பாதவிலச்சினை வைத்தார்"

"திருப்பொலிந்த சேவடி என் சென்னிமேல் பொறித்தாய"

என்று பெரியாழ்வாரும் "எந்தை தளிர்புரையும் திருவடி என் தலைமேலவே" என்று திருமங்கை மன்னனும் "செழும் பறவை தானேறித்திரிவான் தன் தாளிணைகள் தலைமேலே; தலைமேல் தாளிணைகள் தாமரைக்கண் என்னம்மான் நிலை பேரான்" என்று நம்மாழ்வாரும் பேசினார்கள். "அருட் குருநாதன் தன்பாதம் என் சென்னியில் வைத்தான்" என்றும் "என் சென்னிமேல் காலுடையாய் நீயே கதி" என்றும் தாயுமானவர் பாடினார். ஆகையால் சைவ, வைஷ்ணவ சமயத்தார்கள் பகவானைக் கண்டு தரிசித்தது தங்களுடைய உத்தமாங்கமான 'சிரப்பதம்' மத்தியில் என்றே

தெரிகிறது. நம்மாழ்வார் பகவானை "என்னுச்சியுளானே" என்றும் "உச்சியில் நிற்கும் தேவதேவன்" என்றும் முதலாழ்வார்களில் ஒருவர் "என் சென்னியான்" என்றும் போற்றியிருக்கிறார்கள். ஆகையால் மானிட சரீரத்தின் உச்சியான சிர: பத்மமே பகவான் வாசம் செய்யுமிடமென்று நன்கு புலப்படுகிறது. ஆனபடியால் கோவிலிலுள்ள கர்ப்பக் கிருஹம் மானிட சரீரத்திலுள்ள "ஸஹஸ்ரார பத்மம்" என்கிற சிர: பத்ம ஸ்தானத்தைக் காட்டிக் கொடுக்கும்படி அமைக்கப்பட்டிருக்கிறது. சிர: பத்மத்தில் பகவான் எப்பொழுதும் ஸ்திரமாய் வாசம் செய்கிறான் என்பதைக் காட்டுவதற்காகவே கர்ப்ப கிருஹத்தில் மூலபிம்பம் ஸ்திரமாக பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறது.

ஸ்ரீரங்க விமானத்தைச் சுற்றியுள்ள பிராகாரத்தில் நூற்றெட்டு திவ்ய தேசங்களின் எம்பெருமான்கள் மத்தியிலுள்ள ரங்கநாதனுக்கு இருபுறங்களிலும் சித்திர ரூபமாய் எழுந்தருளப்பண்ணபட்டிருக்கிறார்கள். இப்படி இருப்பது 'ஆராமம்' சூழ்ந்த அரங்கம் என்னும் தத்துவத்தைக் காட்டிக் கொடுக்கிறது.

விமானத்தைச் சுற்றி நான்கு மூலைகளிலுள்ள தேவதைகள் யோகாசனத்திலிருந்து கொண்டு விமானத்திலுள்ள பொருளை யோகத்தினால் மட்டும் அறியலாம் என்பதை காட்டிக் கொடுக்கிறார்கள்.

40. ஸ்ரீரங்க விமானம்

மங்கள சுலோகத்தில் "விமானம் ப்ரணவாகாரம் வேதச்ருங்கம் மஹாத்புதம்:" என்று சொல்லப்படுகிறது. ஸ்ரீரங்க விமானம் ப்ரணவம் என்னும் ஓங்கார வடிவமாய் அமைந்திருக்கிறது. வேதங்களாகிய சிகரங்களோடு அத்யத்புதமாயிருக்கிறது.

"ஓங்காரோ பகவான் விஷ்ணு:" என்றும் "ப்ரணவாத்யாஸ்ததாவேதா:" என்றும் "ஓங்கார ப்ரபவாவேதா:" என்றும் சொல்லுகிறபடி வேதத்திற்கு முதலில் உள்ளதும் வேதத்திற்குக் காரணமாய் அதற்கு பிறப்பிடமாயுள்ளதுமான "ஓமித்யேகாக்ஷரம்" என்றபடி ஓர் முத்தாகிய ஓங்

ரத்தினால் பேசப்பட்ட பகவான் இந்த விமானத்திற்குள் இருக்கிறாரென்று தெரிவிக்கிறது. திருமங்கை மன்னனும் 'வேதமுதல்வனை' என்றும் 'ஓரெழுத்தோருரு வானவனை' என்றும் பாடியருளினார். திவ்யகவி பிள்ளை பெருமாளய்யங்காரும் "ஓங்காரமாயதனுட் பொருளாய் — நின்ற வொண்சுடரே" என்றும் பேசினார்.

தஸ்யவாசக: ப்ரணவ: என்றும் "தஜ்ஜபஸ்தத்ர தத்பாவனம்" என்றும் பதஞ்ஜலி மஹாமுனியால் அருளிச் செய்யப்பட்டது, அதாவது பகவானுடைய வாசகரூபமே ஓங்காரமென்றும் அதை உச்சரிப்பதும் அதன் பொருளை த்யானிப்பதும் ஸமாதியை அடைவதற்கு இலகுவான வழியாம் என்றதாயிற்று. ரங்கநாதன் தன்னை அடைய விரும்புகிறவர்களுக்கு ப்ரணவத்தை உச்சரித்துக் கொண்டு தன்னை த்யானிக்கும்படி போதிப்பதாகத் தெரிகிறது.

"வேதை: ச்ச ஸர்வைரஹமேவ வேத்ய:" என்று பகவான் அருளிச் செய்தார் "அங்கமாறும் வேத நான்கும் ஆகிநின்று அவற்றுளே தங்குகின்ற தன்மையாய்" என்று திருமழிசைப்பிரானும், "நான்மறையின் சொற்பொருளாய் நின்றார்" என்று ஆண்டாளும், "பண்டை நான்மறையும் வேள்வியும் தானாய் நின்ற அரங்கமாநகருளானே" என்று திருமங்கையாழ்வாரும் போற்றியுள்ளார்கள். ஆகவே இந்த விமானத்திற்குள் இருப்பவர் ஸகல வேதங்களாலும், ஸகல மந்திரங்களாலும், ஸகல சாஸ்திரங்களாலும் சொல்லப்பட்டவர் என்று விமானத்தின் மேலுள்ள கலசங்கள் காட்டிக் கொடுக்கின்றன.

விமானத்தின் நான்கு ஸ்தூபிகளுக்கும் கீழேயுள்ள பத்மதளங்களுக்குக் கீழ் விமானத்தின் மேல் பக்கத்தில் ஒரு கலசமும், வட பக்கத்தில் ஒரு கலசமும், கீழ் பக்கத்தில் ஒரு கலசமும் இருக்கிறது. அவை "முன்னெழுத்தாய் முதல்வனையே" என்று பெரியாழ்வார் பாடியபடி ஸ்ரீவிஷ்ணு காயத்ரியில் சொல்லப்பட்டிருக்கிற மூன்றெழுத்துக்களாலாகிய விஷ்ணு சப்தத்தால் சொல்லப்படுமவன் இந்த விமானத்திற்குள் இருக்கிறானென்று தோற்றுவிக்கிறது.

ஓங்காரமானது அஸம்ஹிதாகாரத்தாலே (சேராதிருக்கும் தன்மையில்) அ, உ, ம—என்று மூன்று அக்ஷரமாய், மூன்று பதமாய், மூன்று அர்த்தத்தை பிரகாசப்படுத்துவதாயும், ஸம்ஹிதாகாரத்தாலே (சேர்ந்திருத்தலாலே) "ஓமித்யேகாக்ஷரம்" என்கிறபடி ஏக அக்ஷரமாய், ஏகபதமாய், ஏக அர்த்தத்தை பிரகாசப்படுத்துவதாயுமிருக்கிறதென்றும் அந்த மூன்று எழுத்துக்களும் மூன்று வேதங்களாகிய, ருக், யஜுர், ஸாமங்களில் நின்றும் எடுக்கப்பட்டிருப்பதாய் ச்ருதி, ஸ்மிருதிகள் பேசுவதாய் சொல்லப்படுகிறது.

ஓங்காரத்தின் பிரித்த நிலையிலுள்ள அ,உ,ம, என்னும் மூன்று அக்ஷரங்களும் மேலே சொன்ன மூன்று கலசங்களால் நிரூபிக்கப்படுவதாக எடுத்துக் கொண்டால் ரங்கநாதனுடைய திருமுடிப்பக்கமுள்ள அகாரம் "அகாரோவை ஸர்வவாக்" என்றும் "ஸமஸ்த சப்த மூலத்வாத் அகாரஸ்ய ஸ்வபாவத:" என்கிறபடி அகாரம் ஸர்வ சப்தத்திற்கும் காரணமாயிருப்பது போல ரங்கநாதன் ஸகல ஜகத்காரணனென்றும் ஸர்வரக்ஷகனென்றும் காட்டிக் கொடுக்கிறது. ஸ்ரீபாஞ்சராத்ரமும்,

"அகாரச்சித் ஸ்வரூபஸ்ய விஷ்ணோர் வாசக இஷ்யதே
உகாரச் சித்ஸ்வரூபாயா: ச்ரியோவாசீ ததாவித:
மகாரஸ்து தயோர் தாஸ: இதிப்ரணவ லக்ஷணம்"

என்று சொல்லுகிறது. அதாவது அகாரமானது விஷ்ணு வாசகமாக இச்சிக்கப்படுகிறது; அப்படியே உகாரமானது ஸ்ரீக்கு வாசகமாக அறிகிறார்கள்; மகாரமோ வென்றால் அவ்விருவருக்கும் தாஸபூதனான ஆத்மாவாக சொல்லப்படுகிறது. இது ப்ரணவத்தின் லக்ஷணம் என்னப்பட்டது.

ஆனபடியால் ப்ரணவாகாரமாகிய விமானத்தில் அகாரவாச்யனான பகவானும் உகாரவாச்யையான பிராட்டியும், மகாரவாச்யனாய் தாஸபூதனான ஆத்மாவும் இருப்பதாய் காட்டிக் கொடுக்கிறது. இந்த தத்துவத்தை ஸ்ரீரங்க விமானம் சித்ரரூபமாக எழுதியிருக்குமிடங்களில் காணலாம். எப்படியெனில் பெரிய பெருமாளுக்குப்பின் ஸ்ரீஆண்டாளும் திருவடிச்சாயையில் ஸ்ரீ விபீஷணாழ்வானோ அல்லது திருப்பாணாழ்வாரோ எழுந்தருளியிருப்பதைக் காணலாம்.

ஸ்ரீ ஆண்டாளும், திருப்பாணாழ்வாரும் தங்கள் திருமேனிதனை பரமாகாச ஸ்வரூபமாகச் செய்து கொண்டு ஸ்ரீரங்க விமானத்தில் நுழைந்தவர்களாதலால் அவர்கள் எல்லோருக்கும் தென்படும்படி எழுந்தருளப் பண்ணப்படவில்லை. நாளைக்கும் ஸ்ரீரங்க விமானத்தை ஸேவிக்கும் வைஷ்ணவர்கள் பெரிய பெருமாளுக்குப்பின் ஸ்ரீ ஆண்டாளையும், அவர் திருவடிச்சாயையில் வீணையும், கையுமாய் நிற்கும் திருப்பாணாழ்வாரையும் தியானித்து ஸேவிப்பது வழக்கமாயிருந்து வருகிறது.

மேலே சொல்லிய மூன்று கலசங்களுக்கும் கீழே விமானத்தின் ஓங்காரவளையில் எட்டு ஸ்தம்பங்களிருக்கின்றன. அவை ப்ரணவத்தின் விவரணமானதும்,

"ருசோ யஜூம்ஷி ஸாமானி, ததைவாதர்வணானிச
ஸர்வமஷ்டாக்ஷராந்தஸ்தம் யச்சாந்யதபி வாங்மயம்"

என்கிறபடி ஸகலவேத ஸங்க்ரஹமானதும், விஷ்ணுகாயத்ரியில் சொல்லப்பட்ட வ்யாபக மந்திரங்களில் ஸ்ரேஷ்டமானதும்,

"ஸர்வ வேதாந்த ஸாரார்த்தஸ் ஸம்ஸாரார்ணவதாரக:
கதிரஷ்டாக்ஷரோந்ருணாம் அபுநர் பவ காங்க்ஷிணாம்"

என்கிறபடி ஸமஸ்த வேதங்களினுடைய அர்த்தத்தை உட்கொண்டிருப்பதும் ஸம்ஸாரமாகிற கடலைத் தாண்டச் செய்வதும் மீண்டும் பிறவாமலிருக்க விரும்புவர்களுக்கு அதுவே கதியாயுள்ளதும்,

"கிந்தத்ர பஹுபிர்மந்த்ரை: கிந்தத்ர பஹுபிர் வ்ரதை:
நமோ நாராயணாயேதி மந்த்ர ஸர்வார்த்த ஸாதக:"

என்கிறபடி ஸகலத்தையும் ஸாதித்துக் கொடுக்கக்கூடியதும், ஆழ்வார்களாலும், ஆசார்யர்களாலும், ரிஷிகளாலும், வேதங்களாலும் விரும்பக்கூடியதுமான அஷ்டாக்ஷர மந்திரத்தின் எட்டு எழுத்துக்களின் ஸ்தானத்திலிருந்து கொண்டு அஷ்டாக்ஷரப் பொருளான பகவான் இந்த விமானத்திற்குள் இருக்கிறார் என்று காட்டிக் கொடுக்கிறது.

விமானத்தோடு சேர்ந்துள்ள சுவரில் மேல்பக்கம் இரண்டு கம்பங்களும், கீழ்பக்கம் இரண்டு கம்பங்களும்

அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த நாலு கம்பங்களும் மேலே சொன்ன எட்டு கம்பங்களோடு சேர்ந்து பனிரண்டு கம்பங்களாகின்றன. அவை த்வாதசாக்ஷர மந்திரத்தின் பனிரண்டு எழுத்துக்களின் ஸ்தானத்திலிருந்து கொண்டு த்வாதசாக்ஷரத்தின் பொருளாய் அந்த மந்திரத்தைக் கொண்டு ப்ரதிஷ்டிக்கப்பட்டு அதையே மூலமந்திரமாகக் கொண்டு தினமும் ஆராதிக்கப்பட்டு வருகிறவரும் ஷாட்குண்ய பரிபூர்ணருமான பகவான் இருக்குமிடமிதுவேயென்று காட்டுகின்றன. அதனாலேயே "ஸ வாஸுதேவோ ரங்கேச:" என்று மங்கள சுலோகத்தில் சொல்லப்பட்டது.

விமான ரக்ஷணார்த்தமாக விநாயகர் விமானத்தின் மேல் பக்கமிருக்கிறார். கீழ்ப்பக்கத்தில் பகவானின் யோக மாயையாகிய துர்க்கை இருக்கிறாள். பகவான் நேரில் சென்று ஸம்ஹாரம் செய்ய அவசியமில்லாத காலங்களில் ஸம்ஹாரத்திற்குரியவர்களை இவளைக் கொண்டு ஸம்ஹாரம் செய்விக்கிறார்.

விமானத்தின் வாசற்படியாகிய குலசேகரன் படியில் வால்துவிசன், க்ஷேத்ரநாதன், சண்ட பிரசண்டன் முதலானவர்கள் துவாரபாலகர்களாயும் த்வார ஸ்ரீ என்கிற லக்ஷ்மியும் சத்யன் என்னும் கருடனும் எழுந்தருளியிருப்பதாய் சொல்லப்படுகிறது. விமானத்தின் பேரில் 265 தேவதைகளிருப்பதாய் பாஞ்சராத்ரத்தில் சொல்லப்படுகிறது.

ரங்க விமானத்தின் முன்புள்ள காயத்ரீ மண்டபமானது காயத்ரீயின் அக்ஷரக்கணக்கில் 24 ஸ்தம்பங்களோடு கூடியிருக்கிறது. ப்ரணவத்தை காயத்ரீயின் மாதாவாக சொல்லப்படுகிறபடியால் ஓங்காரத்தினின்றும் உண்டான காயத்ரீயால் பேசப்பட்டவனும் அதன்பொருளாயுள்ளவனும் ஸ்ரீரங்கநாதனே என்று காட்டுகிறது.

ஆக, இப்படி ஆச்சர்யகரமாயுள்ள ப்ரணவ விமானத்தில் உள்ளவர் யாரென்றால் "ஸ்ரீரங்கசாயீ பகவான்" என்று மங்கள சுலோகம் சொல்லுகிறது. விமானத்திற்குள் ரங்கநாதன் ஐந்து தலைகளோடு கூடிய ஆதிசேஷன் பேரில்,

"குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்புகாட்டி தென்திசையிலங்கை நோக்கி"

என்கிறபடி மேற்கே திருமுடியும், கிழக்கே திருவடிகளுமாக தெற்கு நோக்கியவண்ணம் தமது வலது திருக்கையால் தமது சென்னி நீண்முடியையும் இடது காத்தால் தமது திருவடிகளையும் காட்டிக் கொண்டு சயனித்திருக்கிறார்.

இதனால் அவர் அடியார்களுக்குப் போதிப்பது யாதெனில்:- நான் சயனித்திருக்கும் ஆதிசேஷன் அகில பிரபஞ்சத்திலுமுள்ள ஜீவராசிகளின் ஸமுதாயம். அந்த ஜீவாத்மாக்களுக்கு நான் சேஷி (ஆண்டான்); அவை எனக்கு அடிமைகள். அந்த ஜீவாத்மாக்கள் பஞ்ச பிராணன்களோடு கூடினவையென்பதை ஆதிசேஷனுடைய ஐந்து தலைகளும் காட்டுகின்றன. அந்த ஜீவராசிகளின் மேலிருந்துகொண்டு "ஆத்மாநம் வாஸுதேவாக்யம் சிந்தயந் மதுஸூதநம்" என்னும்படி அந்த ஜீவ ஸமூஹ ரக்ஷண சிந்தனையைச் செய்து கொண்டு "உறங்குவான்போல் நான் கள்ள நித்திரை செய்கிறேன். சென்னி நீண்முடியாய்" என்று ஆழ்வார் அழைத்தபடி எனது வலது கையில் காட்டப்படும் எனது தலையிலுள்ள நீண்ட கிரீடமானது என்னையே பராத்பரனென்றும் தேவாதி தேவனென்றும், எல்லாவற்றிற்கும் நானே நாதனென்றும் நியாமகனென்றும், ஜகத் காரணவஸ்து நான்தானென்றும் காட்டித் தருகிறது. ஆதலால்

"நாகமிசைத் துயில்வான்போல் உலகெல்லாம் நன்கொடுக்க
யோகணையும் என்னைப்பட நாகணைக் கிடந்த
பருவரைத்தோள் பரமபுருடன்"

என்று ஆழ்வார் பேசினார். "ரங்கநாத ஜகந்நாத" வென்ற மங்கள ச்லோகமும் சொல்லுகிறது.

தவிர, ரங்கநாதன் தென்திசை நோக்கிக்கொண்டிருப்பதின் காரணம் என்னவென்றால்:- வாஸுதேவனாகிய பகவானுடைய வைகுண்டத்திற்கு தெற்கிலேயே ப்ரக்ருதி மண்டலமிருக்கிறது. அதில் ஆழ்ந்து கிடக்கும் ஸகல ஜீவர்களும் அதிலிருந்து வெளிப்பட்டு உய்ந்து பகவானை அடைய வேணுமென்னும் ஆசையோடு அந்த ப்ரக்ருதியை கண்டறிந்த குலசேகராழ்வார் நோக்குகிறார். இதைக்

"வன்பெரு வானகமுய்ய அமருய்ய மண்ணுய்ய
மண்ணுலகில் மனிசருய்ய
துன்பமிகு துயரகல அயர்வொன்றில்லாச் சுகம்வளர
அகமகிழும் தொண்டர் வாழ
அன்பொடு தென்திசை நோக்கிப் பள்ளிகொள்ளும்
அணியரங்கன்"

என்று பாடினர்.

மேலும் "விபீஷணஸ்து தர்மாத்மா நதுராக்ஷஸ சேஷ்டித:" என்கிறபடி ரஜோகுண தமோகுண சேஷ்டைகளான ராக்ஷஸ சேஷ்டைகளை விட்டு ஸத்வகுணமுடையவனாய் தர்மானுஷ்டானமுடையவனாய் விபீஷணனைப் போல் ஸகலத்தையும் விட்டு என்னையே சரண்யனாக வரித்து சரணாகதியைப்பண்ண யார் வருகிறார்களென்று நோக்கிக் கொண்டிருக்கிறேன். எனது இடது திருக்கையால் காட்டிக் கொடுக்கும் தத்வம் யாதெனில், இந்த ஸம்ஸாரத்தில் நின்றும் தப்ப உபாயம் என் திருவடிகளன்றி வேறில்லை எனத் தெரிந்து என திருவடிகளைப் பற்றுங்கள். ஏனெனில் பெருக்காற்றில் இழியுமவன் துறை தெரிந்து அதில் இறங்குவது போல், என்னையடைய இறங்கும் துறையாய் என் திருவடிகளிருக்கின்றன. ஆதலால், "சார்வே தவநெறிக்கு தாமோதரன் தாள்கள் என்று துணிந்து பாதமடைவதோர் பாசத்தாலே, மற்ற வன்பாசங்கள் முற்றவிட்டு பற்றென்று என்னையேபற்றி கழல் காணக்கருதும் கருத்துடையராய், படிக்களவாய் நிமிர்த்த நின்பாதபங்கயமே தலைக்கணியாய்" என்று பிரார்த்தித்து "கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையீர் எண்ணும் திருநாமம் திண்ணம் நாரணமே" என்கிறபடி திருவஷ்டாக்ஷரத்தை ஜபித்துக் கொண்டு பண்டே நாள் பணித்த பணிவகையே எனது கமல பாதங்கண்டு வினையாயினவெல்லாம் தொலையப்பெற்று, எனது தாள்களை தலையில் தரித்துக் கொண்டு பிடித்தேன், பிறவிகெடுத்தேன், பிணிசாரேன், மடித்தேன் மனை வாழ்க்கையில் நிற்பதோர் மாயையை என்று சொல்லி உற்றேன் உகந்து பணி செய்து உன் பாதம் பெற்றேன் ஈதே இன்னும் வேண்டுவது எந்தாய் என்று வேண்டி குன்றாமல் உலகளந்த அடியானை என்னையடைந்து உய்ந்து போங்கள் என்று காட்டிக் கொடுப்பதே.

பெரிய பெருமாளாகிய மூலவருக்கு முன்புள்ள விம்ஹாஸனத்திலுள்ள உத்ஸவ மூர்த்தியாகிய ரங்கநாதன் ஸ்ரீதேவி, பூதேவிகளுடன் திருக்கையிலே பிடித்த திவ்யாயுதங்களும் வைத்த அஞ்சலென்ற கையும் கவித்த முடியும், முகமும் முறுவலும் ஆஸனபத்மத்தில் அழுத்திய திருவடிகளுமாய் நின்று கொண்டு ஸேவை கொடுக்கிறார். இப்படி நிற்கும் நிலையின் பொருள்:-புன்முறுவல் பூத்த முகத்தோடு கூடிய ரங்கநாதன் தம்மிடம் வருமவர்களைப் பார்த்து "நீங்கள் என்னுடைய பக்கத்தில் வரத் தயங்காதீர்கள். நீங்கள் செய்த அபராதங்களைக் கண்டு பொறுக்காமல் தண்டிப்பேனென்று பயப்பட வேண்டாம். நான் உங்களுக்கு அபயம் கொடுக்கிறேன். உங்களை ரக்ஷிக்கத் தேவையான ஞானசக்த்யாதிகள் என்னிடமிருக்கின்றன. உங்களுடைய அபராதங்களை பொறுப்பிக்கும் பொருட்டே என்னுடை க்ஷமாகுணம் பூமிபிராட்டியாய் இடது பக்கத்தில் வீற்றிருக்கிறாள். உங்களுக்கு அநுகூலத்தைச் செய்ய 'தேவ்யா காருண்யரூபயா' என்கிறபடி என்னுடைய தயாகுணம் ஸ்ரீ தேவியாய் எனது வலது பக்கம் வீற்றிருக்கிறாள். ஆனபடியால் உங்களுக்குச் சிபார்சு செய்ய உங்கள் மாதாக்களான ஸ்ரீதேவியும், பூமிதேவியும் என் பக்கத்திலிருக்கும் போது என்னையடைய யோசிக்க வேண்டாம். நான் உங்களுக்காகவே சங்க சக்ராதி ஆயுதங்களை பிடித்துக் கொண்டிருக்கிறேன். அவைகளில் பூதாதி தாமஸாஹங்காரம் சார்ங்க மென்னும் வில்; இந்திரியாதி ஸாத்விக அஹங்காரம் பாஞ்சஜந்யம் என்னும் சங்கு; சலநாத்மகமான மனஸ் தத்வம் ஸுதர்சனமென்னும் சக்கரம்; புத்தி தத்வம் கௌமோதகி என்னும் கதை; மூலப்ரக்ருதியே ஸ்ரீவத்ஸம்; ஞானமே நந்தகமென்னும் கத்தி என்று தெரிந்து கொள்ளுங்கள். வேதாந்த தேசிகரும் 'பொன்னு மூலப் பிரகிருதி மறுவாக மான்தண்டாகத் தெருள் மருள் வாள் மறைவாக வாங்காரங்கள் சார்ங்கஞ்சங்காக மனந்திகிரியாக இருடீகங்களீரைந்துஞ் சரங்களாக விருபூத மாலைவனமாலையாகக் கருடனுருவா மறையின் பொருளாங் கண்ணன்' என்றார். நான் அந்த ஆயுதங்களை என் கையில் பிடித்துக் கொண்டு என்வசமாக்கி வைத்திருப்பது போல் நீங்களும் உங்கள் மனம், புத்தி, அஹங்காரங்கள் முதலானதுகளை உங்கள் ஸ்வாதீனத்தில் வைத்துக் கொள்ளுங்கள். அப்பொழுதுதான் என்னையடைய தேவையான ஆத்ம

குணங்களான சமதமாதி குணங்கள் ஏற்படும்" என்று உபதேசிப்பதாயிருக்கிறது.

இந்த தத்துவத்தையே பிள்ளை லோகாசாரியார் தமது ஸ்ரீவசனபூஷணத்தில் அடியில் வருமாறு எழுதியுள்ளார். 'ஆதம குணங்களில் ப்ரதானம் சமமும் தமமும். சமமாவது அந்தஃகரண நியமனம்; தமம் பாஹ்யகரண நியமனம். இவையிரண்டும் உண்டானால் ஆசார்யன் கைபுகுரும்; ஆசார்யன் கைபுகுந்தவாறே திருமந்த்ரம் கைபுகுரும்; திருமந்த்ரம் கைபுகுந்தவாறே வைகுந்தமாநகர் மற்றது கையதுவே என்கிறபடி ப்ராப்ய பூமி கைபுகுரும்."

ஸ்ரீவைஷ்ணவ ஸமயாசாரப்படி ஆசார்யனாயிருப்பவன் சமதமாதி குணங்களில்லாதவனை தனக்கு சிஷ்யனாக்கிக் கொண்டு அவனுக்கு பஞ்ச ஸம்ஸ்காரங்களை செய்து வைப்பான். ஏனெனில் பகவானுடைய தரிசனத்தைப்பெற முக்கியமாய் வேண்டியது ஒருமைப்பட்ட மனதும் இந்திரிய நிக்ரஹமும். அதுவிரண்டுமில்லாவிடில் செய்யும் மற்ற ஸம்ஸ்காரங்கள் பயன் பெறு.

41. பஞ்ச ஸம்ஸ்காரங்கள்

தாப: புண்ட்ரஸ்ததாநாம, மந்த்ரோயாக:ச்ச பஞ்சம: என்கிறபடி ஒரு ஆசார்யன் தன்னையடைந்த சிஷ்யனை ஒரு வருஷ காலமோ அல்லது ஆறுமாத காலமோ அல்லது குறைந்தபக்ஷமாக மூன்று மாதமோ பரிசோதனை செய்து திருப்தியானபின் அந்த சிஷ்யன் சமதமாதி குணங்களையுடையவன் என்பதற்கு அடையாளமாக அவனது தோளில் சங்கு சக்ரங்களைப் பொறித்தல் தாபஸம்ஸ்காரம்.

இந்த சமதம குணங்களை அடைந்த பிறகே மற்ற ஸம்ஸ்காரங்களைப் பெற ஆசாரியனை எதிர்பார்க்க வேண்டுமென்பது பெரியாழ்வார் "என்னையும் என்னுடைமையும், உன் சக்கரப் பொறியொற்றிக் கொண்டு நின்னருளாலே பு ரி ந் தி ரு ந் தே ன்" என்று பேசியிருப்பதிலிருந்து வெளியாகிறது.

சமதமாதி குணங்களையுடைய சிஷ்யனுக்கு ஸ்பர்ச தீக்ஷை, நயன தீக்ஷை முதலானதுகளைச் செய்து அவனு

டைய சரீரத்திலுள்ள குண்டலினீ சக்தியை விழிக்கச் செய்து, கீழ்நோக்கியோடிக்கொண்டிருக்கும் நாடிகளின் ஓட்டத்தை மேல் முகமாக்கி அப்படி ஊர்த்வமுக சக்தி ஏற்பட்டதற்கு அறிகுறியாக சிஷ்யன் நெற்றி முதலான இடங்களில ஊர்த்வ புண்ட்ரம் என்னும் சின்னத்தை இட்டுவிடல புண்ட்ர ஸம்ஸ்காரம்.

சிஷ்யன் தன்னை ஸ்வதந்த்ரனாக நினையாமல் பரமாத்மாவுக்கு அடிமைப்பட்டவனென்று தெரிந்து அப்படியே எண்ணிக்கொண்டிருக்கும் பொருட்டு "ஸ்ரீனிவாஸதாஸன்" அழகிய 'மணவாளதாஸன்' போன்ற தாஸ்ய நாமத்தை அளித்தல் நாம ஸம்ஸ்காரம்.

தாஸ்ய நாமத்தைப் பெற்றிருந்தாலும், சிஷ்யன் தான் ஸர்வேச்வரனுக்கு உரியவனென்றும் தனக்கு தான் உரியவனல்லனென்றும் ஒழிந்து ஸர்வவித பந்துவான நாராயணனுக்கே எல்லா கைங்கர்யங்களையும் செய்யப் பெறவேணுமென்றும் ஞானத்தையுண்டாக்கி மோக்ஷத்தையடைய செய்விக்கும் மந்த்ரமாகிய திருமந்திரம் என்னும் அஷ்டாக்ஷரத்தையும் அதன் பொருளையும் உபதேசித்தல் மந்த்ர ஸம்ஸ்காரம். அதற்கு மேல் ஏற்கனவே புண்ட்ர ஸம்ஸ்காரத்தினால் விழிக்கச் செய்திருக்கும் குண்டலினீ சக்தியை நடுநாடி என்னும் ஸுஷும்னையில் பிரவேசிக்கச் செய்து ஆறு ஆதாரங்களுக்கும் மேல் சென்று ஸஹஸ்ரார கமலத்திற்கு மேலுள்ள திருமாமணி மண்டபத்தில் பகவானைக் கண்டு தரிசிக்கும்படி செய்து வைப்பதுயாக ஸம்ஸ்காரம். இதுவே ஆசார்ய அபிமானத்தின் பயன்.

வேதாந்த, தேசிகரும், திருமாலடி காட்டிய நம் தேசிகரைச் சேர்ந்தோம் என்றார். திருவரங்கத்தமுதனாரும் "இருவினை தீர்த்து அரங்கன் செய்தாளையோடு ஆர்த்தான்" என்றும் அரங்கன் செய்யதாளிணைகள் போலிந்தியன்று பெறுத்தும் இராமானுச என்னும் "பரன்பாதம் என் சென்னிதரிக்க வைத்தான்" என்றும் பேசினார்.

42. திருவாசி

உத்ஸவருக்கு ஸமர்ப்பித்திருக்கும் திருவாசி அவர் பெருமையானவர் என்பதைக் காட்டி ஸமஸ்

தரும் பிரணவத்தில் உதித்து லயமாகுமென்பதையும் அறிவிக்கிறது.

43. கதவுகள்—திரை

இவை அர்ச்சாவதார திருக்கோலத்தை ஸேவார்த்திகளுக்குத் தெரியவொட்டாமல் மறைத்து நீக்கின போது அந்தத் திருக்கோலத்தைக் காட்டிக் கொடுக்கிறது. அவைகள் அஹங்கார மமகாரங்களின் ஸ்தானத்திலிருந்து கொண்டு அவை நீங்காதபோது பகவானுடைய தரிசனமாகிய ஸாக்ஷாத்காரம் கிடைக்காதென்பதையும் நீக்கின போது பகவத் ஸாக்ஷாத்காரம் கிடைக்குமென்பதையும் உணர்த்துகிறது. ஆனபடியால் எல்லோரும் பகவத் தரிசனத்தைப் பெறும்பொருட்டு அதற்கு விரோதியாயுள்ள அஹங்கார மமகாரங்களை ஒழிக்க வேண்டுமென்னும் தத்துவத்தைக் காட்டுகிறது.

44. திருமடைப்பள்ளி

பாஹ்யாலயத்திலுள்ள மடைப்பள்ளி தேஹாலயத்திலுள்ள ஜாடராக்னி ஸ்தானத்தை உணர்த்துகிறது.

45. வாத்தியங்கள்

யோகிகள் சமாதியிலிருந்து ப்ரணவத்யானத்தைச் செய்து கொண்டு ஆத்ம ஸமர்ப்பணமான நிவேதனத்தைச் செய்யும் போது அவர்களுடைய ஹ்ருதயத்தில் உண்டாகும் ப்ரணவநாதங்களாகிய தசநாதங்களின் தத்துவத்தை ஸாதனுலயங்களில் நிவேதன காலத்தில் செய்யும் வாத்திய கோஷங்கள் காட்டிக் கொடுக்கின்றன என்றும், அந்த தசநாதங்கள், மணியினது சப்தம் போலவும், மேகத்தினது கர்ஜனை போலவும், கடலினது பேரொலி போலவும், மத்தள த்வனியைப் போலவும், பேரிகையினது முழக்கம் போலவும், வீணையினது நாதம் போலவும் தாளத்தினது சப்தம் போலவும், வண்டுகளின் ரீங்காரம் போலவும், ஸிலம்பினது அரவம் போலவும், சங்கத்தினது நாதம் போலவும் இருக்குமென்றும் யோகமுறையறிந்தோர் சொல்லுகிறார்கள்.

46. ஸ்ரீரங்க நாச்சியார் ஸந்நிதி

ஆலயத்தின் மங்களத்தை உத்தேசித்து ஒரு மங்கள தேவதையை பிரதிஷ்டைபண்ண வேண்டியது அவசிய

மென்ற ஆகமம் விதிக்கிறது. அந்த விதியின்படியே ஸ்ரீரங்கநாச்சியார் ஸந்நிதி அமைக்கப்பட்டிருக்கிறது. அங்குள்ள ஸ்ரீரங்கநாச்சியார் பிரகிருதியின் அதிஷ்டான தேவதை என்று சொல்லப்படுகிறது. இந்த நாச்சியார் ஸந்நிதி ஸ்ரீரங்கநாதன் ஸந்நிதிக்கு வெளியில் தனியாக அந்த ஸந்நிதியோடு சம்பந்தமன்னியில் பிரத்யேகமாய இருந்து வருகிறது. அப்படியிருப்பதினால் சமாதி நிஷ்டர்களான பிரம்மவித்துகள் பிரகிருதியான சரீரத்துடன் கூடியிருந்தாலும் அந்த பிரகிருதி குணங்களில் ஒட்டாமலும் அவை தம்மிடத்தில் அணுகாமலும் பிரகிருதியை தங்கள் வசத்தில் வைத்துக் கொண்டு புளியம் பழத்துக்கும் அதன் ஓட்டுக்கும் ஸம்பந்தமில்லாமல் பார்வைக்கு நன்றென விளங்குவது போல் விளங்க வேண்டும் என்னும் உண்மையை பகவான் தமது அர்ச்சா சமாதியில் அறிவிக்கிறார். இந்த உண்மையை லக்ஷ்மீநாராயண விக்ரஹம் விளக்கிக் காட்டுகிறபடியால் பெரியாழ்வார், தொண்டரடிப் பொடி ஆழ்வார்கள் லக்ஷ்மீநாராயண விக்ரஹத்தை பூஜித்து வந்ததாய் தெரிகிறது.

ஸ்ரீரங்கநாச்சியார் பெண்ணாய் பிறந்தவர்கள் அனுஷ்டிக்க வேண்டிய ஸ்திரீ தர்மங்களை, தான் அனுஷ்டித்து அதன் மூலம் அவர்களுக்கு போதிக்கிறார்.

47. ஐந்து குழி மூன்று வாசல்

ஐந்து குழிகளும் பஞ்சேந்திரியங்களைக் குறிக்கின்றன. எப்படியெனில் "குலமுதலடும்தீவினைக் கொடுவன் குழியில் வீழ்க்கும் ஐவரை" என்கிறார் நம்மாழ்வார். திருமங்கை மன்னனும் 'கொள்ளக் குறைவிலாதஇடும்பைக்குழி' என்றார். வன்குழியென்றும் இடும்பைக்குழியென்றும் — கர்ப்பவாஸத்தை அடையச் செய்கிறது பஞ்சேந்திரியங்களேயாதலால் இந்த ஐந்து குழிகளும் கர்ப்பவாஸத்துக்கும் மறு பிறப்புக்கும் காரணமான பஞ்சேந்திரியங்களைக் காட்டுகின்றன.

மூன்று வாசல்இரண்டு கண்களையும் அதற்கு மேல் பட்டு புருவமத்தியிலுள்ள ஞானக் கண்ணையும் குறிக்கிறது.

மேல் கண்ட இரண்டாலும் வெளியாகும் உண்மை யாதெனில், பிறப்புக்கு காரணமாயிருக்கும் பஞ்சேந்திரியங்களை அடக்கிக் கொண்டு, ஞானக்கண்ணால் பார்க்கிறவர்களுக்குப் பரமபதவாசல் திறந்து பகவானுடைய ஸாக்ஷாத்காரமென்னும் தரிசனம் கிடைக்குமென்பதே.

48. சந்திர புஷ்கரணி

இது புருவ மத்யஸ்தானத்திற்கு மேலுள்ள சந்திர மண்டலத்தின்கீழ் அமிருத தாரையிருக்குமிடத்தைக் குறிக்கிறதாகச் சொல்லப்படுகிறது. சந்திர புஷ்கரணி ஸ்நான தத்துவம் என்னவென்றால் அமிருத தாரையுண்டாகுமிடத்திலிருந்து அதைப் பெருகச் செய்து ராமானுஜர் வைகுண்டகத்யத்தில் "அம்ருத ஸாகராந்தர் நிமக்ந ஸர்வாவயவ: ஸுகமாஸீத" என்று சொன்னபடி எல்லா அவயவங்களையும் அமிருததாரையால் நிரம்பச் செய்து கொண்டு சுகமாயிருப்பதேயாம். பங்குனி உத்ஸவம் நீங்கலாக மற்ற எல்லா உத்ஸவங்களிலும் பெருமாள் சந்திர புஷ்கரணியில் தீர்த்தம் ஸாதிக்கிறபடியால் எல்லா உத்ஸவங்களின் கருத்து ஒவ்வொருவரும் தங்கள் சரீரத்தை அமிருத தாரையால் நிரப்பிக் கொண்டு பகவானைத் தியானித்துக் கொண்டு சுகமாயிருக்க வேண்டுமென்பதாம்.

49. உத்ஸவ தத்வம்

பூர்வபீடிகை: ஸ்ரீரங்கநாதனுக்கு நித்யோத்ஸவ, பக்ஷோத்ஸவ, மாஸோத்ஸவ, ஸம்வத்ஸரோத்ஸவங்கள் ஏற்பட்டிருக்கதில் நித்யமாக நடக்க வேண்டிய நித்ய உத்ஸவம் நீங்கலாக, மற்றவைகள் நடந்தேறி வருகின்றன. ப்ரம்மோத்ஸவமென்னும் த்வஜாரோஹண உத்ஸவம் முக்கியமானதாயிருந்தாலும், ரங்கநாதன் ஸந்நிதியில் மார்கழி மாதத்தில் நடக்கும் அத்யயன உத்ஸவமென்னும், திருமொழி திருவாய்மொழித் திருநாளாகிய பகல்பத்து, இராப்பத்து உத்ஸவங்களே முக்யமானதாகக் கருதப்படுகிறது. ஏனெனில், "காட்டினான் திருவரங்கம் உய்பவர்க்குய்யும் வண்ணம்" என்று தொண்டரடிப்பொடிகள் அருளிச் செய்தபடி எம்பெருமான் திருவடிகளில் ஆத்மாவை ஸமர்ப்பித்து உஜ்ஜீவிக்கும் மார்க்கத்தை இந்த உத்ஸவம் காட்டிக்கொடுக்

றது. ஆகையால் இதற்கு மோக்ஷோத்ஸவம் என்றும் பெயராயிற்று.

50. வேதபாராயணம்

ஆதியில் அத்யயன உத்ஸவம் மார்கழி மாதம் சுக்ல பக்ஷம் ஏகாதசி முதல் பத்துநாள் பஞ்சதாரான ரூபமான யஜுர் வேதபாராயணத்துடன் நடந்து வந்தது. மனிதர்களுக்கு பிராம்ம முகூர்த்தம் என்னும் விடியற்காலம் பகவத் ஸ்தோத்திரங்களைச் சொல்லவும், ஜபம், த்யானம் செய்யவும் சிறந்ததாகையால், அதைப்போல தேவர்களுக்கும் ராத்ரியான தக்ஷிணாயனத்தின் கடைசியாய், பகலான உத்தராயணத்துக்கு முன்னதாய் இருக்கும் மார்கழி மாதம் பகவத் முகோல்லாஸமாக வேதங்களை அத்யயனம் செய்ய சிறந்ததாகிறது.

51. தமிழ் வேதத்தின் உற்பத்தி

திருமங்கைமன்னன் வைபவம்: திருமங்கைமன்னன், ரங்கநாதனிடம் அஷ்டாக்ஷர மந்திரத்தை உபதேசம் பெற்று வடக்கே ஹிமாலயத்தில் திருப்பிரிதி முதலான திவ்ய தேசங்களை ஸேவித்து அங்கங்கேயுள்ள அர்ச்சாமூர்த்திகளை தனக்குப் ப்ரத்யக்ஷ தரிசனம் அளிக்கும்படி பிரார்த்திக்க, அது கிடைக்காமையாலே, "இத்தளூரீர்! வாழ்ந்தே போம் நீரே" என்றும் "நும்மடியாரெல்லாரோடும் ஒக்க எண்ணியிருந்தீர் அடியேனை" என்றும் பேசிவிட்டு, திருவரங்கத்தையடைந்து ரங்கநாதனிடத்தில் "ஏழை ஏதலன்" என்னும் பதிகத்தைப் பாடும்போது "மாக மாநிலம் முழுதும் வந்திறைஞ்சும்" என்று பாடினார். அதைக் கேட்ட ரங்கநாதன் ஆழ்வாருக்கு மனைவாழ்க்கையில் அருசியும் வைராக்யமும் ஏற்படவில்லை என்று அறிந்து, அவை உண்டாகும் பொருட்டு, மற்ற திவ்ய தேசங்களுக்கும் சென்று தரிசித்துவரும்படி நியமித்தார். அந்த நியமனத்தின்படி திருவிண்ணகர் என்னும் உப்பிலியப்பன் ஸந்நிதிக்குச் சென்று அங்குள்ள அர்ச்சாமூர்த்தியிடம் "உன்னைக் காண்பதோரருளெனக் கருளுதியேல் வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே!" என்றார். அப்படியும் பகவத் ஸாக்ஷாத்காரம் ஏற்படவில்லையாதலால் மற்ற

திவ்ய தேசங்களுக்கும் சென்று தரிசித்து பாசுரங்கள் பாடின பிறகு அவதாரங்களைப் புகழ்ந்து பாடினார். அதன் பிறகு மானிடர்களைப் பார்த்து "புள்ளூரும் பொன்மலையை காணாதார் கண்ணென்றும் கண்ணல்ல கண்டாமே" என்றும் "தொண்டர்க்கினியானைக் கேளாச் செவிகள் செவியல்ல கேட்டாமே" என்றும் பரோபதேசம் பண்ணிக்கொண்டு தன்னுடைய அவதார தினமாகிய திருக்கார்த்திகையில் ஸ்ரீரங்கநாதனிடம் வந்தபோது, ரங்கநாதன் ஆழ்வாரை நோக்கி "ஆழ்வீர்-ஸம்ஸாரிகளை நிந்திக்கவும் பரோபதேசம் செய்யவும் துணிந்த உமக்கு பகவத் ப்ராப்தி உண்டென்று நீர் நிச்சயித்துக் கொண்டீரோ" என்று கேட்டார். ஸர்வ ஸ்வதந்த்ரனான எம்பெருமான் தனக்கு இன்னும் சில ஜன்மங்களைக் கொடுத்துவிட்டால் என் செய்வதென்று பயந்து "ஆற்றங்கரை வாழ்மரம்போல் அஞ்சுகின்றேன்" என்றும் "இருபாடெரி கொள்ளியினுள் எறும்பே போலுருகி நிற்கும்" என்றும், "அணியார் பொழிலரங்க நகரப்பா! துணியேனினி நின்னருளல்ல தெனக்கு, மணியே! மணி மாணிக்கமே! மது சூதா! பணியா யெனக்குய்யும் வகை பரஞ்சோதீ" என்று பிரார்த்தித்தார் ஆழ்வார். பெருமான் திருவுள்ளமிரங்கி, பெரியாழ்வார் சந்ததியாய் ஆண்டாளோடு ஸ்ரீரங்கம் வந்து அதுமுதல் ரங்கநாதன் ஸந்நிதி காரியங்களை ஆண்டாளின் பிரதிநிதியாய் நிர்வஹித்துக் கொண்டிருக்கும் உத்தம நம்பியை அழைத்து அவர் செய்யும் திருக்கார்த்திகை திருவிளக்கு ஸமர்ப்பிக்கும் கைங்கர்யத்தின் மூலம் சுத்த ஸத்வ நிலையை அடைந்தவர்களே பரம பதத்தையடைந்து நித்ய சூரிகளோடே ஒரு கோவையாகிக் களிக்கலாமென்பதைக் காட்டிக் கொடுக்கும்படி நியமித்தார். உத்தம நம்பிகளும் பகவான் நியமித்தபடி காட்டிக்கொடுக்க ஆழ்வாரும் கண்டு தெளிந்தார். அதன்பின் பெருமான் திருக்கார்த்திகை உத்ஸவத்தைக் கண்டருளி "உயர்நின்ற தோர் சோதி"யின் தத்வத்தையும் காட்டிக்கொடுத்து, அதுவே நம்மாழ்வார் முதலானவர்களுக்கு தாம் காட்டிக் கொடுத்த தத்வம் என்று திருமங்கை மன்னனுக்குச் சொன்னார்.

திருமங்கை மன்னனும், திருநகரியிலிருந்து நம்மாழ் வாரை ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளிப்பண்ணிக்கொண்டுவரச் செய்து, அவருக்கு காட்டிக்கொடுத்த தத்வத்தை லோகத்

தார் அறியும்படி உத்ஸவமாய் நடத்திக்காட்டும்படி ப்ரார்த்தித்ததுமன்றியில், அவர் பாடிய திருவாய்மொழிக்கு வேதஸாம்யம் கொடுத்து வேதத்தை ஒக்க அத்யயன உத்ஸவத்தில் கேட்டருள வேணுமென்று பெருமாளை வேண்டிக் கொண்டார். பெருமாளும் திருவுள்ளமுவந்து நம்மாழ்வாருக்கு ஸ்ரீமுகம் அனுப்பி அவரை வரவழைத்து உத்ஸவத்தை நடத்தித் தமிழ் வேதமாகிய திருவாய்மொழிக்கு வேதஸாம்யம் கொடுத்து அதைக் கேட்டருளினர்.

52. கார்த்திகை தீபம்

இது கார்த்திகை மாதம் பௌர்ணமி தினம் நடக்கிறது. அன்று கொளுத்தும் சொக்கப்பனை திருவிக்ரமாவதார தத்வத்தைக் காட்டுகிறது.

திருக்கார்த்திகைதினம், ரங்கநாதன் ஸந்நிதி மடப்பள்ளியில் ஹோமம் செய்து ப்ரதிஷ்டை செய்யப்பட்ட அக்னியிலிருந்து ஏற்றப்பட்ட ஒன்பது விளக்குகள் அவ்விடம் பரப்பியிருக்கும் நெல்லின்பேரில் வைக்கப்படும். இவற்றின் நடுவிலிருக்கும் வெள்ளி விளக்கு ப்ரதானம். மற்றவை மண்ணால் செய்த அகல்விளக்குகள். ஜீவாத்மாக்கள் ஸத்வத்தில் ஸத்வம், ஸத்வத்தில்ரஜஸ், ஸத்வத்தில்தமஸ்-என்ற ஒன்பது மிச்ரகுணங்களோடு கூடியிருக்கின்றன. அவற்றில் சுத்த ஸத்வமே மேலானது-வெள்ளி விளக்கு சுத்த ஸத்வத்தைக் குறிக்கிறது.

மணியக்காரரால் கோயிலின் ஸகல விருதுகளுடன் ஆண்டாளின் ப்ரதிநிதியான உத்தம நம்பிகளை அவர் திருமாளிகையிலிருந்து அழைத்து வந்து மடப்பள்ளிக்குச் சென்று, தீபங்களுக்கு நடக்கவேண்டிய பூஜைகளைச் செய்தவுடன், அந்த ஒன்பது விளக்குகளும் மேள வாத்தியங்களோடு ஸந்நிதிக்கு எடுத்துச் செல்லப்படும். வெள்ளி விளக்கை உத்தம நம்பி அய்யங்காரும், மற்ற மண் விளக்குகளை மற்றவர்களும் எடுத்துச் செல்வார்கள். அங்கு திரைவாங்கி ஸந்நிதிக்குள் சென்றவுடன் ப்ரதான விளக்காகிய வெள்ளி விளக்கு கர்ப்பக்ருஹத்திலுள்ள அர்ச்சகர் கையில் கொடுக்கப்படும். அவர் அதை பெரிய பெருமாளுக்கு ஆரத்தி செய்து, ஊழியக்காரரிடம் கொடுக்க, அவர்

அதை குலசேகரன் படியில் சேனைக்காவல் கெல்வின் பேரில் வைப்பார். அன்றைய உத்ஸவம் பூர்த்தியாகும் வரை அந்த விளக்கு அங்கேயே எரிந்து கொண்டிருக்கும். இதன் கருத்து சுத்த ஸத்வ ஜீவாத்மா, பரமபதம் சென்று அங்கேயே தங்கிவிடுகிறது. மற்ற எட்டு மண் விளக்குகளையும் ஊழியக்காரர் ஒன்றின்பின் ஒன்றாய் வாங்கி, குலசேகரன் படிக்கு வெளியிலிருக்கும் அர்ச்சகரிடம் கொடுக்க, அவர் அதை வாங்கி உத்ஸவருக்கு ஆலத்திசெய்து, ஊழியக்காரரிடம் கொடுப்பார். அவை ரங்கவிமானத்திற்கு வெளியிலுள்ள திருவுண்ணாழியில் வைக்கப்படும். இதனால் மிச்ர குணத்தோடு கூடின ஜீவாத்மாக்கள் பரமபதம் செல்ல முடியாது என்பதைக் காட்டுகிறது.

ஸ்ரீராமானுஜர் காலத்துக்கு முன் வெள்ளி விளக்கு உத்தமநம்பி அய்யங்காராலும், மண் விளக்குகள் அவர் பந்துக்களாலும் பெருமாளிடம் எடுத்துச் செல்லப்பட்டன. உடையவர் காலமுதல் நான்கு மண் விளக்குகளை உத்தம நம்பி பந்துக்களும், கடைசி நான்கை இராமானுசருடைய அந்தரங்க சிஷ்யரிருந்த கூரத்தாழ்வான், திருவரங்கத்தமுதனார், முதலியாண்டான், அழகிய மணவாளன் சபையாரும் எடுத்துச் செல்ல ஏற்பாடாயிற்று. "ப்ரம்மேசாதி ஸுராஸுர ஸைக்யதீப்த்வத தாஸதாஸீகண:" என்று ஆளவந்தார் அருளியபடி பெருமானுடைய பரிகரங்கள் யாவருக்கும் திருக்கார்த்திகை தீபத்தில் சம்பந்தமுண்டாயிற்று. ஸ்ரீராமானுஜர் ஸந்யாஸியானபடியால் ஹோமம் செய்து அக்னி ப்ரதிஷ்டையான தீபத்தைத் தொடக்கூடாமையால் இதில் அந்வயிக்கவில்லை

ஸ்ரீ தேவியின் ஸ்தானத்தில் கைங்கர்யத்தைச் செய்த உத்தமநம்பிகளுக்கு பிரம்மரத மரியாதைகள் செய்யப்பட்டு ஸகல பிருதுகளுடன் அவர் திருமாளிகைக்கு அழைத்துச் செல்லப்படுவார்.

பிறகு, ரங்கநாதன் புறப்பட்டுக் கார்த்திகை கோட்டை வாசல் வழியாய் சக்ரத்தாழ்வான் ஸந்நிதி வாசலுக்கு எதிரில், தென்னை மரத்தை நட்டு பனை மட்டைகள் தொடுக்கப்பட்டிருக்கும் சொக்கப்பனை கொளுத்துவதைக் கடாக்ஷிக்க கிழக்கு முகமாக நிற்பார், அதன் பின், ஸ்தானீகர் ஒரு

பெரிய பந்தத்தைக் கொளுத்தி பெருமாளுக்கு ஆலத்தி பண்ணி திருச்சுற்று முதலியின் தலையில் வைப்பார். அவர் அதை சொக்கப்பனைக்கு மங்கள வாத்யங்களுடன் எடுத்துச் சென்று, அதை மூன்று தரம் வலம் வந்து, சொக்கப்பனைக்குள் நுழைந்து, அதின் உச்சியிலேறி, எல்லோரும் காணும்படியாக பந்தத்தை உயர்த்திக்காட்டி அதினின்றும் நாலு சின்ன பந்தங்களைக் கொளுத்தி நாலு திக்குகளிலும் போடுவார். அதற்கு மேல் சொக்கப்பனைக்கு தீயை வைத்துவிட்டு கீழே இறங்குவார்.

இப்படி சொக்கப்பனை கொளுத்துவதால் பூமியை ஒரு அடியாலும், அதன் மேலுள்ள மற்ற உலகங்களை மற்றொரு அடியாலுமளந்த திருவிக்ரமாவதாரத்தின் தத்வம் காட்டப்படுகிறது. இதன் உண்மையென்னவெனில் "ஆதிப்பிரானே யென்னவல்லிருளைச் சோதி ப்ரகாசமயந்தோன் றலித்தாலதாசோ" என்று ஒரு பக்தர் ப்ரார்த்தித்தபடி திருமங்கை மன்னனும் ஆதி முதல்வனுடைய தரிசனமாகிய பகவத் ஸாக்ஷாத்காரத்துக்கு ஆசைப்பட்டவரானபடியால், அவருக்கு ஸாதனையத்தில் பகவத் ஜோதி கிடைக்காதென்றும் ஸாத்யாலயமாகிய தேஹாலயமே பகவானுடைய தரிசனத்தை பெறக்கூடிய இடமென்றும், அதை எப்படிப் பெறுகிறதென்றும் இதன் மூலமாக பகவான் காட்டித் தந்தார். அதாவது திருச்சுற்று முதலி எடுத்துச் சென்ற பந்தம் குண்டலினீ ஸ்தானத்திலுள்ளது. சொக்கப்பனையை மூன்று தரம் வலம் வருவதால் அந்தக் குண்டலினீ மூன்றரை சுற்றோடு மூலாதாரத்தில் தூங்கிக்கொண்டிருக்கிறதைக் காட்டுகிறது. சொக்கப்பனைக்குள் நுழைந்து மேலே செல்வதால் குண்டலினீ விழித்து 'ஸுஷும்னா' நாடியில் நுழைந்து ஆறு ஆதாரங்களையும் கடந்து ஸஹஸ்ரார கமலத்தையடைந்தவுடன் அங்குள்ள "உயர்நின்றதோர் சோதியாய்" என்று ஆழ்வார்களால் அழைக்கப்பட்ட 'ஆதியஞ் சோதி'யாகிய பகவான் பரஞ்சோதியாய் ப்ரகாசிக்கிறானென்பதை காட்டுகிறது. தவிர, நாலு பக்கங்களிலும் நாலு பந்தங்கள் வீசப்படுவதால் அந்த 'சோதி' "காக்கெங்கும் பரந்துளன்" என்கிறபடி எங்கும் வியாபித்து இருக்கிறதென்பதை தெரிவிக்கிறது. சொக்கப்பனை நன்றாய் எரிந்து கொண்டிருக்கும்போது அதில் நின்று உண்டாகும் உஷ்ணம் ரக்ஷணுதன் மேல் தாக்

காமலிருக்கும் பொருட்டு பெருமாளுக்குமுன் திரை ஸமர்ப்பிக்கப்படும். பெருமாளைச்சுற்றி குளிர்ச்சியாயிருக்கவேண்டி இந்த உத்ஸவத்தில் மட்டும் செங்கழுநீர்ப்பூவால் திருவாசி ஸமர்ப்பிக்கப்படுகிறது.

சொக்கப்பனை கொளுத்தியான பிறகு எம்பெருமான் ஸ்ரீரங்கநாச்சியார் ஸந்நிதிக்கு எதிரிலுள்ள (கம்பன்) நாலுகால் மண்டபத்திற்குச் சென்று, அங்கே திருவந்திக்காப்பு என்னும் நீராஜனம் நடக்கிறது. முதலில் ஒரு வெள்ளிக் குடத்தில் தீர்த்தம் சேர்ப்பதோடு மாவிலையையும் சொருகி ஒரு கனத்த திரியைக் கொளுத்தி வைத்து பெருமாளுக்கு ஆலத்தி செய்யப்படும். இத்தால் பகவான் "வாஸுதேவோஸி பூர்ண:" என்கிறபடி "பூர்ணன்" என்றும் அவனுக்குள் எல்லாம் அடங்கியிருக்கிறதென்றும் காட்டிக்கொடுக்கப்படுகிறது. இரண்டாவதாக மாவு உருண்டையில் சொருகின திரியாலும், கர்ப்பூரத்தாலும், ஆலத்தி செய்யப்படும். இவை முக்கோணத்தோடு கூடிய ப்ரக்ருதியின் தத்வத்தையும், அதற்கு ஸ்ரீரங்கநாச்சியாரே அதிஷ்டான தேவதை என்பதையும் தெரிவிக்கின்றன. இப்படி இரண்டு விதமாக ஆலத்தி செய்வதினால் ப்ரக்ருதியின் தத்வத்திற்கும் புருஷசப்தவாச்யனான "புருஷன்" என்று சொல்லப்படும் பகவானுக்கும் உள்ள வித்தியாசம் விளக்கிக் காட்டப்படுகிறது.

பிறகு, ரங்கநாதன் புறப்பட்டு ஸந்நிதிக்கு முன்னுள்ள அழகிய மணவாளன் திருமண்டபத்திற்கு எழுந்தருளி அரையர்களால் கானம் செய்யப்படும் திருமங்கையாழ்வாரின் பாசுரங்களை கேட்டருளி, நம்மாழ்வாரை வைகுண்ட ஏகாதசி உத்ஸவத்திற்கு வரும்படியழைக்கும் ஸ்ரீமுகப்பட்டயத்தில் எழுத வேண்டிய வாசகத்தை அர்ச்சகர் மூலம் நியமித்து, ஸ்தாநீகர் துவாரா மிராசு கணக்குப்பிள்ளை மூலம் அதை எழுதச் செய்து, அதை வேலை முதலியாரிடம் அனுப்பிவிட்டு, அர்ச்சகர்களால் கைத்தலத்தில் எழுந்தருள பண்ணப்பட்டு, கர்ப்பக்ருஹத்துக்குள் செல்வார். இப்படி கைத்தலத்தில் எழுந்தருளுவது அர்ச்சகர் நீங்கலாக மற்ற கைங்கர்யபரர்கள் நம்மாழ்வாரை அழைத்துவர ஸ்ரீமுகப்பட்டயத்துடன் திருநகரிக்கு சென்றுவிட்டதாக காட்டப்படுகிறது.

இந்த திருக்கார்த்திகை உத்ஸவத்தை ஸேவித்த பிறகே திருமங்கைமன்னன் பகவத் தரிசனம்பெற தேவாலயத்தைக் குள் அந்தர் முகமாக நோக்கி அந்தர்யாகமென்னும் அகப்பூஜையை செய்ய வேணுமென்பதையறிந்து, அதைச் செய்யாமல் இதுவரையில் புறப்பூஜையோடு நின்று "பாவியேன் பிழைத்தவாறு" என்று சொல்லி அஞ்சினபோது பகவான் அவர் கண்ணில் தோன்றினர். அதைக் கண்டு, கும்பசம்பவர் "பூவுஞ்சாந்து என்னெஞ்சமே புனையும் கண்ணி எனதுடைய வாசகம் செய்மாலையே, வான்பட்டாடையும் அஃதே, தேசமான அணிகலமும் என் கைகூப்புச் செய்கையே" என்று பாடியபடி தாமும் "என்பெலாம் உருகியுக்கிட்டு என்னுடைய நெஞ்சமென்னும் அன்பினல் ஞானநீர் கொண்டு ஆட்டுவன் அடியேனேனே" என்றும், "என்னுடைச் சொற்களென்னும் தூயமாமாலை கொண்டு சூட்டுவன் தொண்டனேனே" என்றும் திருக்குறுந்தாண்டக ப்ரபந்தத்தை இயற்றி அதில் பெருமாள் காட்டிக் கொடுத்த தத்வத்தின் ஸாராம்சத்தை 18-19 பாட்டுக்களாகிய "இணைப்பினை இயக்கம் நீக்கி" என்கிற பாசுரத்தாலும், "பிண்டியார் மண்டையேந்தி" என்கிற பாசுரத்தாலும் வெளியிட்டார். இவைகளினுடைய ஸூக்ஷ்மம் ரங்கநாதனுடைய உத்ஸவங்களில் பெருமாள் ஸந்நிதிக்குள் எழுந்தருளும்போது காட்டப்படுகிறது.

இதுவரையில் பரமபக்தியோடிருந்த திருமங்கை மன்னனுக்கு இப்போது பரஞானமுண்டாயிற்று. அதின் அநுபவமாக திருக்குறுந்தாண்டகத்தையும் மடல்களையும் பாடி பரமபக்தி தலைகட்டினபின் திருநெடுந்தாண்டகத்தையும் பாடினர்.

53. திருமொழி திருவாய் மொழித்திருநாள் உற்பத்தி

நாதமுனிகள் தமது சிஷ்யரான உய்யக்கொண்டாருக்கு யோக மார்க்கத்தை உபதேசிப்பதாய் சொன்னபோது, உய்யக்கொண்டார் நாதமுனிகளைப் பார்த்து "பிணங்கிடக்க மணம்-புணரலாமோ" என்று பதிலுரைத்தார். "அதாவது ஸம்ஸாரிகள் ஞானசூன்யராய் சவப்பிணம்போல் பூமியிலிருக்கும் போது அவர்களைத் திருத்தி நல்வழிபடுத்தும்படி பகவானல் அனுப்பப்பட்ட நாம் அதைச் செய்யாமல் மணப்

பதற்கு ஒப்பான சமாதியில் பகவானைக் கண்டு ஆனந்திப்பதைச்செய்யலாமா? அவர்களைத் திருத்தி நன்மார்க்கராக்குவதல்லவோ நாம் செய்ய வேண்டிய வேலை'' என்று சொன்னார். அதைக்கேட்ட நாதமுனிகளும் ஆழ்வார்கள் பாசுரங்களின் நுட்பமான தத்வங்களை ஜனங்கள் கண்ணாரக் கண்டு தெளிவடையும் பொருட்டு பெருமாளுடைய புறப்பாடுகளில் அவைகளை அநேக பத்ததிகளாக ஏற்பாடுசெய்ய நினைத்தார்.

ஆனால், நாதமுனிகள் காலத்திற்குமுன், காலவிசேஷத்தால் திருவாய்மொழியும் மற்ற ஆழ்வார்களின் பாசுரங்களும் மறைந்துபோயிருந்தன. தமக்குக் கிடைத்த ஆழ்வாருடைய சில பாசுரங்களின் இன்சுவையைக் கண்டு, மறைந்து போயிருப்பவைகளை மறுபடியும் அடைய நினைத்து, நாதமுனிகள் நம்மாழ்வார் ஸந்நிதிக்குச் சென்று, யோகத்திலிருந்து கொண்டு ஆழ்வார்கள். ஆண்டாள் முதலானவர்களுடைய பாசுரங்களை நம்மாழ்வாரிடம் க்ரஹித்து ஸ்ரீரங்கத்திற்கு வந்து அவைகளை 'இசை' என்றும் 'இயல்' என்றும் பிரித்து தாளஸஹிதம் பண்ணுடன் இசைப்பாக்களை ஸேவிக்க வேண்டுமென்றும், ஏற்பாடு செய்து மார்கழி மாதம் சுக்லபக்ஷ ஏகாதசிக்கு முந்தின பத்து நாளாகிய பகல்பத்தில் திருவாய்மொழி தவிர மற்ற ஆழ்வார்களுடைய இசைப்பாக்களையும், ஏகாதசி முதல் பத்து நாளாகிய இராப்பத்தில் திருவாய் மொழியையும், இராப்பத்து முடிந்த மறுநாள் இயல்பா முழுவதையும் ஸேவிக்க வேண்டுமென்றும், சில முக்யமான பாசுரங்களை அபிநயத்துக்காட்டவும், ஹிரண்யவதம், ராவணவதம், வாமனாவதாரம், க்ருஷ்ணாவதாரம் முதலான சில முக்கிய அம்சங்களை பாமரர்கள் எளிதில் அறியும் பொருட்டு நாடக ரூபமாய் நடித்து காட்டவும் ஏற்பாடு செய்தார். அப்படிச் செய்தது நம்மாழ்வார் திருவுள்ளத்தை அனுஸரித்தே செய்யப்பட்டதாய் தெரிகிறது. எங்ஙனேயெனில், நம்மாழ்வார் பாடின "கடல் கடல் பள்ளிப்பெருமான் தன்னுடைய பூதங்களேயாய் கிடந்தும், இருந்தும், எழுந்தும், கீதம் பல பாடி நடந்தும், பறந்தும், குனித்தும் நாடகம் செய்கின்றனவே'' என்னும் பாசுரத்தை அனுஸரித்து.

நாதமுனிகள் காலத்தின் ஏற்பாட்டின்படியே உத்ஸவங்கள் நடந்து வந்து, ராமானுசர் காலத்தில் இராமானுச

னுடையாரை அந்வயிக்கச் செய்து பத்திகள் விஸ்தரிக்கப் பட்டன.

இராமானுசனுடையார் என்பவர்கள் ராமானுசருக்கு பரதந்திரர்களான, ஆழ்வான், ஆண்டான், எம்பார், அருளாளப் பெருமாளெம்பெருமானார் முதலானவர்களென்று ஆசார்ய ஹ்ருதய வியாக்யானத்தில் சொல்லப்படுகிறது. இராமானுசர் நாதமுனிகளாலும் தம்மாலும் ஏற்படுத்தப் பட்ட பத்திகள் நாடக ரூபமானதால் அவைகளை நடத்திக் காட்ட ப்ரம்மா - சிவன் - இந்திரன் ஸ்தானத்தில் தம்மையும், ஆழ்வானையும், ஆண்டானையும், மற்ற தேவர்களின் ஸ்தானத்தில் எம்பார் முதலானவர்களையும் ஏற்படுத்தினர்.

இது தவிர, "வைகுண்டம் ரங்க மந்திரம்" என்று சொல்லுகிறபடி, வைகுண்டத்திலுள்ள எல்லாம் ஸ்ரீரங்கத்திலும் அமைந்திருக்கிறதென்பதைக் காட்டிக் கொடுக்கும் பொருட்டு தாம் வைகுண்ட கத்யத்தில் அருளிச் செய்தபடி விஷ்வக்ஸேனர் முதலான எல்லா பரிஜனங்களையும் பகவானுடைய தசைகளுக்குத் தகுந்தபடி அந்தந்த கைங்கர்யங்களில் ஆக்ஞாபிக்கிறதையொட்டி. ஸ்ரீதேவி ஸ்தானத்தில் ஏற்கனவே ஆண்டாளின் பிரதிநிதியாய் இருந்துவரும் உத்தம நம்பிகளையும், மற்ற பரிஜனங்களாகிற 'நித்யஸித்தை:' என்ற நித்யஸூரிகளின் ஸ்தானங்களில் மற்றும் அநேகரையும் ஏற்பாடு செய்தார்.

54. திருநெடுந்தாண்டகம்.

இந்த உத்ஸவம் பகல்பத்துக்கு முந்தின நாள் ராத்திரி நடக்கிறது. இது நாதமுனிகளால் ஏற்படுத்தப்பட்டது. பகல் பத்து, இராப் பத்து உத்ஸவங்களினால் காட்டிக் கொடுக்கப்படும் தத்வத்தைச் சுருக்கமாக இந்த உத்ஸவம் வெளியிடுகிறது. "எந்தை தளிர்புரையும் திருவடி என் தலை மேலவே" என்று சொல்லி திருமங்கையாழ்வார் பகவானுடைய தரிசனம் பெற்றதைப் பேசும் திருநெடுந்தாண்டகம் என்னும் ப்ரபந்தம் பெருமாள் முன்பாக வியாக்யானங்களுடன் ஸேவிக்கப்படுதலால் அதை இட்டு இந்த உத்ஸவம் அழைக்கப்படுகிறது. ஒரு நூலுக்கு முன்புள்ள முகவுரை போல் ஏகாதசி உத்ஸவத்திற்கு இந்த உத்ஸவம் முகவுரையாயிருந்து வருகிறது.

55. பகல் பத்து.

இந்த உத்ஸவம் பத்து நாள் நடப்பதாலும், இதில் நடக்க வேண்டிய முக்கிய காரியமாகிய 'அரையர் ஸேவை' பகலில் நடப்பதாலும் இதற்கு பகல் பத்து என்றும் பெயர் ஏற்பட்டது. இந்த உத்ஸவத்தில் ரங்கநாதன் காலையில் ஸந்நிதியைவிட்டுப்புறப்பட்டு கிழக்கிலுள்ள அர்ஜுன மண்டபத்திற்கு எழுந்தருளி ராத்திரி எட்டு மணிக்குத் திரும்பி மூலஸ்தானம் சேருகிறார். ஸந்நிதியை விட்டு வெளிவரும் போது ஒரு ஸிம்ஹமானது தன்னுடைய குகையிலிருந்து வெளிக் கிளம்பும்போது தன் பேரிலுள்ள மயிர்களை உதறிக் கொண்டு புறப்பட்டு அடிவைக்குமாப்போலே, பெருமாள் கம்பீரமாக ஸிம்ஹநடை இட்டுக்கொண்டு புறப்படுகிறார். இது 'ஸிம்ஹ கதி' என்று சொல்லப்படுகிறது. "மாரி மலை முழைஞ்சில்" என்னும் ஆண்டாள் திருப்பாவை பாசுரத்தாலும், "கம்பத்மகள பத்ராக்ஷம் ஸிம்ம விக்ராந்த காமிநம்" என்னும் ஸீதா பிராட்டியின் வசனப்படியும் ஸ்ரீரங்கநாதனை ஸேவிப்பவர்கள், அவனுடைய ஸிம்ம கதியின் தத்வத்தை யுணர்ந்து தன்யர்களாக வேண்டுமென நினைத்த நாதமுனிகள் இந்த கதியையும் மற்ற கதிகளையும் ஏற்பாடு செய்தார்.

ரங்கநாதனே அர்ச்சையில் பரத்வமுடையவன் என்பதைக் காட்டிக் கொடுக்க ஸிம்ஹகதி ஆனவுடன் பெருமாள் மேற்கே திரும்பி இரண்டடி ஒய்யார நடை இடுகிறார். இந்த ஒய்யார நடை திருக்கார்த்திகை உத்ஸவத்தில் பேசப்பட்ட திருவிக்ரமாவதாரம் பண்ணின பராத்பரனன்றி வேறில்லை என்பதுவே, "ஞாலமளந்த பிரான்பரன்" என்றார் நம்மாழ்வார். "ஓங்கி உலகளந்த உத்தமன்" என்றான் ஆண்டாளும். ஸிம்ஹ கதியும்—ஒய்யார நடையும் சேர்ந்து வராஹ—வாமன—திருவிக்ரமாவதாரங்களைக் குறிக்கின்றன. "ஏனமாகி உலகிடந்து அன்று இருநிலனும் பெருவிசும்பும் தானாய பெருமானைக் கண்டது தென்னரங்கத்தையே" யென்றும் "பெருநிலம் ஈரடி நீட்டி பண்டொருநாள் அளந்த வனை கண்டது அணிநீர் தென்னரங்கத்தே" என்றும், திருமங்கை மன்னனும் "பொல்லாக்குறளுருவாய் பொற்கை யால் நீரேற்று எல்லாவுலகும் அளந்துகொண்ட எம்பெருமான் நளிரரங்க நாகணையான்" என்றும் "மானமிலாப் பன்றி

யாம் தேதுடைய தேவர் திருவரங்கச் செல்வனார்" என்றும் ஆண்டாளும் பாடினார்கள். அவர்கள் பாசுரங்களிலிருந்து பரத்வத்தைக் காட்டும் திருவிக்ரமாவதார, வாமனாவதாரங்களையும், வராகவதாரத்தையும் செய்தவர் ரங்கநாதனே எனத் தெரிகிறது.

நம்மாழ்வார் தமது முதல் ப்ரபந்தமாகிய திருவிருத்தத்தில் "எறிதிரை வையம் முற்றும் ஏனத்துருவாய் இடந்த பிரான் இருங்கற்பகம் சேர்வானத்தவர்க்கும் அல்லாதவர்க்கும் மற்றெல்லாயவர்க்கும் ஞானப்பிரானையல்லாலில்லை நான் கண்ட நல்லதுவே" என்றும், திருவாசிரியத்தில் "சிவனய னிந்திரனிவர் முதலனைத்தோர் தெய்வக்குழாங்கள் கை தொழக்கிடந்த தாமரையுந்தித் தனிப்பெருநாயகா! மூவுலகளந்த சேவடியோயோ" என்றும் அருளிச் செய்தார். முதலாழ்வார்களும் ஈடுபட்டது இந்த இரண்டு அவதாரங்களிலேதான். "தாவியநின் இணையடிக்கே எம்பிறப்புமாளாகி இருக்கவருள்" என்று அவர்களில் ஒருவர் பாடினார். மற்றொருவர் "ஏனத்துருவாயுலகிடந்த ஊழியான் பாதம் மருவாதார்க்கு உண்டோவான்" என்று பாடினார். "காண்மின்கள் உலகீர் என்று கண்முகப்பே நிமிர்ந்த தாளிணையன்" என்றார் சடகோபர். அப்படிக் காட்டிக்கொடுத்தது, "அன்று பாரளந்த பேரதை பொன்றி வானினமேல் தேவராயிருப்பதற்காகவே நாம் மண்ணளந்த இணைத்தாமரைகள் காண்பதற்கென்று எண்ணாளும் நின்று இமையோர்கள் ஏத்தி இறைஞ்சர" என்றும் "உலகமளந்த திருத்தாளிணை நிலத் தேவர் வணங்குவர்" என்றும் சடகோபர் அருளிச் செய்தார். "வையம் ஈரடியால் அளந்த உம்மைக்காணும் ஆசையென்னும் கடலில் வீழ்ந்து அயர்த்தோம்" என்றும் "அந்தரம் ஏழினூடு செலவுய்த்த பாதமது நம்மை யாளுமரசே" என்றும் "உலகளந்த பொன்னடியை அடைந்து உய்ந்தேன்" என்றும் திருமங்கை மன்னனும் பேசினார். ஆனபடியால் உலகம் உய்வதற்கு அறிய வேண்டிய தத்வம் வராக, வாமன, திருவிக்ரமாவதாரங்களினுடையதாய் இருக்கிறது. அவைகளில் வராக, வாமன அவதார தத்வம் ரங்கநாதன் ஸந்நிதியிலிருந்து வெளியில் வந்து ஸிம்ஹகதியோடு மேற்கே திரும்பி நிற்பதால் காட்டப்படுகிறது. ஒய்யார நடை ஈரடி வைப்பதால் திருவிக்ரமாவதார தத்வத்தைக் காட்டிக்கொடுக்கிறது. திருமழிசைப் பிரான் "பண்டு ஏனமாய வாமனா"

என்றும், திவ்யகவி பிள்ளைப்பெருமாளய்யங்கார் "வராக வாமனனே அரங்கா" என்றும் ரங்கநாதனைப் போற்றினர்.

வராக வாமனவதாரம் குண்டலினீ சக்தி விழிப்பையடைந்து ஸுஷும்னையில் புகும் தத்வத்தையும், திருவிக்ரமாவதாரம் அந்த சக்தி சகல ஆதாரங்களையும் தாண்டி ஸஹஸ்ராரம் வரையில் போய் சேருவதை விளக்குகிறது.

மேலே சொன்ன ஸிம்ஹகதியும்—ஒய்யார நடையாகிற வ்யாக்ர கதியும் நம்மாழ்வார் பாசுரங்களாகிய "ஞானப் பிரானையல்லாலில்லை நான் கண்ட நல்லதுவே"-"சிவனயனிந்திரனிவர் முதலனைத்தோர் தெய்வக் குழாங்கள் கை தொழக் கிடக்க மூவுலகளந்த சேவடியோயே" என்பவைகளை அனுஸரித்து ஏற்பட்டன. இராமானுசர் காலத்தில் மேலே சொன்ன "சிவனயனிந்திரனிவர்" என்கிற பாசுரத்தினுடையவும் "எம்மையும் ஏழுலகும் நின்னுள்ளே இறைவ!" என்றும், "வெள்ளேறன் நான்முகன் இந்திரன் வானவர் புள்ளூர்தி கழல் பணிந்தேத்துவரே" என்கிற பாசுரத்தினுடையவும் "பிறையேறு சடையானும் பிரமனும் இந்திரனும் இறையாதல் அறிந்தேத்த" என்று நம்மாழ்வார் பாடியபடியும் அர்த்தங்களை நாடகரூபமாயும் நடித்துக் காட்ட நினைத்து பெருமாள் புறப்பட்டவுடன் ஜீயர், பட்டர், வாதூல தேசிகர் முதலானவர்கள் மேலப்படியில் தண்டனிட்டு ஸேவிக்கிறார்கள். இது ரங்கநாதன் சிவன் அயன் இந்திரன் முதலானவர்களுக்கு மேற்பட்டவன் என்பதைக் காட்டிக் கொடுக்கிறது. இவர்கள் நடிக்கும் விதத்தைக் கண்டு வியாக்கியான கர்த்தா "ராஜ ஸேவைபண்ணுவார் தந்தாம் அடையாளங்களோடே சட்டையும் பிரம்புமாய் ஸேவிக்குமாப்போலே, இவர்களும் தந்தாம் அடையாளங்களோடேயாய் வந்து ஸேவிப்பது ஸர்வேச்வரனை" என்றார்.

ரங்கநாதனே எல்லா உயிர்கட்கும் நாதன் என்றும், "உன்னின்று உயிர்களுக்கு உற்றனவே செய்து அவர்கட்கு உய்யவே பண்ணும்பரன்" என்றும், மேலே சொன்னபடி இராமானுசர் காட்டிக் கொடுத்ததை "இறைஞ்சப்படும்பரன், ஈசன் அரங்கனென்று இவ்வுலகத்து அறம் செய்யும் அண்ணல் இராமானுசன்" என்று இராமானுச நூற்றந்தாதியில் சொல்லப்பட்டது.

பெருமாள் மேலப்படியைவிட்டு கீழே இறங்கி வடக்கே திரும்பி நின்றவுடன் அவர் முன் வந்து நிற்கும் உத்தம நம்பிகளுக்கும் கேவல்தான அதிகாரிகளுக்கும் இரண்டு உருண்டை சந்தனம் கையில் கொடுக்கப்படும். அதை அவர்கள் விநயத்துடனும் மரியாதையுடனும் பெற்றுக்கொண்டு உத்தநம்பி நீங்கலாக மற்றவர்கள் மணியக்காரரிடம் திருப்பிக் கொடுத்துவிடுவார்கள். இதன் தாத்பர்யம் அவர்கள் ரங்கநாதனுடைய கைங்கர்யத்தை துரோகமன்னியில் செய்து வருவதாய் ராஜ விசுவாசப்ரமாணம் செய்கிறார்கள். இதன் உண்மையையறியாமல் சிலர் தாங்களும் பெற்று அதை ஒரு மரியாதையாகக் கருதுகிறார்கள்.

அதன் பிறகு ரங்கநாதன் சேனை முதலியார் வாசலுக்குச் சென்று அவருக்கு மாலையை அனுப்பி சாத்தச் செய்வார். இது உத்ஸவார்த்தம் வெளியில் செல்லும் ரங்கநாதன் தமது ராஜாங்க அதிகாரத்தை சேனை முதலியாரிடம் ஒப்பிப்பதாகிறது. அங்கிருந்து புறப்பட்டு வழியிலுள்ள துலுக்க நாச்சியாருக்கு சேவை கொடுத்துவிட்டு அர்ஜுன மண்டபத்திலுள்ள ஆஸ்தானத்தில் அமர்ந்ததும் அங்கு வந்திருக்கும் ஆழ்வார் ஆசார்யர்களுக்கு பரிவட்டம் முதலான மரியாதைகள் செய்யப்படும். அதன்பின் அரையர்களுக்கு மரியாதை. இந்த மண்டபத்தில் (திருவாய்மொழி-இயல்பா நீங்கலாக) மற்ற ப்ரபந்தங்கள் ஸேவிக்கப்படும். ஸாயங்காலம் ஆறு மணிக்கு, ரங்கநாதன் அர்ஜுன மண்டபத்தைவிட்டு கர்பக்ருஹம் போய் சேர வரும் போது. கருகூலத்தின் பக்கத்திலுள்ள நாலுகால் மண்டம் வந்த பிறகு. அங்கிருந்து யாகசாலை வரையில், பத்தி உலாவிச் சென்று, திரும்பி வருவார். அந்தப் பத்தி உலாவுதலில் நடக்கும் கண்டக்கு 'ருஷபகதி' என்று பெயர். இந்த கதி, ப்ராணாயாமம் செய்ய ஆரம்பிக்குமுன் எப்படி நாடி சுத்தி செய்துகொள்வதென்பதைக் குறிக்கிறது. இந்த நாலுகால் மண்டபத்திற்கு திரும்பி வந்ததும் பானகம் விடாய்ப் பருப்பு நிவேதனம் செய்யப்படும். இது நாடி சுத்தி செய்து கொண்டவுடன் அல்ப ஆகாரம் செய்து கொண்டு இளைப்பாற வேண்டுமென்பதைக் குறிக்கிறது.

இந்த மண்டபத்தில் ரங்கநாதன் நின்றருளியிருக்கும் போது அவருக்கு அர்க்யம் முதலானவை ஸமர்ப்பித்து

திருவடி விளக்கின தீர்த்தம் விநியோகம் செய்யப்படும். இந்த பத்ததி திருவாய் மொழியிலுள்ள மேலாத்தேவர்—வைபத்தேவர் — நிலத்தேவர் என்னும் பதங்களின் அர்த்தத்தையும், தத்வபேதங்களையும் காட்டிக் கொடுக்க ராமானுஜனால் ஏற்படுத்தப்பட்டது.

'மேலாத்தேவர்' என்பவர்கள் வைகுண்டத்தில் பகவான் பக்கத்தில் அவருக்குப் அந்தரங்க கைங்கர்யத்தை செய்யுமவர்கள். அவர்கள் ஸ்தானத்தில் அர்ச்சகர்கள், (ஆண்டான் பிரதிநிதி) உத்தமநம்பி, ஸ்தானிகர் நியமிக்கப்பட்டனர். இவர்களுக்கு பெருமான் பக்கத்தில் திருவடி விளக்கினவுடன் அர்ச்சகரால் தீர்த்தம் ஸாதிக்கப்படுகிறது. 'வைபத்தேவர்' என்பவர்கள் புவர்லோகம் முதல் ஸத்ய லோகம் வரையில் வாழும் ப்ரம்மாவும் அவருக்குக் கீழ்ப்பட்ட தேவதைகளும். அவர்கள் ஸ்தானத்தில் ஜீயர்-பட்டர்-வாதூல தேசிகர் முதலானவர்கள் நியமிக்கப்பட்டனர். இவர்களுக்கு மேலாத் தேவருக்கு அடுத்தபடியாக தீர்த்தம் ஸாதிக்கப்படுகிறது. இவர்கள் "இந்திரனொடு-பிரமன்-ஈசனிமையவரெல்லாம் மந்திரமாமலர் கொண்டு மறைந்துவராய் வந்து நின்றார்" என்னும் பாசுரத்தின் தத்வத்தைக் காட்டிக் கொடுக்கும்படி பெருமானுக்கு முன் சற்று தூரத்திலே நிற்பார்கள். இவர்கள் ஸ்தானிகரால் அருளிப்பாடுபெற்றே ஸ்வாமி பக்கம் செல்ல வேண்டியவர்கள்.

'நிலத்தேவர்' என்பவர் பூமியிலுள்ளவர். இவருடைய ஸ்தானத்தில் 'ஸாது ஸ்ரீவைஷ்ணவர்' நியமிக்கப்பட்டார். இவர் நிற்குமிடத்திலேயே தீர்த்தம் ஸாதிக்கப்படும். இவர் பெருமான் பக்கம் செல்லக்கூடாதவர். தீர்த்த விநியோகம் ஆன பிறகு ரங்கநாதன் ஒய்யார நடை என்னும் வ்யாக்ரகதியில் யாகசாலை வரையில் சென்று திரும்பி நாலுகால் மண்டபத்திற்கு வருகிறார். இந்த நடை கும்பத்தைச் செய்தால் குண்டலினீ சக்தி ஸுஷும்நா நாடியில் புகுந்து புலி ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு பாய்ந்து செல்வதுபோல், பாய்ந்து செல்லுகிறதென்னும் தத்வத்தை காட்டிக்கொடுக்கிறது. பிறகு படியேற்றம்.

56. படியேற்றத்தின் தத்வம்

படியேற்றம் என்பது ரங்கநாதன் ஸந்நிதிக்கு முன்புள்ள மண்டபத்திற்கு அங்குள்ள படிகளின் வழியாக

ஏறுதல். இப்படி ஏறும்போது அரையர்கானம் செய்வார். மிருதங்கம் முதலான வாத்தியங்கள் வாசிக்கப்படும். இந்தப் படியேற்றம் ஸுஷும்நா நாடியில் குண்டலினீ சக்தி ஆறு ஆதாரங்களையும் கடந்து ஸஹஸ்ரார சக்ரம் போய் சேருவதைக் குறிக்கிறது. ஆறாவது, ஏழாவது படிகளில் பெருமாள் ஒருபுறமிருந்து, மற்றொருபுறம் திரும்பி ஆடுவதால் திருமங்கையாழ்வார் பாசுரமாகிய "நீணிலாமுற்றத்து நின்றிவள் நோக்கினாள் காணுமோ கண்ணபுரமென்று காட்டினாள்" என்பதின் அர்த்தம் குறிப்பிட்டு காட்டப்படுகிறது. அதாவது புருவ மத்யஸ்தானமாகிய 'ஆஜ்ஞாசக்ரம்' வரையில் குண்டலினீ சக்தியை பிரவேசிக்கும்படி செய்துகொண்டவர்கள் பகவானுடைய தரிசனத்தைப் பெற்று, மற்றவர்களுக்கும் பகவானிருக்குமிடத்தை "காணுமோ" என்று காட்டிக் கொடுப்பதாய் தெரிகிறது. மண்டபத்தின்மேல் ஏறினவுடன் ஸ்ரீபாதம் தாங்குவார் பெருமாளை உயரத் தூக்கி காட்டுகிறார்கள். இதனால் ஸுஷும்னையிலுள்ள எல்லா படிகளையும் ஏறிச் சென்ற குண்டலினீயுடையவர்கள் 'பரமபதம்' என்னும் மேலான ஸ்தானத்தை அடைந்து விடுவதாக காட்டப்படுகிறது.

ரங்கநாதன் படியேறி அழகிய மணவாளன் திருமண்டபத்தையடைந்து மேற்கே திரும்பின பிறகு கடதீபாராதனை செய்யப்படும். தமது சரீரத்திலுள்ள குண்டலினீ சக்தியை ஸஹஸ்ராரம் போய் சேரும்படி செய்யக்கூடியவர்கள் பரஞ்சோதியான பகவானை சோதிரூபமாய்க் கண்டு தரிசிக்கலாமென்பதை கடதீபாராதனை காட்டிக் கொடுக்கிறது. அந்த சோதியை "மேலுலகங்களின் மீது போய் மேல் தோன்றும் சோதி" என்றாள் ஆண்டாள். திருக்கார்த்திகை தினம் காட்டிக் கொடுக்கப்பட்ட தத்வங்கள் இது வரையில் நடந்த நிகழ்ச்சிகளால் விஸ்தரித்துக் காட்டப்பட்டது.

பிறகு, ரங்கநாதன் கிழக்கே திரும்பி 'ஜயவிஜயாள்' வாசலுக்கு வந்தவுடன் ஸ்ரீபாதம் தாங்குவோர் பெருமாளை தோளுக்கினியானுடன் கையில் எழுந்தருளப் பண்ணிக் கொண்டு வந்து ஸந்நிதிக்குள் நுழைவார்கள். இதுவரையில் பெருமாளுடன் கூட வந்த (சேவையனிந்ததிரள் ஸ்தானத்திலுள்ள) ஜீயர், பட்டர், வாதூல தேசிகர் அந்த வாசலுக்கு வெளியே நின்றுவிடுவார்கள். "இது பின்விட்ட

சடையானும் - பிரமனும்-இந்திரனும் தள்ளிட்டுப் புகலரிய வைகுந்தரின் வாசல்" என்பதைக் காட்டவே.

லக்ஷ்மி வாசலில் ஸ்ரீ பாதம் தாங்குவார் பெருமாளை கீழே தாழ்த்தி அதன்பின் மேலே உயர்த்தி ஸர்ப்பம் வளைந்து செல்வது போல் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போவார்கள். இப்படிச் செல்வது 'ஸர்ப்பகதி' எனப்படும். இதனால் ப்ராணாயாமத்தைச் செய்து கும்பகமூலம் அழுத்துதலால் மூலாதாரத்திலுள்ள குண்டலினீ சக்தி விழித்து ஸுஷும்நா நாடியில் நுழைந்து ஸர்ப்பத்தைப் போல் வளைந்து செல்வதை காட்டப்படுகிறது. பெருமாள் லக்ஷ்மி வாசலுக்கு முன் வந்தவுடன் இரண்டு ஜ்வாலைகளுடன் கத்திரிப் பந்தம் பெருமாளுக்கெதிரில் பிடிக்கப்படும். பகவானுடைய தரிசனத்தைப் பெறச்செய்யும் 'ஞானச்சுடர்' என்னும் ப்ரகாசத்தை, அஜ்ஞாசக்ரமாகிய புருவ மத்தியில் சூரியசந்திர நாடிகளை ஒன்றோடொன்று சேரும்படி செய்து உண்டாக்கிக்கொள்ள வேணுமென்பதாய் இந்த கத்திரி பந்தம் காட்டிக்கொடுக்கிறது. அதன்பின், பெருமாளை கர்ப்பக்ருஹத்திற்குள்ளிருக்கும் ஸிம்ஹாசனத்தில் எழுந்தருளப்பண்ணி மங்கள ஆலத்தி நடைபெறும்.

இது வரையில் நடந்தவைகளால், திருமங்கை மன்னன் திருக்குறுந்தாண்டகத்திலுள்ள "இளைப்பினை இயக்கம் நீக்கி" என்னும் பாசுரத்தின் ஸாராம்சத்தை அநுஷ்டித்து காட்டிக் கொடுக்கப்படுகிறது. இது நாதமுனிகளால் ஏற்படுத்தப்பட்டது.

ஒவ்வொரு தமிழ்மகனே வைஷ்ணவரும் நெற்றியில் இட்டுக்கொள்ளும், 'திருமண்' அல்லது 'நாமம்' என்னும் குறி இந்தப் பாசுரத்தின் (இளைப்பினை இயக்கம் நீக்கி) அர்த்தத்தைக் காட்டிக் கொடுக்கிறது. எங்கும் மின்சார விளக்குகள் ஏற்பட்டுள்ள இந்தக்காலத்தில் இந்த தத்துவத்தை தெரிந்து கொள்வது கஷ்டமல்ல. மின்சாரமென்பது ஒரு சக்தியின் இயக்கம். மானிட சரீரத்தில் வலது நாசியில் சுவாசம் நடையாகும்போது ஒருவித மின்சாரம்போன்ற சக்தியும், இடது நாசியில் சுவாசம் நடையாகும்போது ஒருவித மின்சாரம்போன்ற சக்தியும் உண்டாகிறது. இவையிரண்டும் ஒன்றோடொன்று சேருவதால்

(பாஸிடிவ்-நெகெடிவ் மின்சாரங்கள் ஒன்று சேருவதால்)
பல்புக்குள் ஒரு ப்ரகாசம் ஏற்படுவதுபோல ஸூர்ய சந்திர
நாடிகள் சேருமிடமாகிய புருவமத்தியில் ஒரு ப்ரகாசம் ஏற்
படுகிறது. இதுவே 'ஞானச்சுடர்'. பூதத்தாழ்வார் ஏற்றிய
நாகப்பேசின 'ஞானச்சுடர் விளக்கு' இதைத்தான் குறிக்கிறது.
இந்த விளக்கை எதற்காக ஏற்றவேணுமென்பதை திருவாய்
கந்தமுதனுர் "இறைவனைக்காணும் இதயத்திருள் கெட
ஞானமென்னும் நிறைவிளக்கேற்றிய பூதத்திருவடிகள்"
என்றபடி வெளியிட்டார். நெற்றியில் இட்டுக்கொள்ளும்
வெள்ளைக்கோடுகள் ஸூர்ய-சந்திர நாடிகளைக் குறிக்கின்றன.
புருவமத்தியிலுள்ள பாதம் ஞானச்சுடரைக் குறிக்கிறது.
வெள்ளைக்கோடுகளின் மத்தியிலும் பாதத்திற்கு மேலு
முள்ள ஸ்ரீசூர்ணம் ஸுஷும்நையில் நடமாடும் குண்டலினீ
சக்தியைக் குறிக்கிறது. அவ்விடம் ஸுஷும்நை அதி
ஸூக்ஷ்மமாயிருப்பதால் குண்டலினீ அதில் செல்லும்
போது அது நொந்து புண்பட்டு விடுகிறது. அந்தப்
புண்ணை ஆற்ற மஞ்சள்பொடியை இடும்படி ஆதிகாலத்து
ஏற்பாடு. இந்த ஸூக்ஷ்மத்தை அறிந்த நாதமுனிகள் மஞ்
சள் பொடியுடன் படிகாரம் வெங்காரம் முதலானவைகளைச்
சேர்த்து இட்டுக்கொண்டால், புண் சீக்கிரம் ஆறிவிடுமென்
பதை உத்தேசித்து, அந்தப்பிரகாரம் இட்டுக்கொள்ளும்
படி நாதமுனிகள் ஏற்பாடு செய்தார். அதுதான் சிவப்பு
ஸ்ரீசூர்ணத்தின் தத்வம்.

பெருமாளுடைய ஸர்ப்பகதியை (திருக்கைத்தல ஸேவை
யென்றமதை) ஸேவிக்காமல் இழப்பதைக்காட்டிலும் உயி
ரை மாய்த்துக்கொள்வது மேல் என்று நினைக்கும்படியாயி
ருக்குமென்று 'திருமொழி' வ்யாக்யான ஆரம்பத்தில்சொல்
லப்படுகிறது. இதனுல், இந்தக்கைத்தல ஸேவையை ஒவ்வொ
ருவரும் ஸேவித்து அதன் தத்வத்தை அறிந்துகொள்ள
வேணுமென்று ஏற்படுகிறது. அதை நடத்தி, அதன் தத்
வத்தைக் காட்டிக் கொடுக்கும் கைங்கர்யம் உத்தம நம்பி
களுக்கு ஏற்பட்டது. ராமானுசர் காலத்தில், இந்த கைத்
தல ஸேவையின் தத்வத்தை மதித்து அனுஷ்டித்தால்,
அனுஷ்டிப்பவரின் சிரசில் பகவான் ப்ரகாசிப்பான் என்ப
தைக் காட்டிக் கொடுக்க, முதலியாண்டான் ஸந்நிதி வாச
லில் நின்றுகொண்டு, கைத்தல ஸேவையை ஸேவிக்க வேண்

டியதென்றும் "என் சென்னித் திடரில் பாத இலச்சினை வைத்தார்" என்றபடி அவருக்கு பெருமாளுடைய சடாரியைத் தலையில் ஸாதிக்க வேண்டுமென்றும் ஏற்பாடாயிற்று. துலுக்கர்படையெடுப்பில், முதலியாண்டான் வம்சத்தவர்கள் தேசாந்திரம் போய்விட்டபடியால், அவர்கள் வரும்வரையில் அவர்களுக்குப் பதிலாகத் தாம் அந்த சடாரியைப் பெற்று வருவதாய் வேதார்ய பட்டரென்பவர், விஜயநகர ராஜாவின் மனுஷ்யனான கோபணதிம்ம மஹாராஜாவுக்கும், உத்தம நம்பிகளுக்கும் சகாப்தம் ஆயிரத்து முந்நூற்று நாற்பத்தொருமேல் விகாரி வருஷத்தில் ஒரு உடன்படிக்கை யெழுதிக்கொடுத்துவிட்டு மேலே சொன்ன 'சமய' வரிசையைப் பெற்றவரா ஆரம்பித்தாரென்று கோயிலொழுகில் சொல்லப்படுகிறது.

நாடக ரூபமாக நடத்திக் காட்டப்பட்ட இந்த உத்ஸவம், மேலே கண்ட தத்வங்களைப் போதிக்கிறது.

57. மோஹினி அலங்காரம்

ரங்கநாதன், தன்னை ஸேவிக்க வந்தவர்களை "மம மாயா துரத்யயா" என்னுடைய மாயையைக் கடக்கமுடியாதென்று சொன்னேன். அவையாவன: மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை. இம்மூன்றிலும், பெண்ணாசையை ஒழிப்பது கஷ்டம். ஏனெனில், ஒரு ஜீவன் சரீரமெடுக்க ஆரம்பித்த காலம்முதல் அந்தப் பெண்ணாசை இருந்து வருகிறது. நான் பூண்டிருக்கும் மோஹினி வேஷத்தில் மயங்கினதினால் அசுரர்கள் அமிர்தத்தையடைவதை இழந்தார்கள். ஆனபடியால் நீங்களும் பெண்ணாசையில் மயங்காமல் "பரம் த்ருஷ்ட்வா நிவர்த்ததே" என்றும், "மாற்பால் மனம் சுழிக்க மங்கையர்தம் தோள்விட்டு" என்றும் சொல்லுகிறபடி நாளையதினம் (ஏகாதசியன்று) நான் காட்டிக்கொடுக்கும் மார்க்கத்தைக் கண்டுரைத்து அனுஷ்டித்தால் எல்லாவிதமான மாயையின்றும் விடுபட்டு, எனது வைகுந்த நாட்டை அடைவீர்களென்று உபதேசிப்பதாம்.

58. இராப்பத்து என்னும் திருவாய் மொழித்திருநாள்

இந்த உத்ஸவம் மார்கழி மாதம் சுக்லபக்ஷ ஏகாதசியிலிருந்து நடக்கும் பத்துநாள் உத்ஸவம். இந்த உத்ஸவத்

தில் ரங்கநாதன் ஆயிரக்கால் மண்டபத்தின் மத்தியிலுள்ளதும், வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டதுமான 'திருமாமணி மண்டபம்' என்று அழைக்கப்படுவதுமான மண்டபத்துக்குச் சென்று அதில் வீற்றிருப்பார். பரமபதத்தில் பகவான் எழுந்தருளியிருக்கும் திருமாமணி மண்டபத்தின்படி இந்தமண்டபம் கட்டப்பட்டிருப்பதால் அதே பெயர் இதற்கும் ஏற்பட்டது. இந்தத்திருநாளில் நடக்கவேண்டிய முக்கியமான காரியமாகிற அரையர்ஸேவை ஆதியில் ராத்திரி நடத்தப்பட்டபடியாலும், நம்மாழ்வார் அருளிச்செய்த 'திருவாய்மொழி' அரையரால் பெருமாள் முன்பாக கானம் செய்யப்படுவதாலும், இந்த உத்ஸவத்துக்கு 'இராப்பத்து' அல்லது திருவாய்மொழித் திருநாள் என்னும் பெயர் ஏற்பட்டது. தவிர, வைகுண்டத்திற்குச் செல்லும் அர்ச்சிராதி மார்க்கத்தைப்பற்றியே பேசும் திருவாய்மொழியின் ஒரு பாகமாகிய "சூழ்விசும்பணிமுகில்" என்னும் பத்து பாசுரங்களின் தாத்பர்யத்தை இந்தத் திருநாளில் நாடகம்போல் நடத்திக் காட்டப்படுகிறது. பரமபதத்திற்குச் செல்லும் முமுக்ஷுவாய் ரங்கநாதனே நடிக்கிறார்.

கர்ப்பக்ருஹத்திலிருந்து பெருமாள் புறப்படுமுன் ஆரியபடாள் வாசல், நாழிகை கேட்டான் வாசல் முதலானவை மூடப்படும். "அறிவென்னும் தாள் கொளுவி ஐம்புலனும் தம்மில் செறிவென்னும் திண்கதவம் செம்மி - மறையென்னும் நன்கோதி நன்குணர்வார் காண்பரே நாள்தோறும் பைங்கோத வண்ணனடி" என்ற பாசுரத்தின்படி இந்தக் கதவுகள் மூடப்படுவது, பகவானை சிந்தித்து அவனுடைய தரிசனத்தைப் பெற இச்சிக்கும் முமுக்ஷு தன் இந்திரியங்களால் இழுக்கப்பட்டு கண், காது, மூக்கு துவாரங்களின் வழியாய் வெளிச் செல்வதைத் தடுக்க முதலில் அவைகளை மூடவேணுமென்பதைக் குறிப்பிடுகிறது.

பெருமாள் புறப்படுவதற்கு முன் கர்ப்பக்ருஹத்தில் வேத பாராயணமும், திருவாய் மொழியும் தொடங்கப்படுகின்றன. அதன்பின் ரத்ன அங்கி சாத்திக்கொண்டு பெருமாள் புறப்படுவார். அப்போது ஸந்நிதி வாசல் திறக்கப்படும். அது ஸுஷும்னையிலுள்ள ப்ரும்ம ரந்த்ரத்தைப் போதிப்பதாகும். ஸந்நிதிக்கு வெளியில் வந்து ஸிம்மகதி-[illegible] நடை ஆனபிறகு மேலப்படிக்குக் கீழே நிற்கும்

உத்தமநம்பி, ஸ்தானீகரால் வினயத்துடன் கையால்சமிக்ஞை செய்து அழைக்கப்படுவார். அவர் பெருமாள் பக்கத்தில் சென்றதும், அவருக்கு பட்டு தொங்கு பரிவட்டம் கட்டி, பெருமாளுடைய பட்டியிருக்கு உதிர்ந்துபோன ஒரு சிறிய தண்டு அவர் தலையில் வைக்கப்படும். இதன் பொருள், மேலே நடக்கும் நாடக ரூபமான உத்ஸவத்தை நடத்தி வைக்க பொறுப்பாளியாக (ஸூத்ரதாரராக) உத்தமநம்பி நியமிக்கப்பட்டிருக்கிறாரென்பதைக் குறிக்கிறது. "உன் வையம்தாவிய மலரடிக்கீழ் முந்திவந்து-யான் நிற்க முகப்பே கூவிப் பணி கொள்வாய்" என்னும் நம்மாழ்வார் பாசுரம் நடத்திக் காட்டப்படுகிறது.

அதன் பின், குறட்டு மணியக்காரருக்கும், அவருக்குப் பின் கந்தாடை ராமானுஜய்யங்காருக்கும் தலையில் பட்டுத் தண்டு மட்டும் இடப்படும். அவர்கள், உத்தமநம்பிக்கு ஸஹாய பூதர்களாய் நியமிக்கப்பட்டிருப்பதாகிறது.

மேலப்படி வழியாய் பெருமாள் கீழே இறங்கியவுடன் வழக்கம்போல் படி ஸாதித்த பிறகு அங்கு நின்றுகொண்டிருக்கும் எட்டு பேர் தலையிலும் பட்டுத் தண்டுகள் வைக்கப்பட்டு 'திருவரங்கம் கூட்டத்தார்' என்று அருளிப்பாடு ஸாதிக்கப்படும். அவர்கள் திருக்கார்த்திகை தினம் ப்ரதான விளக்கு சேர்க்கையாக மற்ற எட்டு விளக்குகளையும் எடுத்துச் சென்றவர்கள். அவர்கள், பெருமாளுக்கு முன், பின்னைப் பெருமாளையங்கார் ரங்கநாதன் விஷயமாய் பாடியுள்ள பாசுரங்களைச் சொல்லிக்கொண்டு போவார்கள். பகவான் திருவடியில் தனது ஆத்மாவை ஸமர்ப்பிக்கும்போது முமுக்ஷு "ஓம் இத்யாத்மாநம் யுஞ்ஜீத" என்கிறபடி ஓங்காரத்தை உச்சரிக்க வேணுமென்று குறிப்பிடுகிறது. மேலேசொன்னவர்கள் பரமபத வாசலுக்குச்சமீபத்திலுள்ள துரை மண்டபம் வரையில் அந்தப் பாசுரங்களைச் சொல்லி முடிப்பார்கள். பெருமாள், அவ்விடத்திலிருந்து நாலடி சென்றவுடன் தங்கக் கடிகளைப் பிடித்துக்கொண்டு வரும் சாத்தாத வைஷ்ணவர்கள் "எழுமினென்று இருமருங்கிசைத்தனர் முனிவர்கள் வழியிது வைகுந்தத்திற்கென்று வந்தெதிரே" என முந்தன் பரமபதத்துக்கு அழைத்துச் செல்லும் ஆதிவாஹிகர்களாக நடிக்க நியமிக்கப்பட்டிருப்பதைக் குறிக்க அவர்கள் தலையிலும் பட்டுத் தண்டுகள் வைக்கப்

படும். பிறகு பெருமாள் யாகசாலை மூலைக்குச் சென்று கிழக்கே திரும்பி கொஞ்ச தூரம் சென்றதும் 'திருப்பணி செய்வார்' ஒரு பாத்திரத்தில் தீர்த்தத்தை கொண்டு வந்து பெருமான் முன் சேர்ப்பார். இது பரமபதத்துக்குச் செல்லும் முக்தனை ஆசனத்திலிருத்தி மேலுலகங்களிலுள்ளவர்கள் திருவடி விளக்குகிறார்கள் என்பதைக் குறிப்பிடுகிறது. நம்மாழ்வார் இதைப்பற்றி "பதியினில் பாங்கினில் பாதங்களைக் கழுவினர்" என்று உரைத்தார். பிறகு, பெருமாள் சேனை முதலியாருக்கு மாலை சாதித்துவிட்டு, தெற்கு முகமாய் அழகிய மணவாளன் திருமண்டபத்திற்கும், கிளி மண்டபத்திற்கும் மத்தியிலுள்ள பத்தியில் ஒய்யார நடையுடன் சென்று நாழிகை கேட்டான் வாசலுக்கு முன் நின்றவுடன், அந்த வாசல் கதவுகளை திறக்கும்படி ஆக்ஞாபிக்கப்பட்டு. அவை திறக்கப்படும். இந்த வாசல் திறந்ததால் ஸம்ஹிதையிலுள்ள 'விஷ்ணு க்ராந்தி' என்னும் தான்கள் திறக்கப்படுவதாகிறது.

அதன்பின், பெருமாள் பரமபத வாசலுக்கு எதிரில் சென்று, வடக்கு முகமாய் நின்று, அந்த வாசல் கதவுகளை திறக்கும்படி நியமித்தவுடன், அவை திறக்கப்படும். இதனால் ஆக்ஞா சக்ரத்திலுள்ள 'ருக்ராந்தி' போதிக்கப் பட்டது குறிப்பிடப்படுகிறது. இந்த வாசலுக்கு கிழக்குப் பக்கத்தில் 'விரஜா' நதியின் ஸ்தானத்தில் ஒரு கிணறு இருக்கிறது. இங்கிருந்து நாலுகால் மண்டபத்தில் வேத விண்ணப்பமாகி பெருமாள் இந்த வாசலுக்குப் போனவுடன், அதுவரையில் சாத்திக் கொண்டு வரும் போர்வை களையப் பட்டு, புது மாலைகள் ஸமர்ப்பிக்கப்படும். பரமபதத்திற்கு பக்கத்திலுள்ள 'விரஜா' நதியை அடைந்து அதில் ஸ்நானம் பண்ணும் முக்தனுக்கு பழைய சரீரம் போய் "பஞ்சோப நிஷன்மயமான வேறு சரீரமும் சதுர்புஜ, சங்க, சக்ராதிகளும் ஏற்படுகின்றன" என்னும் தத்வம் இங்கு காட்டப்படுகிறது. ஏகாதசி தினம் ரத்ன அங்கியோடு பெருமாள் பரமபத வாசல் நுழைந்து செல்வதால் விரஜா நதியில் தீர்த்தமாடின முக்தன் பரிசுத்தமான சுத்த ஸத்வமய சரீரத்தைப் பெற்று அதனால் ஏற்படும் விசேஷ காந்தியோடு "ஒளிக்கொண்ட சோதியாய் உடன் கூடுவது என்று கொலோ" என்று ஆழ்வார் அருளியபடி விரஜைக்கு அப்புறமுள்ள முக்தர்

களோடு கூடுவது காட்டப்படுகிறது. ஆதி காலத்தில் பரமபத வாசலுக்கு வெளியில் ஆழ்வார்கள் நின்று கொண்டிருந்ததாய் சொல்லப்படுகிறது. ஸ்ரீ வில்லிபுத்தூர் முதலான திவ்ய தேசங்களில் காணக்கும் ஆழ்வார்கள் பரமபத வாசலுக்கு வெளியில் நிற்பதைக் காணலாம். "காளங்கள் வலம்புரி கலந்து எங்கும் இசைத்தனர்" என்றபடி பரமபத வாசல் திறந்த பின் எக்காளை முதலானவைகள் ஊதப்படுகின்றன. பெருமான் எழுந்தருளும்போது மத்தியில் உபயங்களில் நின்று அமுது செய்து வருகிறது. "எதிரெதிர் இமையவர் இருப்பிடம் வகுத்தனர்" என்பதின் பொருளை காட்டிக் கொடுக்கிறது. கடை கொட்டகையில் நம்மாழ்வார், திருமங்கை மன்னன், உடையவர் ஸ்ரீரங்கராஜஸ்தவம் சொல்லும் கோஷ்டியோடு பெருமானை எதிர்கொண்டழைத்தல் "குடியடியார் இவர் கோவிந்தன் தனக்கென்று முடியுடை வானவர் முறை முறை எதிர்கொள்ள" என்றபடி பரமபதத்திலுள்ளவர்கள் பக்தனை எதிர்கொண்டழைத்து ஸத்காரம் செய்வதைக் குறிப்பிடுகிறது "கொடியணி நெடு மதிள் கோபுரம் குறுகினர் வடிவுடை மாதவன் வைகுந்தம் புகவே" என்பதின் பொருள் பெருமான் கொட்டாரை வாசல் நுழைவதால் நிரூபிக்கப்படுகிறது. கொட்டகை பரமபதத்திலுள்ள திவ்யப்ராகாரத்தின்" ஸ்தானத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது அதில் பெருமான் ஆழ்வார்களுக்கு மரியாதை பண்ணிவிட்டு பக்தியுலாவி ஆயிரக்கால் மண்டபத்திற்கு வந்து படியேற்ற மாலை (அதில் எதிர் செல்லும்போது தானை நம்பிகள் எதிரில் வருவதால் "கதிர வரவரவர் கைந்நிரை காட்டினர்" என்கிறபடி தேஜோவிஷ்டர்களான பரமபத வாசிகள் அவ்விடம் வந்த முக்தனை ஸத்கரித்து அங்குள்ள விசேஷங்களைக் காட்டுகிறார்களென்று அறிவிக்கப்படுகிறது. பெருமான் திருமாமணி மண்டபத்திற்கு பக்கத்தில் சென்று கடதீபாராதனை யாகும்போது தாசிகள் தட்டிகளுடன் நிற்பதால் "நிறைகுட விளக்கமும் மதிமுக மடந்தையர் ஏந்தினர் வந்தே" என்பதைக் காட்டப்படுகிறது. பிறகு பெருமான் மண்டபத்தில் எழுந்தருளியிருக்கும்போது அவர் எதிரில் ஆழ்வார்கள் வீற்றிருப்பது "மாமணி மண்டபத்து அந்தமில் பேரின்பத்து அடியரோடு இருந்தமை" என்கிறபடி முக்தன் பரமபதத்திலுள்ள திருமாமணி மண்டபத்தை அடைந்து அங்குள்ள நித்ய முக்தர் மத்தியில் ஆனந்த பரிதராயிருப்பதைக் காட்டுகிறது.

பிறகு பெருமாள் முன் நாளுக்கு ஒருபத்தாக பத்து நாளும் திருவாய்மொழி ஸேவிக்கப்படும். நிவேதனம் முதலானது நடக்க பிறகு பெருமாள் ஸந்நிதிக்குள் செல்ல புறப்படுவார். பனிக்காக போர்வை சாத்திக்கொண்டு விளாமிச்சிவேர் சப்ரத்தில் எழுந்தருளுவார். கொட்டகையில் "மல்லாரி" என்னும் வாத்திய கோஷத்துடன் ஒய்யார நடை போடுவார். அப்பொழுது பலவித வாத்யங்கள் வாசிக்கப் படும். அந்த வாத்யங்களில் கடைசியாக வாசிக்கப்படுவது 'வீணை'. இந்த வாத்தியத்துடன் நாழிகேட்டான் வாசலிலிருந்து ஸந்நிதிக்கு செல்லுவார்.

59. இராப்பத்து 7ந் திருநாள்-திருக்கைத்தல ஸேவை

பெருமாள் திருமாமணி மண்டபத்திற்கு சென்றதும், இந்த கைத்தல ஸேவை நடக்கிறது. "கங்குலும் பகலும்" என்கிற பத்துப் பாசுரங்களையும் பகவான் மனதுருகும்படி பாடி தனக்கு தரிசனம் கொடுக்க வேணுமென்று பிரார்த்தித்த நம்மாழ்வாருக்கு பெருமாள் ஸேவை கொடுத்ததைக் காட்ட, அர்ச்சகர்கள் பெருமாளைத் தங்கள் கையில் எழுந்தருளப் பண்ணிக் கொண்டு வந்து சில நிமிஷ காலம் நிற்பார்கள். அப்பொழுது ஆயிரக்கால் மண்டபத்தில் 'நாயகி' பாவத்தில் நாச்சியார் திருக்கோலத்துடன் நிற்கும் நம்மாழ்வார் முன் அரையர்கள் நின்று கொண்டு மேற்சொல்லிய பத்து பாசுரங்களையும் ஸேவிப்பார்கள் பிறகு பெருமாள் மண்டபத்திற்கு எழுந்தருளப்பண்ணப்படுவார்.

60. வேடுபறி உத்ஸவம்

இந்த உத்ஸவம் இராப்பத்து எட்டாந்திருநாள் நடக்கிறது. இன்றையதினம் பெருமாள் குதிரை வாகனத்தில் புறப்பட்டு ஆரியப்படாள் வாசல் வழியாக வந்து தகிட்டை வாசலுக்கு முன்புள்ள வெளியில் வையாளி போடுவார். அந்த வையாளி 'தாரகதி' எனப்படும். பிறகு, திருமங்கை ஆழ்வார் வந்து பெருமாளை வழி மறித்து திருடிக்கொண்டு போனது முதலானவை காட்டப்படும். பெருமாளால் உபதேசிக்கப்பட்ட அஷ்டாக்ஷர மந்திரத்தின் மகிமையால் திருமங்கை மன்னன் பெரிய பகவத் பக்தனாக திருந்தினது ஜனங்களுக்கு காட்டிக்கொடுக்கப்படுகிறது.

பெருமாள் அனுக்ரஹத்தால் ஞானம் உண்டான ஆழ்வாரும் "வாடினேன் வாடி" என்ற பாசுரத்தை ஸேவிக்க, பெருமாளும் கேட்டுகொண்டு ஆயிரக்கால் மண்டபம் எழுந்தருளுகிறார். இதற்கும் இராப்பத்து உத்ஸவத்திற்கும் சம்பந்தமில்லை.

61. ஆழ்வார் மோக்ஷம்

இராப்பத்தின் கடைசி நாளில் நம்மாழ்வார் எப்படி மோக்ஷத்தை அடைந்தார் என்பதைக் காட்டிக் கொடுக்கப்படுகிறது. இன்றைய தினம் நம்மாழ்வார் பரமபதத்துக்கு செல்லும் ஒரு முக்தன் வேஷத்திலிருப்பார். கிரீடம் முதலான திருவாபரணங்கள் இல்லாமலும் பட்டு பீதாம்பரமுமில்லாமல் வெள்ளையுடுத்து பன்னிருநாமமும் துளசி மாலையும் தரித்து ஸேவை ஸாதிப்பார். பெருமாள் வழக்கம் போல் புறப்பட்டு வந்து சந்திரபுஷ்கரணியில் தீர்த்தம் ஸாதித்து தீர்த்தவாரி நடத்தி மண்டபம் சேர்ந்து திருவந்திக்காப்பாகி, உபாத்தியாயருக்கு ஸேவை ஸாதித்து, வழியில் வந்து தண்டம் ஸமர்ப்பிக்கும்பட்டரை "நம்பட்டரை வீட்டில் விட்டுவா" என்ற வேத விண்ணப்பத்துக்காக அனுக்ரஹித்து, திருமஞ்சனம் கண்டருளின பின், பன்னீராயிரம் திருப்பணியாரங்கள் அமுது செய்விக்கப்படும். பெருமாள் ஒரு வருஷத்தில் அமுது செய்ய பணியாரங்களில் ஏற்படும் குறைவுகளுக்கு ஈடுபடுத்தி சரிகட்ட இந்தப் பன்னீராயிரம் திருப்பணியாரமும் நிவேதனம் செய்யப்படுகிறது. பிறகு சத்ரசாமராதிகளுடன் நம்மாழ்வாரை, அர்ச்சகர்கள் கையில் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு போகும் போது "சூழ் விசும்பணிமுகில்" என்னும் பத்து பாசுரமும் ஸேவிக்கப்படும். ஆழ்வார் பெருமாள் திருவடியில் ஸமர்ப்பிக்கப்படுவார். அனசியால் ஆழ்வாரை மறைக்கும் போது "முனியே, நான்முகனே" என்ற பத்துப் பாசுரங்களும் அரையரால் கானம் செய்யப்படும். நம்மாழ்வாரை பெருமாள் திருவடியில் சேர்ப்பதினால் "நாடாத மலர் நாடி நாள்தோறும் நாரணன் தன் வாடாத மலரடிக்கீழ் வைக்கவே" என்பதின் தாத்பர்யத்தையும், அனசியால் மூடுவதால் "கேசஞ்செய்து உன்னோடு என்னை உயிர் வேறின்றி ஒன்றாக்கவே கொண்டாய்" என்கிறபடி பரிபூர்ணனான பகவான் தன்னுள்ளேயாம்படி ஸாயுஜ்ய போகத்தை அளித்ததையும் எல்லோரும் அறியும்படி நடத்திக்காட்டப்

பட்டது. இதுவே 'உள் கலத்தல்' அல்லது 'மெய் கலத்தல்' என்று சொல்லப்படுகிறது. சில வாக்யமும் "அவனும் நானும் மெய் கலந்தனுபவிக்க வளவிலே அவனுமுண்டு நானுமில்லை யாருமில்லை யானதே" என்று பேசியுள்ளார்.

மேலே சொன்னபடி ஆழ்வார் திருவடி தொழுத பிறகு பெருமாள் நம்மாழ்வாருக்கு தமது மாலை, கஸ்தூரி திருமண் காப்புகளை அளிப்பார். இதனால் பரமபதத்துக்குச் சென்ற முக்தனுக்கு பகவான் அருள் புரிவது காட்டப்படுகிறது. பெருமாள் ஸிம்ஹாஸனத்திலிருந்து அர்ச்சகர்கள் கைத்தலத்தில் ஆழ்வார் சத்ரசாமராதிகளுடன் பந்தம் வாத்ய கோஷங்களுடன் புறப்பட்டுத் தமது இருப்பிடம் சேருவார். அப்பொழுது அரையர் "கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்னும் பாசுரத்தை கானம் செய்வார்.

பெருமாள் மண்டபத்திலிருந்து புறப்பட்டு வந்து கொட்டகையிலுள்ள நாலுகால் மண்டபத்தில் நின்று கொண்டு ஆழ்வார்களுக்கு மரியாதை செய்து அனுப்பி விட்டு திருத்தாழ்வாரை தாஸரால் சொல்லப்படும் "படிப்பு" என்னும் ஸ்ரீரங்கநாதன் திருப்பாற் கடலிலிருந்து ஸ்ரீரங்கம் வந்து சேர்ந்த விருத்தாந்தத்தை எல்லோரும் கேட்டு அனுபவிக்கும்படி செய்துவிட்டு, கொட்டகை எழுந்தருளி ஸ்தானிகர் [illegible] என்று பிரார்த்திக்க பெருமாளும் ஸேவாபலம் தீர்த்த பலம் அனுக்ரஹித்து 'மேலே திருக்கல்யாண உத்ஸவத்தை நன்றாய் நடத்திவை' என ஆஜ்ஞாபிக்க, மேற்படி ஆஜ்ஞையை மணியக்காரர் ஸ்ரவணித்து, மங்களவாத்திய கோஷங்கள் முழங்க, பெருமாள் கொஞ்ச தூரம் போய் 'நம் பாடுவானை வீட்டில் விட்டுவா" என்று ஆஜ்ஞாபித்துவிட்டு, மூலஸ்தானம் போய் சேருவார். பட்டர், அரையர், ப்ரம்மரதங்கள் நடைபெற்று இராப்பத்து உத்ஸவம் முடிவடைகிறது.

62. இயல்பா

வைகுண்ட ஏகாதசி உத்ஸவத்தின் கடைசி நாளில் அரையரால் பெருமாள் முன் கானம் செய்யப்படாமல் பாக்கியாயிருக்கும், ஆயிரம் பாட்டுகளும் கானம், அபிநயம் வியாக்யானங்கள் இல்லாமல் திருவரங்கத்தமுதனாரால் ஸேவிக்கப்

பட்டு ராமாநுச நூற்றந்தாதியையும் பூர்த்தி செய்து, கடைசியாக குலசேகரன்படி பக்கத்தில் இயல்சாற்று வாழித் திருநாமங்களுடன் சாற்றுமுறை செய்யப்படும். இந்த உத்ஸவத்திற்கு ஆழ்வார்களில் சிலரே வருவார்கள். இத்துடன் வைகுண்ட ஏகாதசி உத்ஸவம் பூர்த்தியடைகிறது.

63. முத்தங்கி ஸேவை

ஏகாதசியன்றைய தினமும், அதையடுத்த சில தினங்களும், முத்தினாலாகிய அங்கியை தரித்திருக்கும் மூலவரை, கர்ப்பக்ருஹத்தில் கண்டு தரிசிப்பதையே 'முத்தங்கிஸேவை' எனச் சொல்லப்படுகிறது.

64. பிரம்மோத்ஸவம்

முதல் அங்குரார்ப்பணம், பிறகு த்வஜாரோஹணம், பிறகு தேவதாஹ்வாநம்-என்ற இந்த வரிசையில் செய்வது மோக்ஷப்ரதம்-மோக்ஷத்தைக் கொடுக்கும்.

த்வஜாரோஹணத்தை முதலிலும் மற்றவைகளைப் பிறகும் செய்யும் உத்ஸவம் ராஜ்ய ப்ரதம் ராஜ்யத்தைக் கொடுக்கும்.

முதலில் தேவதாஹ்வாநத்தைச் செய்த பிறகு மற்றவைகளைச்செய்வது ஸ்வர்க்கப்ரதம் ஸ்வர்க்கத்தைகொடுக்கும். என்று மூன்றுவிதமாக உத்ஸவாரம்பம் சொல்லப்படுகிறது. ஸ்ரீரங்கம் கோயில் மோக்ஷப்ரதமாகையால் இங்கே மோக்ஷம் கிடைக்கும்படியாக முதலில் அங்குரார்ப்பணமும் பிறகு த்வஜாரோஹண தேவதாஹ்வாநங்களும் நடக்கின்றன.

65. அங்குரார்ப்பணம்

இதற்கு திருமுளை என்று தமிழ்ச் சொல். உத்ஸவங்களைத் தொடங்குமுன் இதைச் செய்ய வேண்டும். பாலிகைகளில் சேர்ப்பதற்காக மந்த்ர பூர்வமாக மண் எடுத்து வந்து பாலிகைகளில் வைத்து நவதான்யங்களைப் போட்டு முளைக்கச் செய்து உத்ஸவம் முடிந்தவுடன் தீர்த்தத்தில் சேர்த்து

விட வேண்டியது. தரிசாயுள்ள பூமியை உழவன் திருத்திப் பதம் செய்து விதை தெளித்து நெல் விளையச் செய்வது அதைச் சமைத்து உண்பது போல எம்பெருமான் அஞ்ஞானி யான ஜீவாத்மாவை தன் கைங்கர்யங்களைக் கொடுத்து திருத்தி ஆட்கொள்ளும் முயற்சிகளைக் காட்டுகிறது திருமுளை.

66. யாகசாலை

யாகசாலை என்பது யாகம் செய்யுமிடம். ஸ்தூலயாகம் ஸூக்ஷ்மயாகம் என்று யாகம் இரண்டு விதம். நித்யம் நைமித்திகம் காம்யம் என்ற க்ரியைகள் ஸ்தூலயாகம். வெளிப்படையான க்ரியை யாதுமில்லாமல் ஜ்ஞானமாத்திரத் தால் மானஸிகமாகச் செய்யும் ஜபம் த்யானம் ஸூக்ஷ்மயாகம், ஜ்ஞானயாகம் என்று சொல்லப்படும்.

ஜ்ஞானயாகத்தின் லக்ஷணம்:—“தஸ்யைவம் விதுஷோ யஜ்ஞஸ்யாத்மா யஜமாந:” என்ற சுருதிப்படி மார்பு வேதி யாகவும், ஹ்ருதயம் யூபஸ்தம்பமாகவும், சரீரம் இத்மமாக வும், தபஸ் அக்நியாகவும், கோபம் பசுவாகவும், மயிர் தர்ப்பையாகவும், இந்திரியங்கள் யாக பாத்ரங்களாகவும், ஸர்வ பரித்யாகம் யாவற்றையும் விடுகையே தக்ஷிணையாக வும், ஜீவனே யாகம் செய்யும் யஜமானனாகவும், சிரத்தையே பத்னியாகவும் அமைத்துக்கொண்டு செய்கைதான் ஜ்ஞான யாகம் என்ற ஸூக்ஷ்ம யாகம்.

67. துவஜாரோஹணம்

செங்கோலுடைய அரசனின் சக்ரக்கொடி ஏறினவிடத் தில் முன்னிருந்த கொடுங்கோல் மன்னனுடைய கொடுமை ஒழிந்து குடிகள் க்ஷேமம் அடைவதுபோல், ஸம்ஸாரத்தில் உழலும் ஜீவர்கள் எம்பெருமானைக் குறித்து ஸத்கர்மாக்களைச் செய்து தம்முள் மறைந்துள்ள ஞானக் கொடியேற்றி எம் பெருமானை அடைவதால் மாயாஜாலத்தில் அரசு சக்தியற்று ஒடுங்கிப் பேரானந்தம் பெறுகிறார்கள். ஞானக்கொடி ஏறு வதாவது மூலாதாரம் முதல் ப்ரம்ம ரந்த்ர மீறுகவுள்ள ஆதார சக்ரங்களைக் கடந்து சென்று மேலே போவதையே த்வஜாரோஹணம் காட்டிக்கொடுக்கிறது. ப்ரம்மாக்ஷரத்

தின் வழியாகப் புறப்பட்டு அர்ச்சிராதிமார்க்கமாய் புநராவ்ருத்தி யில்லாத மோக்ஷத்துக்குப் போகும் ஜீவனுக்கும் ஆசாபாச விமோசனம் உண்டாகி மீண்டும் ஜனனமில்லையென்பதைக் காட்டுகிறது த்வஜாரோஹணம்.

68. தேவதாஹ்வாநம்

பிரம்மோத்ஸவம் ஆரம்பிக்கும்போது பிரம்மாதி தேவர்களையும் இந்திரன் முதலான திக்பாலகர்களையும் அழைத்து அந்தந்த இடத்தில் ஆவாஹநம் செய்ய வேண்டியது. இதன் தத்வமாவது-யோகாப்யாஸத்தை ஆரம்பிக்குமவன் தன்னுடைய சிரஸ், புருவமய்யம், வலது கண், வலது காது, வலது கர்ணபார்சுவம், பிடரி, இடதுகர்ணபார்சுவம், இடது காது, இடது கண் இவைகளுக்கு அதிகாரிகளான இந்திரியங்களை விஷயங்களிலே செல்லவொட்டாமல் தடுத்து வசப்படுத்துவதைக் காட்டுகிறது தேவதாஹ்வாநம் மூலமாய் தேவர்களை அழைப்பது.

69. பலிஸாதித்தல்

தசேந்திரியங்கள் வழியாயும் இழுக்கப்படும் மனதை ஒருமுகப்படுத்தி மூலாதாரத்திலுள்ள குண்டலினீ ஸ்தானத்தில் சேர்க்க வேண்டுமென்பதால் பத்து திக்கிலும் பலி ஸாதித்த பிறகு மிஞ்சியுள்ள பலி சாதம் மஹாபலி பீடத்தில் சேர்க்கப்படுகிறது. மஹாபலிபீடம் ரங்க விலாஸத்தில் இருக்கிறது. வீதியில் பலி சாதித்துவந்த பிறகு அந்த பலி பீடத்தில் பிரம்மோத்ஸவத்தில் மட்டும் பலி ஸாதிக்கிறார்கள். மற்றை உத்ஸவங்களில் திருவீதியில் பலி ஸாதிப்பதில்லை; மஹாபலி பீடத்திலும் ஸாதிப்பதில்லை.

70. ஸ்ரீரங்க பிரம்மோத்ஸவங்கள்

ரங்கநாதனுக்கு வருஷத்தில் மூன்று பிரம்மோத்ஸவங்கள் நடக்கின்றன. சித்திரையில் விருப்பன் திருநாள், தையில் பூபதித் திருநாள், பங்குனியில் ஆதிப்ரம்மோத்ஸவம். விஜயநகர ராஜ்யத்தைச் சேர்ந்த பூபதி உடையார் நடத்தி வைத்த உத்ஸவம் தையில் பூபதித் திருநாள் என்று வழங்குகிறது. அதிக ராஜ்யத்திலிருந்த விருப்பன் உடை

யார் ஏற்படுத்தினது விருப்பன் திருநாள். பிரம்மோத்ஸவங்களில் பெருமாள் இரண்டு வேளையும் வாஹநங்களில் திருவீதி எழுந்தருளுவார். 9-ம் நாள் திருத்தேர்; தீர்த்தவாரி.

ஆதிப் பிரம்மோத்ஸவம் என்பது பெருமாள் ஸத்ய லோகத்தில் பிரம்மாவின் ஆராதநத்திலிருக்கையில் பிரம்மா நடத்தி வைத்த உத்ஸவம். இப் பங்குனியில் உத்திரத்தை ப்ரதாநமாக வைத்து நடக்கிறது. தையில் புனர்வஸுவை யும், சித்திரையில் ரேவதியையும் நிமித்தமாக வைத்து அன்று தேரும் தீர்த்தவாரியும் நடக்கிறது.

71. வாஹநங்கள் — ஸூர்யப்ரபை

ஸூர்யப்ரபை "த்யேயஸ்ஸதா ஸவித்ரு மண்டல மத்ய வர்த்தீ" என்கிறபடியே ஸூர்ய மண்டலத்திலிருக்கிறான் ஸ்ரீமந் நாராயணன் உங்களுடைய "புறவிருளை" ஸூர்யன் போக்குகிறான். "அகவிருளை" நான் போக்குகிறேன் என்று காட்டுகிறான் எம்பெருமான் ஸூர்யப்ரபை வாஹனத்தில்.

72. ஹம்ஸம்

ஹம்ஸம் "நீர க்ஷீர விபாகம்" செய்கிறது அதாவது பாலையும் தண்ணீரையும் பிரிக்கிறது. ஹம்ஸம் ஸாராஸார விவேகியாய் அஞ்ஞானமாகிற சேற்றில் அழுந்தாமல் சிறகுகளை விரித்துப் பறப்பதுபோல ஞானியும் விவேகியுமாயிருந்து கர்மஜ்ஞானங்களால் எம்பெருமானை அடையலாம் என்று காட்டுகிறது ஹம்ஸ வாஹனம்.

73. ஸிம்ஹம்

இது எல்லா மிருகங்களையும் தன்னுள் அடக்கி அவற்றுக்கு ராஜாவாயிருப்பது போல ஞானியும் அஹங்காரமாகிற ஆசையையும் இந்திரியங்களையும் அடக்கியாளவல்லவன் என்று காட்டுகிறது.

74. யாளி

இது ஸிம்ஹத்தையும்விட மேற்பட்டது. ஆண்மையும் சக்தி வைராக்யங்களும் உள்ள மிருகம் இது.

75. சந்திரப்ரபை

பகவத் ஸ்வரூபஸாக்ஷாத்காரம் என்கிற ஞானத்துக்கு சந்திரனை உபமானமாகச் சொல்லுவது வழக்கம். "பகவத் ஸ்வரூபஜ்ஞானம்" என்னும் சந்திரன் உதித்தால் ஸ்வாதந்த்ரிய புத்தி ஒழிந்து காமக்ரோதங்கள் நீங்கி விஞ்ஞானம் துலங்கி விவேகம் நிலவும் அக்கர்முக சந்திர மண்டல தர்சனத்தையும் அத்தால் ஏற்படும் ஆனந்தத்தையும் பக்தர் அடைய வேண்டுமென்று சந்திரப்ரபை காட்டிக் கொடுக்கிறது.

76. கருட வாஹநம்

"கருடன் வேதாத்மா" ஸர்வேசுவரன் வேதப்ரதிபாத்யனானபடியால் கருடன் அவனுக்கு வாஹனமாயிற்று.

77. சேஷ வாஹநம்

சேஷம் என்றால் மிச்சம். பிரளயத்தில் எல்லாம் அழிந்த பிறகுகூட அழியாமல் மிச்சமாயிருப்பான் "ஆதிசேஷன்". மிச்சமான அந்த வஸ்துவும் ஈசுவரனுக்கு சேஷபாரதந்த்ரம். "உத்திரமாம்புற்றகத்து குண்டலிப்பலம் பொன்பாட்டும் சிக்கனே என் கண்ணால் தெரிசிப்பது தென்னுளோ!" என்று தாயுமானவர் பாடினபடி ஸர்ப்பமுள்ள குண்டலினியை ஆட்டி வைப்பவன் நானே என்று எம்பெருமான் சேஷவாஹனத்திலிருந்து காட்டிக் கொடுக்கிறான்.

78. ஹநுமத் வாஹநம்

ஹநுமான் ராமபக்தன். குரங்கு மனதுக்கு உபமானமாகச் சொல்லப்படும். "நின்றவா நில்லா மனதுடையேன்" என்கிற படியே மனது ஸதா ஸஞ்சரித்துக் கொண்டும் சேஷ்டைகளைச் செய்துகொண்டுமிருப்பது. "மந ஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்த மோக்ஷயோ:" என்கிறபடியே

ஸம்ஸார பந்தத்துக்கும் மோக்ஷத்துக்கும் மனஸ்ஸே காரணம்; பாவோ நாந்யத்ர கச்சதி என்று சொன்ன ஹநுமான் போல் நாமும் நம்முடைய மனதை எம்பெருமானிடம் செலுத்தி தைல தாரைபோல் இடையறாமல் தியானம் செய்தால் பகவத் ப்ராப்தி உண்டு என்பதைக் காட்டுகிறது இந்த வாஹநம்.

79. கல்பக விருக்ஷம்

இது தன்னிடம் வந்து யார் எதைக் கேட்டாலும் கொடுக்கவல்லது. கல்பக விருக்ஷத்தைவிட தானே பக்தர்களின் அபேக்ஷிதங்களை அதிகமாகக் கொடுக்க வல்லவன்— என்னும் தத்துவத்தை கல்பக விருக்ஷத்திலிருந்து காட்டுகிறான் எம்பெருமான்.

80 .யானை வாஹநம்

அஹங்காரவிசிஷ்டமான ஸ்தூல தேஹாதிப்ரபஞ்சங்களை குறிக்கிறது யானை. ஞானமாகிற அங்குசத்தினால் அது அடக்கப் பெறும் போது அஹங்காரமமகாரங்கள் ஒழிந்து பகவத்ஜ்ஞானம் பிறந்து பேரின்பம் பெருகுகிறது என்னும் உண்மை யானை வாஹநத்தால் தெரிகிறது.

81. குதிரை வாஹநம்

ஜீவாத்மாக்களின் சரீரத்திலுள்ள சுவாசத்தைக் குறிக்கிறது குதிரை. ப்ரக்ருதியில் பற்றற்று ஒடுங்கி நிற்கும் யோகி வாசியை வசப்படுத்துவதால் அடையும் சிறப்பையும் பலனையும் குதிரை வாஹநம் காட்டுகிறது. யோகியானவன் பிராணவாயுவை மூலாதாரத்திலிருந்து எழுப்பி உச்சிக்கேற்றி அங்கிருந்து ஹ்ருதயம், கண்டம், தாலுமூலம், புருவமய்யம் முதலான இடங்களுக்கும் ஏற்றி அம்ருதபானம் பண்ணும் ஞானவன்மையில் எம்பெருமான் ஸாகேதரூபமான வாசியின் பேரில் விளங்குகிறான்—என்பதைக் காட்டிக் கொடுக்கிறது குதிரை வாஹநம்.

82. ரங்கவிலாஸம் திருவந்திக்காப்பு

பெருமாள் வாஹநத்தில் திருவீதி வலம் வந்து கோயிலுக்குள் வந்தவுடன் ரங்கவிலாஸம் திறந்த வெளியில் கடதீபத்தால் திருவந்திக்காப்பு நடக்கிறது.

"பக்தர்காள்! நீங்கள் இதுவரை என்னை பஹிர்முகமாக அர்ச்சா மூர்த்தியாக சங்க சக்ர பீதாம்பர வநமாலாதி தாரியாக தரிசித்தீர்கள். இனி அந்தர்முகமாக என்னுடைய ஆதியஞ்சோதியுருவை உங்கள் சரீரத்தினுள்ளேயே காணலாம்" என்கிறான் எம்பெருமான். "காரணந்து த்யேய:" என்கிறபடி ஜீவகாரணனை என்னை "சோதியாகி எல்லா உலகும் தொழும் ஆதிமூர்த்தி" என்று ஆழ்வார் பாடினபடி இந்த கடதீபம் எம்பெருமான் "ஜ்யோதி: ஸ்வரூபன்" ஸகல ஜகத்தையும் தன்னுள் அடக்கியிருக்கும் பூர்ணன் என்று காட்டுகிறது. இதையே "உருக்காட்டும் அந்தி விளக்கு" என்றார் நம்மாழ்வாரும் "மன்னு சோதி என்னெஞ்சுள் நிறுத்தினன்" என்றார். "அந்தர் ஜ்யோதிர் க்ருசியதே ரங்கமத்யே" என்று தேசிகனும் பேசினர். இந்த சோதியை உள்ளத்துக் கொள்ளுமவர்களே "ஒளிக்கொண்ட சோதியை உள்ளத்துக்கொள்ளுமவர்கண்டீர் சலிப்பின்றியாண்டு எம்மை சன்ம சன்மாந்திரம் காப்பரே" என்கிறபடி பிறரை ஆட்கொண்டு பிறவி நீங்கச் செய்ய வல்லவராவர்.

83. திருத்தேர்

ரதம் அண்ட தத்வமாயும் பிண்ட தத்வமாயும் அமைக்கப்பட்டுள்ளது. பிண்ட தத்வமாம் போது தேர் ஒரு சரீரமாக பிருகு மஹரிஷியால் வர்ணிக்கப்பட்டது. சரீரமாகிற ரதத்திலேறி ஸம்ஸாரத்தில் ஸஞ்சரிக்கும் ஜீவாத்மா அதினின்றும் தன்னை விடுவித்துக் கொள்ள வேண்டுமானால், தசவாயுவால் உண்டாகும் சரீர சேஷ்டையை ஒழித்து, ஜீவஸ்வரூபத்தை குண்டலினியை நாபிக்கு ஏற்றி லயப்படுத்தி அங்கிருந்து மேலே நோக்கி ஹ்ருதயம் கண்டம் முதலிய வழிகளால் புருவ மப்யத்துக்கும் அங்கிருந்து லலாடமஸ்தகங்களுக்கும் ஏற்றி கடைசியாகத் தேரின் உச்சியில் கருட ஸ்தானத்திலுள்ள பிரம்மாந்திரத்திலேற்றி மோக்ஷ ஸாம்ராஜ்யம் பெறவேண்டுமென்று சாஸ்திரங்கள் சொல்லுகின்றன.

84. தீர்த்தவாரி

இது "அவபிருத ஸ்நாநம்" யாகத்தின் முடிவில் யாக தீக்ஷையிலுள்ளவர்கள் ஸ்நாநம் செய்ய வேண்டிய விதிப்படி

ரங்கநாதனை புஷ்கரிணியிலும் காவேரியிலும் ஸ்நாநம் செய்கிறான். கர்ம பாகமாகிய பஹிர் யாகத்தைச் செய்து அதன் தத்வங்களை உணர்ந்து அந்தர்முகமான ஞான பாகத்தைச் செய்து சரீரத்திலுள்ள அம்ருத மண்டலத்திலிருந்து அம்ருத தாரையைப் பெருக்கிக் கொள்வதாக சந்திர புஷ்கரிணியில் ஸ்நாநம் செய்து காட்டுகிறான் எம்பெருமான்.

85. ஸப்தாவரணம்

யாத்ரோத்ஸவம் என்ற பிரம்மோத்ஸவத்தின் கடைசி நாளில் ரங்கநாதன் ஏழு பிராகாரங்களையும் சுற்றிக் கொண்டு உள்ளே போகிறான்.

ஏழு ஆவரணங்களையுடைய இந்த ப்ரம்மாண்டத்தில் ஒவ்வொரு ஆவரணத்தையும் தாண்டி பரமபதம் போய் ஈசுவரனை அடைய வேண்டும் என்ற தத்வத்தை விளக்குகிறது ஸப்தாவரணம் என்பது.

ஸ்ரீ லக்ஷ்மி பிரிண்டிங் ஒர்க்ஸ், தேர்நிலை, சேலம்.